R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
10a Upper Tooting Road, London SW17 7PG
Telephone: 02087724920
Conveyancing Services:
Residential, Commercial Conveyancing,
Notarial Services:
Notarisation & Legalisation of Documents
Power of Attorneys,
SENTHURAN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor

A Freely Circulated Monthly
# புதினம்
PUTHINAM
APRIL 2019
மலர் 24
இதழ் 4

For all your legal requirements
1. Immigration and Asylum
2. Human Rights Act challenges and European Law
3. Family Law
4. Criminal Law
5. Landlord and Tenants
6. Civil Litigation
7. Public Law
L & L LAW Solicitors
46 High street
Colliers wood
London SW19 2BY.
Tel: 020 8544 9285
Fax: 020 8542 9530
Email:llsolicitors@hotmail.com
Although this is a new firm of solicitors, it is run by experienced legal practitioners of over 25 years standing.

லண்டனில் முதலாவது தமிழர் நகை மாளிகை
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
WESTERN Jewellers
Tooting Branch:
230 Upper Tooting Road,
London Sw17 7EW
Tel : 02087673445
Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road,
Wembley, MiddX HAO 4YA
Tel : 02089030909





THARANI JEWELLERY
அதி குறைந்த வட்டி வீதத்தில்
அடைவு பிடிக்கும் நகை மாளிகை
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ.
Tel: 020 8902 7111, 020 8902 6777

# போர் எச்சரிக்கை

போர் முரசு கொட்ட ஆரம்பித்து விட்டார்கள்! தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முப்பெரும் தலைவர்கள் தாம் யுத்த களத்தில் குதிக்கப்போவதாக பாராளுமன்றத்தில் 'போர் எச்சரிக்கை'களை விடுத்திருக்கிறார்கள்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, கூட்டமைப்பு பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரே 'எச்சரிக்கை'களை ஒருவர்பின் ஒருவராக விடுத்திருக்கிறார்கள்.

"ஐ.நா. தீர்மானத்தைப் புறந்தள்ளினால், விளைவு பாரதூரமானதாக அமையும்" என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மாவையார் சளைத்தவரா என்ன? அவரது 'போர் எச்சரிக்கை': "வடக்கில் புனித பிரதேசங்களை என்ன விலை கொடுத்தேனும் பாதுகாப்போம். எமது நிலங்களை விட்டுக் கொடுக்க மாட்டோம்"

"இலங்கையில் யுத்தக் குற்றங்கள் இடம்பெற்றதாக வழக்குத் தாக்கல் செய்து, நீதி கேட்டுப் போராடுவோம்" என்று கூறுகிறார் சுமந்திரன்

எப்படியோ, ஒரு வருடத்துக்குள் நடக்கப் போகும் அவர்களது போர்க்களமான, தேர்தல் களத்தில் மக்கள் வாக்குகளை 'அள்ளிக்' கொள்வதற்காகவே இந்தப் போர் எச்சரிக்கைகள் விடுக்கப்படுகின்றன என்பதை எப்போதுதான் மக்கள் புரிந்து கொள்ளப் போகின்றார்களோ?

ஜெனிவாவில், தீர்மானங்கள் நிறைவேறி, 'சத்திய வாக்கு' வழங்குவது போன்ற தொடர் ஏமாற்று 'வித்தை'யை சிங்கள அரசுகள் நடாத்திக் கொண்டிருக்க, தமிழ்த்தலைமை அவர்களுக்குத் துணை போவதும், 'போர் முரசு' கொட்டுவதும் வழக்கமாகிவிட்டது!

"கூட்டமைப்பினர் புலி வேஷம் போட்டு ஆடுகிறார்கள்!" என்று பாராளுமன்றத்தில் வீரவன்ஸா கூறியிருக்கிறார்.

விதண்டாவாதம் பேசுவதில் வல்லவர் வீரவன்ஸா. ஆயினும் அவரது 'புலிவேஷம்' கருத்தில் அர்த்தம் இருக்கிறதல்லவா?

தட்டிக் கேட்க ஆளில்லையே!

**அனைவருக்கும் விகாரி தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்**



பழைய வீணைகள் வாங்கப்படும்
பழைய மற்றும் உடைந்த வீணைகள் மற்றும் கர்நாடக இசைக்கருவிகள் நியாயமான விலைக்கு வாங்கப்படும்.
தொடர்பு கொள்ள அணுகுங்கள்
பிரதீபன்: 07944 043698
WE BUY OLDER AND BROKEN VEENAS AND OTHER INDIAN MUSIC INSTRUMENTS FOR REASONABLE PRICE
For further details please contact
Pratheepan: 07944 043698





செல்வராஜா கோல்டு ஹவுஸ்
Tooting Broadway
மே 7, 8 திகதிகளில்
அட்ச திருதியை முன்னிட்டு
நகைகள் அனைத்துமே
நம்ப முடியாத விலை கழிவில்
162 B, MITCHAM ROAD, LONDON SW17 9NJ
TEL: 020 87673795

டயபட்டிஸ் சலன்ஜ்
ஹோமியோபதி மருத்துவம் + உங்கள் ஒத்துழைப்பு
100% கட்டுப்படுத்தலாம்
HOMOEO CARE
30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்
மருத்துவ ஆலோசனைக்கு: 02081441553
Viber: 0044 7833341693 skype: homoeocare
வெப்சைட்: www.homoeocare.com இமெயில்: homoeocare@rediffmail.com





தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448

# Lyca TV

## உலகின் மிகப் பிரமாண்டமான தொலைக்காட்சி நிலையம்

ஒருவருட இணைப்புச் சந்தா
**£89**
15 மாதங்கள்

புதுப்பித்தல்
**£69**
15 மாதங்கள்

SET TOP BOX INCLUDED



60க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்

TENT KOTTA + EROS NOW

1000க்கும் அதிகமான தமிழ்த் திரைப்படங்கள்



4000க்கும் அதிகமான தமிழ் & ஹிந்தித் திரைப்படங்கள்



- OVER 60+ TAMIL CHANNELS
- VIEW TV SHOWS OFFLINE FROM PHONE / TABLET
- HD CHANNELS
- PUSH MEDIA CONTENT ON THE MOBILE DEVICES TO TV
- OVER 5000 MOVIES IN 4K & HD
- UPTO 16+ DEVICES (PHONE / TABLET / PC'S / SMART TV)
- VIEW TV CHANNELS IN MULTIPLE TIME ZONES
- 7 DAYS OF CATCH UP TV ACCROSS ALL CHANNELS

SUBSCRIBING TO LYCATV IS EASY!
CALL OUR 24/7 CUSTOMER SERVICE ON **0207 132 2727**

FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCAMEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCAMEDIA LTD, THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THEREOF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.

www.lycatv.tv

பனங்காட்டான்



# காலத்தை நீடிக்கிறது ஜெனிவா

## காலத்தை இழுத்தடிக்கிறது இலங்கை

ஜெனிவாவில் இலங்கையர்களின் இவ்வருட மார்ச் மாதத் திருவிழா முடிவடைந்துவிட்டது.

நம்பகத்தன்மையையும், பொறுப்புக்கூறலையும் தேவைக்கேற்ப வாலாயம் பண்ணும் உலகநாடுகள், ஜனநாயக விழுமியம் என்னும் பெயரில் வலி சுமக்கும் ஈழத்தமிழ் மக்களின் நெற்றியில் வழக்கம்போல பெரிய நாமம் போட்டு திருவிழாவை நிறைவு செய்துள்ளன.

போர்க்கால குற்றங்களை மறைக்கவும் மனிதகுலத்துக்கு எதிரான செயற்பாடுகளுக்குத் திரையிடவும் தொடர்ந்து முயன்று வரும் இலங்கைக்கு மேலும் இரண்டு வருட கால அவகாசத்தை எந்த நாட்டினதும் எதிர்ப்பின்றி ஏகமனதாக ஜெனிவா நிறைவேற்றியுள்ளது.

ஜெனிவாவின் நாற்பதாவது கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு சில நாட்களுக்கு முன்னரே எடுக்கப்பட்ட இந்த முடிவு பிரேரணை மூலம் அதிகாரபூர்வமாக நிறைவு கண்டுள்ளது.

இலங்கையின் ஆறு தமிழ்க் கட்சிகள் எழுத்து மூலம் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக்கூடாதெனக் கேட்க, தமிழ் மக்களின் தலைமை என்று தம்மை அழைக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பூரண ஆசிர்வாதத்துடன் இரண்டு வருட கால நீடிப்பை இலங்கை பெற்றுள்ளது.

ஜெனிவா விவகாரத்தில் மைத்திரி அணி, மகிந்த அணி, ரணில் அணி என மூன்றும் முரண்பட்டுக் கொண்டிருப்பதாக ஊடகங்கள் கூறிக்கொண்டிருக்க, இலங்கைக்கு அனுசரணையாக ஜெனிவாவில் புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

முற்றுமுழுதாக கடைந்தெடுத்த பொய்யையும் புரட்டையும் ஜெனிவா அமர்வில் எடுத்துக்கூறியவர் ரணிலின் நம்பிக்கைக்குரிய குழுவுக்குத் தலைமை தாங்கிய வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன. ஐக்கிய தேசிய கட்சியில் எப்போதும் தேசியப் பட்டியல் வழியாக பின்கதவால் அமைச்சர் பதவியைப் பெற்று வருபவர் இவர்.

பொறுப்புக்கூறல் பொறிமுறையை இலங்கை அரசு அமுல்படுத்துவதில் மந்தகதியாக தொழிற்படுவதாக சுட்டிக்காட்டிய ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சல் பச்சலற், ஜெனிவாவில் 2015ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை இலங்கை நேர்மையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

அடிப்படைத் தீர்மானங்களில் ஒன்றான சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிப் பொறிமுறை கட்டாயம் என்பதையும் ஆணையாளர் சுட்டத்தவறவில்லை.

இதற்குப் பதிலளித்த திலக் மாரப்பன கலப்பு நீதிப் பொறிமுறைக்கு ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாதென நேரடியாகத் தெரிவித்தார். இதற்கு இவர் எடுத்துக்கூறிய காரணம் அரசியல் பாதையில் சிறுபிள்ளைத்தனமானது.

சர்வதேச நீதிபதிகளை ஏற்பதாயின் இலங்கையின் அரசமைப்பில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டுமெனவும், அதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை நாடாளுமன்றத்தில் வேண்டுமெனவும், அத்துடன் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் இது வெற்றிபெற வேண்டுமெனவும் மாரப்பன தெரிவித்தது விசித்திரமான பொய்யுரை.

2015இல் அமெரிக்கா சமர்ப்பித்த ஜெனிவா பிரேரணையில் கலப்பு நீதி விசாரணைப் பொறிமுறை அழுத்தம் திருத்தமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அப்பிரேரணையின் இணை அனுசரணையாளராக இலங்கை அரசு செயற்பட்டதை திலக் மாரப்பன மறந்திருக்க முடியாது.

**குற்றம் புரிந்த அரசாங்கத்தின் உள்ளக நீதி விசாரணைக் கட்டமைப்பின் மீது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேர்மையான நீதி நிவாரணம் கிடைக்குமா என்ற சந்தேகமே 2015ஆம் ஆண்டு தீர்மானத்தில் கலப்பு நீதிப் பொறிமுறையை வலியுறுத்தியது என்பதைத் தெரிந்தும் இப்போது அதனை மறுத்துரைப்பது நீதி விசாரணைக்கு இலங்கையில் இடமில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது.**

அவ்வேளையில் மைத்திரி - ரணில் அரசின் சட்டம் மற்றும் ஒழுங்குக்குப் பொறுப்பான அமைச்சராக பதவி வகித்த இவர், அப்போது கலப்பு நீதிப் பொறிமுறை அரசியலமைப்புக்கு முரணானதென மறந்தும் வாய்திறக்கவில்லை. நான்காண்டு கடந்த பின்னர் இப்போதுதான் இது தெரிய வருகிறதா?

அரசியலில் கால் வைப்பதற்கு முன்னர் அரசாங்க தரப்பு சட்டத்தரணியாகவும் பின்னர் சொலிஸிட்டர் ஜெனரல், அட்டர்னி ஜெனரல் ஆகிய பொறுப்பு வாய்ந்த நீதித்துறை உயர்பதவிகளை வகித்தவருமான மாரப்பன, இப்போது நேர்மையான நீதி விசாரணைக்கென தீர்மானிக்கப்பட்ட கலப்பு விசாரணை நீதிப்பொறிமுறையை, அதுவும் - காலநீடிப்புப் பெறும் வேளையில் மறுத்துரைப்பது இவரதும் இவர் சார்ந்த அரசினதும் நேர்மையின்மையை எடுத்துக்காட்டுகிறது.

மகிந்த அரசாங்கத்தில் 2011ஆம் ஆண்டில் பாதுகாப்பு அமைச்சராகவும் திலக் மாரப்பன இருந்தது கவனிக்கப்பட வேண்டியது.

குற்றம் புரிந்த அரசாங்கத்தின் உள்ளக நீதி விசாரணைக் கட்டமைப்பின் மீது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேர்மையான நீதி நிவாரணம் கிடைக்குமா என்ற சந்தேகமே 2015ஆம் ஆண்டு தீர்மானத்தில் கலப்பு நீதிப் பொறிமுறையை வலியுறுத்தியது என்பதைத் தெரிந்தும் இப்போது அதனை மறுத்துரைப்பது நீதி விசாரணைக்கு இலங்கையில் இடமில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது.



மனித உரிமைகள் ஆணையாளர் தமதுரையில் முக்கியமாகச் சுட்டிக்காட்டிய சில:

- வன்முறைகளுடன் சம்பந்தப்பட்டவர்களை தண்டனையிலிருந்து தப்ப வைப்பது சிறுபான்மை மக்களின் எதிர்கால பாதிப்புக்கு இடமளிப்பதாகும்.
- போர்க்குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்களை புதிதாக உயர் பதவிக்கு நியமிப்பது பொருத்தமற்றது. மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை படைத்துறை பிரதானியாக நியமித்தது கவலை தருவது.
- போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக வெளிப்படைத்தன்மையுள்ள விசாரணை அவசியம்.
- இலங்கையில் சித்திரவதைகள் தொடர்கின்றன. ஐ.நா. வின் சித்திரவதைக்கெதிரான பிரகடனத்தை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

இவைகள் எதற்கும் பதிலளிக்காத அல்லது பதிலளிக்க முடியாத நிலையில் இலங்கைக் குழுவின் தலைவரான திலக் மாரப்பன அடுத்தடுத்து பல பொய்களை எடுத்துரைத்தார்.

- காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. (காலவரையற்ற இழுத்தடிப்புக்கான ஓர் அலுவலகம்)
- இழப்பீடு வழங்கும் பணியகம் நிறுவப்பட்டுள்ளது. (ஜெனிவாவில் தெரிவிப்பதற்கென சில மாதங்களுக்கு முன்னர் அவசரம் அவசரமாக அறிவிக்கப்பட்ட ஒரு பணியகம்)
- உண்மை மற்றும் நல்லிணக்க ஆணையாளர் செயற்பாடு இறுதிக்கட்டத்தை அண்மித்துள்ளது. (பெயரளவில் அமைச்சரவைக்கு சில வாரங்களுக்கு முன்னர் இப்பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது)
- பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான வழக்குகளை துரிதமாக விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (பத்தாண்டுகளுக்கு மேலாக சொல்லப்படும் கதை இது)
- பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கிவிட்டு சர்வதேச முறையிலான புதிய சட்டத்தை உருவாக்கும் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (மைத்திரி அரசு பல மாதங்களாக அறிவித்துவரும் ஒரு பம்மாத்து இது)

சில ஊடகங்கள் சில செய்திகளை வெளியிடும்போது இறுதியில் எனத் தெரியவந்துள்ளது, என அறியவந்துள்ளது என்ற வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்துவது வழக்கம். இதன் அர்த்தமானது இச்செய்தி உறுதி செய்யப்படாதது, நம்பகத்தன்மையற்றது என்பதாகும்.

அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்த அனைத்தும் எந்தளவுக்கும் நம்பிக்கையற்றவை என்பதை அவரது வார்த்தைப் பிரயோகங்கள் தெரிவிக்கின்றன.

மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்ட காணாமலாக்கப்பட்டோர் ஆணைக்குழு இப்போது பெயர் மாற்றப்பட்டு, புதிய உறுப்பினர்கள் உள்வாங்கப்பட்டு ஏதோ புதிதாக உருவாக்கப்பட்டது போன்ற தோற்றப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. பழைய பானம் புதிய பாத்திரத்தில் என்பது மட்டுமே.

மறுபுறத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் பெற்றோர் மற்றும் உறவினர்களின் போராட்டம் ஆண்டுக்கணக்கில் நீண்டு செல்கிறது.

எல்லாவற்றுக்கும் பொதுவான ஒரு சொல்லாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பது அமைந்துள்ளது.

இதனை நம்பியே மீண்டும் இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் புதிய தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அடுத்த இரண்டாண்டுகளில், காலங்கள் குறிப்பிடப்பட்டு, காலவரையறையில் இத்தீர்மானத்தின் நடைமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

இனி என்ன? அடுத்த இரண்டாண்டுகள் இலங்கை அரசுக்குப் பொற்காலம். இக்காலத்தில் பல தேர்தல்கள் அங்கு நடைபெறும். கட்சிகள் கட்டில்களில் மாறி ஏறும். சில புது முகங்கள் அங்குமிங்கும் காட்சி தரும். ஜெனிவாத் தீர்மானமும் அவ்வப்போது புது வடிவங்கள் பெறும்.

இம்மாதம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் நிராகரிக்கப்படலாம். அவைகளை ஏற்க முடியாதென புதிய சிங்களத் தலைமைகள் நிச்சயம் சொல்லும்.

தமிழர் தலைமை சிங்கள தேசத்துக்கு உடன்பாடுள்ளதாகத் தொடரும்வரை, ஜெனிவா என்பது தமிழருக்கு ஒரு தொடர்கதைதான்.

காலத்தை நீடிக்கிறது ஜெனிவா. காலத்தை இழுத்தடிக்கிறது இலங்கை.

முள்ளிவாய்க்கால் பத்தாண்டு நிறைவுக்காலம் முன்வாசலில் வந்து நிற்கிறது ஞாபகமிருக்கட்டும்!

# புதினம்
PUTHINAM

லண்டன் தமிழர்களின் அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:
ஈ.கே.ராஜகோபால்
E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே-அவுட்
9551395516

அலுவலக முகவரி:
PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk



## புதினம்

தவறாது தபாலில் பெற 25 பவுண்கள் PUTHINAM என்ற பெயருக்கு CHEQUE உங்கள் முகவரியைக் குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.

PUTHINAM, 38, MOFFAT ROAD
LONDON SW17 7EZ


## கனக துர்க்கை அம்மன் புதிய நிர்வாக சபை

ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் புதிய நிர்வாகசபை தேர்தல் மூலம் தெரிவாகியுள்ளது. கடந்த 24.3.2019 ஆலய மண்டபத்தில் நடைபெற்ற அங்கத்தவர்களிடையேயான தேர்தலில் சொக்கலிங்கம் கருணைலிங்கம் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். புதிய நிர்வாகசபை வருமாறு:-

தலைவர்
**சொ.கருணைலிங்கம்**

உபதலைவர்
**திருமதி சாரதா கணேஷ்ராஜா**

செயலாளர்
**க.ரகுநாதன்**

உபசெயலாளர்
**திருமதி சாந்தா சுந்தரலிங்கம்**

பொருளாளர்
**எஸ்.இராமச்சந்திரன்**

உபபொருளாளர்
**திருமதி சர்வலோகநாயகி ஜெய்ஜெயம்**

உத்தியோக பற்றற்ற அங்கத்தவர்
**கணபதிப்பிள்ளை**

**2019-2021 வரை புதிய நிர்வாக சபை செயல்படும்.**


Looking for an
## ACCOUNTANT ?
We are next to you!
We provide solutions for your Accountancy needs



உங்கள் தனிப்பட்ட மற்றும் வியாபார ACCOUNTANCY தேவைகளுக்கு LONDON இல் இயங்கும் தனித்துவமான ஸ்தாபனம்

Initial consultation is free
No fee for first three months

P & K ASSOCIATES
CIMA
PRACTISING CERTIFICATE HOLDER

183. Burnt Oak Broadway,
Edgware. Middlesex.
HA8 5EH

020 8958 8883
079 1613 4976
(Mr.P. Navendran)

www.pandkgroup.co.uk
pandkassociates@aol.com


## London Sivan Kovil Trust

Charity Registration No.1051516

4A Clarendon Rise, Lewisham, London SE13 5ES.
Telephone Number 00 44 208 318 9844
Fax Number 00 44 208 318 2108

# சுத்தம் செய்யும் பணியாளர் தேவை

கோவிலில் சுத்தம் செய்யும் வேலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முழு நேரமாகவும் அல்லது பகுதி நேரமாகவும் பணியாற்றுவதற்கு விண்ணப்பிக்கலாம். வேலைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 30.04.2019**

பின்வரும் EMAIL மூலமாகவோ, மேற்குறிப்பிட்டுள்ள கோவில் முகவரி மூலமாகவோ விண்ணப்பிக்கலாம்.

sivan.kovil@yahoo.co.uk
02083189844
LONDON SIVAN KOVIL TRUST

## உயர்வாசற்குன்று முருகன் கோவில்
## HIGHGATEHILL MURUGAN TEMPLE

200A, Archway Road, London N6 5BA Tel: 020 8348 9835 Fax: 020 8482 6508

### திருவிழாக்களும் விசேட பூசைகளும்
### Auspicious Days, Special Poojahs & Festivals - 2018

### April- 2019 நடைபெறும் நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| 01 | Monday | Pankuni Pongal 3 | பங்குனிப் பொங்கல் 3 |
| 02 | Tuesday | Prathosha Viratham | பிரதோச விரதம் |
| 04 | Thursday | Amaavasai Viratham | அமாவாசை விரதம் |
| 08 | Monday | Pankuni Pongal 4 | பங்குனிப் பொங்கல் 4 |
| | | Sri Rajarajeswari Amman Veethi Ula | ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்மன் வீதி உலா |
| | | Karthigai Viratham Chathurthi Viratham | கார்த்திகை விரதம் சதுர்த்தி விரதம் |
| 10 | Wednesday | Shasdi Viratham | சஷ்டி விரதம் |
| 13 | Saturday | Sri Rama Navami | ஸ்ரீ ராம நவமி |
| 14 | Sunday | Vikari New Year | விகாரிப் புத்தாண்டு |
| | | Mor: Sri Vinayagar & Murugan Veethi Ula | காலை விநாயகர், முருகன் வீதியுலா |
| | | Eve: Sri Vinayagar, Athi Shanmukar Abeshekam | மாலை ஸ்ரீவிநாயகர், ஆதிசண்முகர் அபிசேகம் |
| | | Sri Vinayagar & Sri Muthukumar Veethi Ula | ஸ்ரீவிநாயகர், ஸ்ரீமுத்துக்குமார் வீதியுலா |
| 15 | Monday | Ekaathasi Viratham | ஏகாதசி விரதம் |
| 16 | Tuesday | Prathosha Viratham | பிரதோச விரதம் |
| 18 | Thursday | Chithira Full Moon | சித்திரா பௌர்ணமி |
| 19 | Friday | Chithirach Chithirai | சித்திரைச் சித்திரை |
| 22 | Monday | Chankadakara Chathurthi | சங்கடகர சதுர்த்தி |
| 24 | Wednesday | Apara Padcha Sasdi | அபரபட்ச சஷ்டி |
| 26 | Friday | Apara Padcha Ashtami | அபரபட்ச அட்டமி |
| 27 | Saturday | Sri Nadesar Abisheham 2 | ஸ்ரீ நடேசர் அபிசேகம் 2 |
| 30 | Tuesday | Ekathasi Viratham | ஏகாதசி விரதம் |



# விமலின் பக்கம்

“தீபத்தை வைத்துக் கொண்டு திருக்குறளும் படிக்கலாம் - ஊரையும் எரிக்கலாம்” என்றார் ஒரு கவிஞர். நுகர்வோரின் ஒரு குறிப்பிட்ட தேவைக்காக உருவாக்கப்பட்டது கைத்தொலைபேசி! எங்களுடனேயே எடுத்துச் செல்லப்படக் கூடிய ஒரு வசதியான சாதனம். தெருச் சந்திகளில் நிற்கும் அந்த சிவப்பு நிற பெட்டிக்குள் புகுந்து நின்று, சில்லறைக் காசுகளைப் பெட்டியில் போட்டு அவஸ்தைப்படத் தேவையில்லை. எங்களுக்கென ஒரு சாதனம்! எங்களுக்கென தனியான இலக்கம்! வெறுமனே உரையாடல்களுக்கு மட்டும் பயன்பட்ட கைத்தொலைபேசி இன்று செய்யாத வேலைகளே இல்லை.

காப்பி /டீ தயாரிக்கத் தெரியாது, சமைக்கத் தெரியாது!

தொலைபேசி உரையாடல் தவிர குறுஞ்செய்தி அனுப்புதல், உடனே அவற்றைப் பரப்புதல் இவற்றோடு கைத்தொலைபேசியை ஒரு புகைப்பட ஆல்பமாக - ஒரு திசைஅறி கருவியாக- பல்பொருள் கருத்துக் களஞ்சியமாக- முகவரிகள் பதிவேடாக- இப்படி நூற்றுக்கணக்கான செயல்களை முடித்து வைக்கும் அற்புத சாதனமாக விளங்கும் கைத்தொலைபேசிக்கு சிவபெருமானைப் போல பல நூறு பெயர்கள்!

கைத்தொலைபேசி, மொபைல், செல்லிடப்பேசி, செல், தொல்லைபேசி! இப்படிப் பல!

இந்த கைத்தொலைபேசி வெறும் உரையாடலுக்காக மட்டும் பயன்படுத்தப்படும் வரை பிரச்சினைகள் குறைவாகவே இருந்தன.

மைய நீரோட்ட ஊடகங்களுக்குப் போட்டியாக இன்று வேகமாகப் பரவி வரும் “சமூக ஊடகங்கள் (பேஸ் புக் - முகநூல், வாட்ஸ்-அப், போன்றவை) கடந்த ஐந்து வருடங்களுக்குள் வேகமாகக் குட்டி போட்டு பரவியதோடு கைத்தொலைபேசி சாதனங்களுக்குள்ளும் நுழைந்து இளைஞர்கள், யுவதிகளைப் படுத்தும் பாடு மிக மிக மோசமாகியிருக்கிறது.

பேய் அலையும் இரவு நேரங்களில் தமது மொபைல்களை கட்டிப் பிடித்துக் கொண்டு போர்வைக்குள் பதுங்கும் பதின்மப் பராயத்து தமிழ் யுவதிகள் போர்வைக்குள் செய்வது என்ன என்பது மூன்று வாரங்களுக்கு முன் பகிரங்கமாக வெடித்து பரபரப்பூட்டிய பொள்ளாச்சி பயங்கரம் - பெண்களைப் பெற்ற தமிழ்நாட்டுப் பெற்றோர் அனைவருக்கும் பீதியை ஊட்டியது.



சபரிராஜன்–திருநாவுக்கரசு–வசந்தகுமார்–சதீஷ்

பெப்ரவரி மாதம் 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தமிழ்நாட்டின் இதர இடங்களைப் போலத்தான் பொள்ளாச்சியிலும் காலைச் சூரியன் உதித்தான். அங்கிருந்த பொலிஸ் நிலையம் ஒன்றில் சுமார் 19 வயதான ஒரு யுவதி முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தாள்.

தனக்கு ஏற்கனவே அறிமுகமான சில வாலிபர்களுடன் தான் காரில் செல்லும்போது தன் அருகில் இருந்தவன் தன் மேலாடையைக் கழற்றியதாகவும் காரின் முன் இருக்கையில் இருந்த ஒருவன் இதனை செல் போனில் வீடியோ படம் பிடித்துக் கொண்டிருந்ததாகவும் அவள் காவல் துறையினரிடம் கூறினாள்.

அவள் முரண்டு பிடிக்காமல் இருக்க வேண்டும், முரண்டு பிடித்தால் அந்த வீடியோ இணையத் தளத்தில் பரப்பப்படும் என்று அவர்கள் தன்னை எச்சரித்ததாகவும் அவள் குறிப்பிட்டாள். 20 ஆயிரம் ரூபா மதிப்புள்ள தனது தங்க நெக்லசை பறித்துக் கொண்டு தன்னைக் காரில் இருந்து வெளியே தள்ளிவிட்டதாகவும் அவள் காவல் துறையினரிடம் தெரிவித்த முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தாள். இந்தச் சம்பவம் நடந்த அதிர்ச்சியில் தான் இரண்டு வாரங்களாகத் தன் குடும்பத்தினரிடம் சொல்லவில்லை என்றும் இன்றே தான் குடும்பத்திடமும் காவல் துறையினரிடமும் தெரிவிப்பதாக அந்த 19 வயதுப் பெண் குறிப்பிட்டாள்.



பொலிஸ் எஸ்.பி. பாண்டியராஜன்

யுவதி காவல் துறைக்கு அளித்த இந்த முறைப்பாடு பொள்ளாச்சியில் மட்டுமல்ல, முழுத் தமிழகத்திலுமே ஊடகங்களில் பரவலான கவனத்தை ஈர்த்தது.

இந்த முறைப்பாட்டின் மீது கைது செய்யப்பட்ட நால்வரில் ஒருவன் திருநாவுக்கரசு - எம்பிஏ படித்தவன் - சரளமாக ஆங்கிலம் பேசி தொலைபேசியில் பெண்களை மயக்குபவனாம்.

மயங்கிய பெண்கள் அவனது பண்ணை வீட்டுக்கு வரவழைக்கப்பட்டு அவனாலும் அவனது நண்பர்களாலும் வன்புணர்வு கொள்ளப்படுவார்களாம்.

இந்தச் சம்பவங்கள் தொலைபேசி வீடியோவில் படமாக்கப்பட்டு அதை வைத்து இந்தக் கும்பல் 6 வருடங்களாகப் பணம் சம்பாதித்து வந்திருக்கிறது. பண வசதி கொண்ட பெண்கள் தமது இரகசியத்தைக் காப்பாற்ற ஆயிரக் கணக்கில் பணத்தை (அள்ளி இறைத்திருக்கிறார்கள்) செலுத்தினார்கள். பணம் இல்லாத யுவதிகள் தம்மை மேலும் மேலும் இவர்களுக்கு அடகு வைத்து பணம் சம்பாதித்தார்களாம்!

இந்தக் கும்பலுக்கு ஆளும் அதிமுக பிரமுகர்கள் சிலரின் ஆதரவு இருந்திருக்கிறது. காவல் துறையின் பாதுகாப்பும் வழங்கப்பட்டு வந்திருக்கிறது.

பொள்ளாச்சி அசுரர்கள் கும்பலில் திருநாவுக்கரசு உட்பட நாலே நாலு பேரை மட்டுமே கைது செய்த கோவை மாவட்ட எஸ்.பி. பாண்டியராஜன், அதிமுகவின் ஊதுகுழல் போல செயற்பட்டு அவசர அவசரமாக செய்தியாளர் மகாநாடு ஒன்றைக் கூட்டி, இந்த விவகாரத்தில் நான்கு பேர் மட்டுமே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் - வேறு யாரும் இல்லை - நிச்சயமாக அரசியல் தலையீடு இல்லை என்று முழுப் பூசணிக் காயை சோற்றில் மறைக்க முற்பட்டார்.

சில மாதங்களுக்கு முன், திருப்பூரில் ‘டாஸ்மாக்’ மதுபானக் கடைகளை எதிர்த்து தாய்மார் கண்டன ஆர்ப்பாட்டம் செய்தபோது விரைந்து வந்த அப்போதைய டி.எஸ்.பி. பாண்டியராஜன் அந்தத் தாய்மார்களில் ஒருவரின்???? காதருகில் ஓங்கி அறைந்த காட்சி எல்லோரையும் பதைபதைக்க வைத்தது அந்தத் தாயின் காது செவிடானது!

ஆனால், அந்த டி.எஸ்.பி.க்கு எஸ்.பி.யாகப் பதவி உயர்வு வழங்கி கோயம்புத்தூருக்கு அனுப்பியது அண்ணா திமுக அரசு. அதிமுகவுக்கு விசுவாசமான பாண்டியராஜன், இந்த யுவதிகள் பாலியல் வழக்கில் சம்பந்தப்பட்ட ‘பார்’ நடத்தும் நாகராஜ் என்ற அதிமுக செல்வாக்கு மிக்க மனிதனைக் கைது செய்ய மறுத்து வந்தார். பொதுமக்கள் நாகராஜின் மதுபானக் கடையை அடித்து நொறுக்கிய பின்னர் அதிமுக தலைமைப் பீடம் நிலைமையைக் கட்டுப்படுத்த ‘பார்’ முதலாளி நாகராஜை அதிமுகவில் இருந்து விலக்கி அறிக்கை விடுத்தது.

பொள்ளாச்சி நாடகத்தின் மூலவர் எஸ்.பி.பாண்டியராஜனாக இருந்தாலும் அதிமுக சட்ட மன்ற துணை சபாநாயகர் பொள்ளாச்சி ஜெயராமன் என்ற செல்வாக்கு மிக்க பிரமுகரையும் அவரது இரு புதல்வர்களையும் காப்பாற்றவே பாண்டியராஜன் இத்தனை பாடு படுவதாக கிசுகிசுக்கப்படுகிறது.

துணை சபாநாயகரின் புதல்வர்கள் சில பெண்களுடன் காரில் போகும்போது அந்தப் பெண்களில் ஒருத்தி மரணமடைந்த சம்பவம் சில மாதங்களுக்கு முன் நடந்தது. ஆனால், இது வெறும் விபத்து என்று அறிவித்து காவல் துறையினர் அப்போது அந்த வழக்கை மூடிவிட்டார்களாம்.

புதினம் ஏப்ரல் இதழுக்கு நான் இந்த பொள்ளாச்சி நாடகத்தை எழுதிக் கொண்டிருக்கும்போது காட்சிகள் வேகமாக மாறிக் கொண்டிருக்கின்றன.

காவல் துறை அதிகாரி நடிப்பில் கோட்டை விட்ட காட்சி நான்கு வருடங்களுக்கு முன்னர் என் தாய் மண்ணில் நடந்த கொடிய வித்யா வன்புணர்வு கொலை வழக்கும் அதில் கொலையாளியிடம் கோடிக் கணக்கில் லஞ்சம் வாங்கிய சிங்கள மற்றும் தமிழ் காவல் துறை அதிகாரிகள் நடத்திய தில்லுமுல்லுகளும் என் நினைவுக்கு வருகின்றன.



வித்யாவை கெடுத்துக் கொன்ற காடையர்.

தெற்காசிய நாடுகளில் 18-20 வயதான யுவதிகள் பலவந்தமாக கதறல்களுக்கு மத்தியில் பலரால் வன்புணர்வு செய்யப்படும் வீடியோக்களுக்கு சுவிஸ் போன்ற மேற்கு நாட்டு பாலியல் வெறியர்கள் மத்தியில் மிகுந்த தேவையும் வரவேற்பும் இருக்கிறது.

பொள்ளாச்சி திருநாவுக்கரசு, ‘பார்’ நாகராஜ் போன்றோர் செய்ய முற்பட்டதும் இதுதான். புங்குடுதீவு வித்யாவின் வன்புணர்வு வீடியோவை சுவிஸ் வெறியர்களுக்கு விற்ற சுவிஸ் குமார் 2005-ல் செய்ததும் இதையேதான்.

பணம் சம்பாதிக்க குறுக்கு வழிதேடும் பொள்ளாச்சி பொறுக்கிகளும் புங்குடுதீவு காடையர்களும் தத்தம் சொந்தக் குடும்பத்து சகோதரிகளை அல்லது புதல்வியரை படம் பிடிக்கலாமே என்று சலித்துக் கொள்கிறார்கள் ஆத்திரம் கொண்ட பொதுமக்கள்.

2015-ல் புங்குடுதீவு வித்யா சிவலோகநாதன் என்ற 18 வயது மாணவி கடத்திக் கற்பழிக்கப்பட்டு அத்தோடு செல் போனில் படம் பிடிக்கப்பட்ட சம்பவத்தை தமிழ் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

சுவிஸ் நாட்டு பாலின வெறியர்களைத் திருப்திப்படுத்தும் நோக்கத்துடன் தமிழ் யுவதியின் கற்பழிப்பை படம் பிடிக்க பல செல் போன்களுடனும் ஆயிரக்கணக்கான சுவிஸ் பிராங் (CHF) பணத்துடனும் (CHF= 178 இலங்கை ரூபா) புங்குடுதீவு வந்து இறங்கினார் சுவிஸ் குமார்.

கற்பழிப்பும் படப்பிடிப்பும் கொலையும் முடிந்த பின் சடலத்தை கடற்படை முகாமுக்கு அருகில் போட்டு இதை ஒரு ராணுவக் கொலை என்று காட்டுவது அவரது திட்டமாகும். தான்; அகப்பட்டுக் கொண்டதும் சி;.ஐ.டி.



புங்குடுதீவு வித்யாவுக்கு நடந்த கொடூரம்.

நிஷாந்த சில்வாவுக்கு பல லட்சம் ரூபா லஞ்சமாக வழங்க முனவந்தார் சுவிஸ் குமார். காவல்துறை தரப்பில் பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் ஜெயசிங்க இவரிடம் லஞ்சம் பெற்றுக் கொண்டு கொழும்புக்குத் தப்பி ஓட வசதி செய்து கொடுத்தார். தங்கள் இனச் சகோதரி வன்புணர்வு செய்யப்பட்டு கொல்லப்பட்டிருப்பதை மறந்து சப்-இன்ஸ்பெக்டர் ஸ்ரீகஜன் ஆகியோர் குற்றவாளிகளுக்கு உடந்தையாக இருந்தமை நிரூபிக்கப்பட்டது. வெளிநாட்டு சுவிஸ் நாணயத்தின் கவர்ச்சி அவ்வளவு!

நெஞ்சிலே நேர்மையும் துணிச்சலும் பெயரிலே தமிழ் பாண்டிய மன்னனின் பெயரையும் கொண்ட நீதிபதி இளஞ்செழியன் தலைமையில் சுவிஸ் குமார் உட்பட்ட இந்தக் கயவர்களின் கற்பழிப்பு வழக்கு நடந்தது

2015-ல் நடந்த இந்த வன்புணர்வுக் கொலைக்கு 2017-ல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. ஏழு கொலையாளிகளுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டு அவர்கள் கண்டி போகம்பரை சிறைக்கூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

“அரசன் அன்று கொல்வான் - தெய்வம் நின்று கொல்லும்!” ●


Sky Wings Travel
SW
Your Travel Is Our Passion...
25 YEARS of EXCELLENCE
9.7 out of 10 Rating on Trustpilot
Shows that We Value You!
Trustpilot
SECURE YOUR BOOKING BY PAYING A £150 DEPOSIT
WORLDWIDE SPECIALS
COLOMBO Fr £404
CHENNAI Fr £381
DELHI Fr £369
KUALA LUMPUR Fr £441
SINGAPORE Fr £447
MELBOURNE Fr £632
AUCKLAND Fr £683
NEW YORK Fr £314
SYDNEY Fr £602
TORONTO Fr £312
119 Tooting High Street, London, SW17 0SY
0208 672 9111
Above fares are subject to availablity - T&Cs apply
IATA
5766 ATOL PROTECTED



வேல் தர்மா




# தெரேசா மேயின் பதவிப்பலித் திட்டம்



பிரிவெளியேற்றத்தின் (*Brexit*) முன் தெரேசா மே வெளியேற்றப்படுவாரா, பாராளுமன்றம் கலைக்கப்படுமா, இரண்டாவது கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடைபெறுமா என்ற பல கேள்விகள் தற்போது பிரித்தானிய அரசியலில் எழுந்துள்ளது. இந்தக் கட்டுரை எழுதும் போது உள்ள நிலையும் இதை நீங்கள் வாசிக்கும் போது உள்ள நிலையும் மிக வித்தியாசமாக இருக்கும். எதிர்வு கூற முடியாத பல மாற்றங்களை பிரித்தானியா அரசியல் ஒவ்வொரு நாளும் எதிர் கொள்கின்றது. பிரிவெளியேற்றம் எப்படி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதில் கட்சிகளுக்கு இடையிலும், கட்சிகளுக்கு உள்ளேயும், அமைச்சரவையிலும் உள்ள கருத்து முரண்பாடுகள் மட்டும் மாறாமல் இருக்கின்றன. பிரிவெளியேற்றத்தை ஆத்திரத்துடன் எதிர்கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் தற்போது அதை மிகவும் அனுதாபத்துடன் அணுகுகின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தின் இரண்டாவது பெரிய பொருளாதாரம் அதில் இருந்து விலகுவது சாதாரணமாகக் கையாளப்படக்கூடிய ஒன்றல்ல.

### நான்கில் எது?

ஐரோப்பிய ஒன்றியம் நான்கு தெரிவுகளை பிரித்தானியாவிற்கு வழங்கியுள்ளது. 1. தெரேசா மேயின் திட்டத்தை ஏற்றுக் கொள்ளுதல். 2. உடன்பாடின்றி வெளியேறுதல். 3. இன்னும் நீண்ட காலத்திற்கு இருந்து பின்னர் முடிவு செய்தல். 4. வெளியேறாமல் இருத்தல். பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறும் திகதி 1. வெளியேற்றத்திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டால் 2019 மே மாதம் 22-ம் திகதியாகவும், 2. திட்டமின்றி வெளியேறுவதாயின் ஏப்ரல் 12-ம் திகதியாகவும் இருக்கும். 2019 மார்ச் 29 ஆக இருந்த பிரிவெளியேற்றத் திகதியை ஒத்தி வைத்துள்ளமை மோசமான குழப்ப நிலையில் பிரிவெளியேற்றம் நடப்பதை தற்காலிகமாக தவிர்த்துள்ளது. ஆனாலும் மார்ச் 29-ம் திகதி நிறைவேற்றப்பட்ட சட்டமாக இருப்பதால் இன்னொரு சட்டம் இயற்றப்பட்டே புதிய திகதி தீர்மானிக்கப்படவேண்டும். அதனால் தெரேசா மேயின் தலைமை அமைச்சர் பதவியும் சீரான பிரிவெளியேற்றமும் மிகவும் கவலைக்கிடமான நிலையிலேயே உள்ளது. தெரேசா மே பதவியில் இருந்து வெளியேற வேண்டும் என்ற அபிப்பிராயம் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகை அதிகரித்துக் கொண்டே போகின்றது. அது மட்டுமல்ல, அவரது அமைச்சரவை உறுப்பினர்கள் அவருக்குப் பின் யாருக்கு தலைமை அமைச்சர் பொறுப்பைக் கொடுப்பது என்பது தொடர்பான உரையாடல்களை ஆரம்பித்ததுடன் டேவிட் லிடிங்டன், மைக்கேல் கௌ ஆகிய இரு பெயர்களை முன்மொழிந்தும் உள்ளனர்.

கடும்போக்கு பிரிவெளியேற்றக்காரர்கள் டேவிட் லிடிங்டன் மென்மையான பிரிவெளியேற்றத்தை முன்னெடுக்கக் கூடியவர் என்ற கரிசனையுடன் இருக்கின்றார்கள். அதேவேளை அவர் ஐரோப்பிய ஒன்றியத்திடம் மேலும் கால அவகாசம் பெறக்கூடியவர் என்ற நம்பிக்கையும் சிலருக்கு உண்டு. ஆனால், லிடிங்டன் தெரேசா மே தற்காலிகமாகவாவது பதவியில் தொடருவது நல்லது என நினைக்கின்றார். பிரிவெளியேற்றம் முடியு முன்னர் தலைமை அமைச்சரை மாற்றுவது தீங்கானது என்ற அவரது நிலைப்பாட்டிற்கு ஆதரவு பரவலாக உண்டு. அதில் முக்கியமானவர் பிரிவெளியேற்ற ஆதரவாளரான இயன் டன்கன் ஸ்மித். தெரேசா மேயை பதவியில் இருந்து வெளியேற்ற முயற்சி செய்பவர்களைக் கட்சியில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்கின்றார் அவர். தலைமை அமைச்சர் பொறுப்பை ஏற்பதற்கான இரண்டாவது தெரிவான மைக்கேல் கௌ அவர்களுக்கு வலிமையான ஆதரவு பழமைவாதக் கட்சியினரிடையே இல்லை. அவர் ஐரோப்பிய ஒன்றியத்தின் சுங்க ஒன்றியத்தில் பிரித்தானியா தொடரக்கூடிய திட்டத்தை தொழிற்கட்சியின் ஆதரவுடன் நிறைவேற்றக் கூடியவராகக் கருதப்படுகின்றார். இத்தகைய சூழலில் 2019 மார்ச் 24-ம் திகதி பிரித்தானிய தலைமை அமைச்சர் செக்கரில் உள்ள தனது நாட்டுப்புற வதிவிடத்தில் முக்கிய கூட்டத்தை நடத்தினார். அதில் பங்கு பற்றிய முக்கிய அமைச்சர்கள் தெரேசா மே பதவியில் தொடர்வது தமது விருப்பம் என தெரிவித்துள்ளனர். அங்கு அவர் தனது எதிரிகளுக்கு புதுவிதமான தூண்டிலைப் போட்டார். அது தன் பதவியை தானே பலியிடும் திட்டம். பிரியேற்றம் எப்படியும் செய்தே ஆகவேண்டும் என உறுதியாக நிற்கும் பொறிஸ் ஜோன்சன், இயன் டன்கன் ஸ்மித் ஸ்றீவ் பேக்கர் ஜேக்கப் மொக், டேவிட் டேவிஸ் ஆகியோரிடம் தான் முன் வைக்கப்போகும் திட்டத்தை பாராளுமன்றம் ஏற்றுக் கொண்டால் தான் பதவி விலகுகிறேன் என்றார். ஆனால், வட அயர்லாந்தின் குடியரசு ஒன்றியக் கட்சியினர் தெரேசா மேயின் திட்டத்தை எதிர்ப்பார்கள். பல தொழிற்கட்சி உறுப்பினர்களின் வெறுப்பையும் தெரேசா மே சம்பாதித்துள்ளார். அதனால் அவரது மூன்றாவது திட்டமும் தோற்கடிக்கப்படலாம்.

### அவைத் தலைவர் போட்ட பூட்டு

பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறக் கூடாது என்ற கொள்கையுடைய பாராளுமன்ற அவைத் தலைவர் ஜோர் பேர்க்கோ பிரிவெளியேற்றம் எப்படி அமைய வேண்டும் என்பது தொடர்பாக தெரேசா மே முன்வைத்த இரண்டு முன்மொழிவுகளை பிரித்தானியப் பாராளுமன்றம் நிராகரித்து விட்டது. தனது மூன்றாவது முன்மொழிவிற்கு பரவலான ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மத்தியில் இருந்தால் மட்டுமே தான் அதைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பேன் என்றார் தெரேசா மே. 400 ஆண்டுகள் பழமையான ஒரு அவைத் தீர்மானத்தைக் கையில் எடுத்துக் கொண்டுள்ளார். அதன்படி ஏற்கனவே பாராளுமன்றத்தால் நிராகரிக்கப் பட்ட ஒரு முன்மொழிவை கணிசமான மாற்றங்கள் இன்றி மீண்டும் சபையில் தாக்கல் செய்து வாக்கெடுப்பிற்கு விடுவதை தான் அனுமதிக்க மாட்டேன் என ஒரு கருத்தை வெளியிட்டு தெரேசா மேயிற்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தினார்.

### வலுவடையும் இரண்டாம் கருத்துக்கணிப்புக் கோரிக்கை

பிரித்தானிய அமைச்சரவையில் முக்கியத்துவம் மிக்க நீதியமைச்சராக இருக்கும் பிலிப் ஹம்மண்ட் பிரிவெளியேற்றம் தொடர்பான இரண்டாவது கருத்துக் கணிப்பு கருத்திற் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகி விட்டது எனத் தெரிவித்ததும் இலண்டனில் இரண்டாம் கருத்துக் கணிப்புக் கோரி இலட்சக் கணக்கானோர் திரண்டதும் பிரிவெளியேற்றம் நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஐந்து மில்லியன் மக்கள் கையொப்பமிட்டமையும் பிரித்தானிய அரசியலை உலுப்பியுள்ளது. மென்மையான பிரிவெளியேற்றத்தையும் இரண்டாவது கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பையும் தெரேசா மே கடுமையாக எதிர்க்கின்றார். அதனால் தொழிற்கட்சியின் முழுமையான ஆதரவு பெறக்கூடிய ஒரு திட்டத்தை தெரேசா மேயால் முன்வைக்க முடியாது. தெரெசா மே மிகவும் களைப்பும் சலிப்பும் அடைந்துள்ளார் என்கின்றார் முன்னாள் தலைமை அமைச்சர் ரொனி பிளேயர். இவற்றால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு புதிய அரசைத் தெரிவு செய்யும் நிலையும் உருவாகியுள்ளது. பிரித்தானியப் பாராளுமன்றம் ஐரோப்பிய ஒன்றியத்தின் சுங்க ஒன்றியத்திலோ ஒற்றைச் சந்தையிலோ தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற தீர்மானம் பாராளுமன்றத்தில் எடுக்கப்பட்டால் அது ஆளும் பழமைவாதக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு முரணானதாகும். அந்த நிலையில் பழமைவாதக் கட்சியின் ஆட்சி தொடர்வது அரசியலமைப்பு முரண்பாட்டைத் தோற்றுவிக்கலாம். பழமைவாதக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் பிரச்சனைகள் இன்றியும் ஒழுங்காகவும் பிரிவெளியேற்றம் நடத்தப்படும் என்றது. ஆட்சி கலைக்கப்பட்டு தேர்தல் நடப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறும் காலம் கணிசமான அளவு நீடிக்கப்பட வேண்டும். பிரிவெளியேற்ற முயற்சியை முன்னின்று நடத்திய பொறிஸ் ஜோன்சனும் இயன் டன்கன் ஸ்மித்தும் தேர்தலில் தோல்வியைத் தழுவலாம். அது இரண்டாவது கருத்துக் கணிப்பு வேண்டும் என்ற கோரிக்கைக்கு வலுச் சேர்க்கலாம். அது மட்டுமல்ல தேர்தலில் ஸ்கொட்லாந்தில் எல்லாத் தொகுதிகளிலும் பழமைவாதக் கட்சி தோல்வியடையலாம். அதனால் தற்போது அங்கிருந்து தெரிவாகியிருக்கும் 13 பாராளுமன்ற உறுப்பினர்களை அது இழக்க வேண்டியிருக்கும்.

### ஐரோப்பாவில் கேலிக்குரிய நிலையில் பிரித்தானியா

தெரேசா மே பிழைப்பாரா என ஆருடம் சொல்லும் ஐரோப்பியத் தலைவர்களில் முதன்மையானவர் பிரெஞ்சு அதிபர் டேவிட் மக்ரனாக இருக்கின்றார். ஐரோப்பிய ஒன்றியத்தின் மாநாட்டில் பங்கு பற்ற முன்னர் டேவிட் மக்ரோன் தெரேசா தனது பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் பிரிவெளியேற்றத்தை ஒழுங்காகச் செய்வதற்குமான வாய்ப்பு 10 விழுக்காடு மட்டுமே என்றார். ஆனால், மாநாட்டின் பின்னர் அந்த வாய்ப்பை ஐந்து விழுக்காடாகக் குறைத்தார். ஐரோப்பிய ஒன்றிய சபையின் தலைவர் டொனால்ட் ரஸ்க் இன்னும் ஒரு படி மேலே போய் அந்த ஐந்து விழுக்காடு மிகவும் தாராளமான மதிப்பீடு என்றார். இன்னொரு ஐரோப்பிய அரசுறவியலாளர் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏனைய 27 நாட்டுத் தலைவர்களும் பிரிவெளியேற்றத்தை தெரேசா மேயோ அவரது நாடோ ஒழுங்காகச் செய்து முடிக்கப் போவதில்லை, நாங்கள் தான் அதை செய்து நிறைவேற்ற வேண்டும் என்றார்.

2019 ஏப்ரல் வரை தெரேசா மே தாக்குப் பிடித்தால் 2019 டிசம்பர் வரை தெரேசா மே நித்திய கண்டம் என்ற நிலையில் தொடருவார். அதன் பின்னர் அவரது பதவியின் ஆயுள் எப்படியும் முடிவிற்கு வரலாம். ●

World Tour Store



# தொன்மையானது தமிழ் தொன்மையானது சைவம்

## தொடர்ச்சி அறுந்து விட்டால் தொலைவது உறுதி!

தமிழர்களாக பிறந்தவர் எவருக்கும் காலாதிகாலமாக தலைமுறை தலைமுறையாக கையளிக்கப்பட்டு வந்த வரப்பிரசாதம் தாய் மொழி தமிழும் அனாதியான, நம்பிக்கையுடன் கூடிய வழிபாட்டுமுறை சைவமுமாகும்.

காலவோட்டத்தில் மத ஊடுருவல்களும் அன்னிய மொழி ஆதிக்கமும் தமிழர்களை தாக்கியபோதும் முற்றாக அழித்துவிட முடியவில்லை.


பல்லாயிரம் ஆண்டுகள் தாக்குப்பிடித்து நிலைத்து நின்ற தமிழ்மொழி, ஏறத்தாள கடந்த முப்பது ஆண்டுகளுக்குள்ளாக தொலைத்தொடர்பில் ஏற்பட்ட விஞ்ஞான வளர்ச்சியும் உலகமயமாக்கலும் முழு உலகத்தில் சகல விடயங்களிலும் மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளமை விரும்பாவிட்டாலும், மறுக்கமுடியாத உண்மை. இருந்த போதும் தமிழ் மொழிக் கேடுபட்டுள்ள சீரழிவு தமிழுணர்வாளர்கள் அனைவருக்கும் மிகுந்த வேதனை தருகின்ற விடயமாகும். இதில் எந்த நாட்டவர் என்பதற்கு அப்பால், உலகம் முழுவதும் வாழுகின்ற தமிழர்கள் மனங்களில் மிகப் பெரிய வேதனையையும் விரக்தியையும் தந்து மனவழுத்தத்தினை தருகின்ற விடயமாகும், இன்றைய எமது தலைமுறையினருக்கு பின்னர், இளைய தலைமுறையினருக்கும் அவர்தம் எதிர்காலச் சந்ததியினருக்கும், சென்றடையாமல் நம் அரும் பெரும் செல்வங்கள் நமது தலைமுறையுடன் மறைந்துவிடுமோ எனும் அச்சம் முதியவர்களின் மனதில் முதிர்ந்த வயதில், மனநிறைவுக்குப் பதிலாக மனக்குறைகளுடன் மறைகின்ற நிலைமையை ஏற்படுத்தியுள்ளது என்பது, இன்று வாழ்கின்றவர்கள் அனுபவிக்கின்ற உண்மை. இதில் மாற்றுக்கருத்துக்கு இடம் இல்லை.

### தமிழ் என்றால் என்ன?

நம்முன்னோர் நமக்களித்த உலகின் தலைசிறந்த தாய்த் தமிழ்மொழி தமிழ். அது உரையாடுவதற்கு மட்டும் பயன்படும் மொழியாக இல்லாமல், நம் ஆன்றோர்களினதும் சான்றோர்களினதும் மனதில் உதித்த உயர்ந்த எண்ணங்களே. அந்த எண்ணங்களை இடைவிடாது கடைப்பிடித்து வாழ்ந்த வாழ்வியலே மொழிவடிவாக தமிழ் எனப் பெயர் பெற்றது. அம் மொழியைப் பேசியவர்கள் தமிழர்கள் என அடையாளம் கொண்டிருந்தனர். தமிழ் எனப்படுவது, தம் + இழ் = தமிழ். தம் = தனது, தன்னுடையது. எனது, என்னுடையது




என அர்த்தப்படும். இழ் = வழி, வாழ்வு, வாழ்க்கை, தத்துவம், தர்மம், சுதந்திரம் மற்றும் இறையாண்மை. எனவே தமிழ் எனப்படும் வார்த்தை அல்லது சொல் வெளிப்படுத்தக்கூடிய பொருள் என்ன? தமிழ் = என் வழி, என் வாழ்கை, என் இறையாண்மை. இதனை சற்று விரிவாக நோக்கினால், நாம் எப்பொழுதுமே எம்மனச்சாட்சிக்கு கட்டுப்பட்டு நடக்கின்றோம், அப்படி நடக்கும் போது எமது சுதந்திரத்தை பறிக்கவோ அல்லது எமது இறையாண்மையை விட்டுக்கொடுக்கச் சொல்லி, யாரும் எம்மை அதிகாரம் செய்யவோ முடியாது என்பதாகும். இந்த விளக்கம் எமக்கு எழுத்து வடிவமாக இல்லை. ஆனால், மனித இனம் பிறந்ததில் இருந்து ஓர் உணர்வாக, ஒரு விருப்பமாக அனைவருமே அவரவர்களின் பங்களிப்பாக - அவரவர்களின் பாணியியில் இதை வெளிப்படுத்திய வண்ணமே இருந்திருக்கின்றனர். அதனால் நாம் நம்மை அறியாமலேயே தமிழ், தமிழர் எனப் பெயர் வைத்திருக்கின்றோம். வரலாற்றைச் சற்றுக் கவனித்துப் பார்த்தால், நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ தமிழனின் இந்த சுதந்திரத்தை விரும்பும் குணத்தையும், அதிகாரத்தையும் அடிமைத் தனத்தையும் ஒருபோதும் விரும்பாத அல்லது ஏற்றுக் கொள்ளாத பண்பையும் எடுத்துக்காட்டும் விதமாகவே பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. தனது கருத்து சரியென உணர்ந்ததால் கடவுளெனச் சொல்லக் கூடிய சிவனையே பார்த்து, நீ எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும், கடவுளாகவே இருந்தாலும், என்னை நீ எவ்வளவுதான் சோதித்தாலும், உனது கருத்தை ஏற்கமாட்டேன். தவறு தவறுதான் என, நக்கீரனை சொல்ல வைத்தது. நக்கீரனுடைய இழ், அதாவது அவருடைய இறையாண்மையானது நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே எனக்கூற வைத்தது. அப்பேற்பட்ட சிவனுக்கே, புது விளக்கங்கள் கற்றுக் கொடுத்து தகப்பன்சாமி எனப் பெயர்பெற்ற முருகனிடமே உன்னிடம் ஊல்லாமே இருந்தாலும், நீ பிழை செய்துவிட்டாய் என்று சொல்வதற்கு என்னிடம் உரிமை இருக்கின்றது, எனப்பாட வைத்தது, ஔவையின் இழ். அதாவது ஔவையின் இறையாண்மையாகும். பெரும் படையோடு வந்த அன்னியரைப் பார்த்து, நீ சேவையும் செய்யாமல் வேலையும் செய்யாமல் முறையாக மக்களிடமிருந்து ஆட்சியையும் பெறாத உனக்கு, நான் ஏன் வரி செலுத்த வேண்டும் எனக் கேட்க வைத்தது கட்டப் பொம்மனின் இழ். அதாவது அவருடைய இறையாண்மையாகும்.





தமிழ் என்றால் என்னவென்று இன்னும் மிகவும் எளிமையாக கூறவேண்டுமெனில், நான் என் வழி உண்டு, என் வாழ்க்கை உண்டு என இருக்கின்றேன், எனக்கு எவரும் தொல்லைதர வேண்டாம். அப்படி மீறி தொல்லை செய்தால், அதை நான் ஏன் என்று கேள்வி கேட்பேன், எதிர்த்து நிற்பேன். தேவைப்படின் போராடவும் தயங்கமாட்டேன், என்பதுதான் தமிழ். எனவே தமிழ் என்பது முதலில் ஒரு எண்ணம். அந்த எண்ணத்தை விடாமல் தொடர்ந்து கடைப்பிடித்ததால் வந்த ஒரு இனம். அதன்பின்னரே தமிழ், நாம் பேசும் மொழியின் பெயருமானது. தமிழர்களாக வாழ்ந்ததினாலே நாம் தமிழ் பேசினோம். நாம் தமிழ் பேசியதால் தமிழராகவில்லை. தமிழ் என்பது சாதி, மதம் என்ற வட்டங்களுக்கு அப்பாற்பட்டது. உண்மையான தமிழனுக்கு சுதந்திரமும் இறையாண்மையும்தான் அவனது அடையாளம். பச்சைத்தமிழன் - சிகப்புத் தமிழன் என்ற பாகுபாடு கிடையாது. எப்பொழுது இந்த எண்ணம் மாறியதோ, இந்தக் கருத்து விலகியதோ அப்போது இனமும் மாறியது, மொழியும் மாறியது. பொது மேடைகளில் தமிழில் பேசிவிட்டு, வீட்டிற்கு வந்ததும் மாறுபட்ட கொள்கையில் வாழ்க்கையை வாழ்ந்து வந்தாலோ, அல்லது தமிழ் மொழியை தவிர்த்து, தமிழ் மக்களைத் தவிர்த்து, தனது தமிழ் மண்ணைத் தவிர்த்து, அதைவிட தனி மனித சுதந்திரத்தை மதிக்கத் தவறி, தமது சுய இலாபத்திற்காக வேற்று இனத்தவருக்கும், சாதிக்கும், மதத்திற்கும், ஆட்சிக்கும், கட்சிக்கும், பதவிக்கும், விசுவாசமாக நடந்துகொள்வது தமிழனின் நல்லொழுக்கமாகாது. அது தமிழனின் அடையாளம் இல்லை. எனவே தமிழ் பேசினால் மட்டும் தமிழராக முடியாது. தமிழர் மத்தியில் பல வருடங்கள் வாழ்ந்தாலும் தமிழராக முடியாது. அதேபோல் தமிழ் பேசாவிட்டாலும், தமிழ் மண்ணில் வாழாவிட்டாலும் தமிழராக இருக்கமுடியும். உலகின் எப்பாகத்தில் பிறந்திருந்தாலும் தமிழராக இருக்கமுடியும்.

யார் தமிழர்கள், தமிழரின் இறையாண்மைக்காக அயராது பாடுபடுபவர்களும், தன்மானமும் தனிமனித சுதந்திரமுமே வாழக்கையின் அடிப்படைக் கட்டமைப்பு என நினைத்து, அதை தவறாமல் கடைப்பிடிக்கும் அனைவருமே தமிழராவார்கள்.

### சைவம் – சைவசமயம் அல்லது சைவசமயிகள் என்றால் என்ன ?

அனைத்தும் சிவனில் இருந்து தோன்றியவை, முடிவில் அனைத்தும் சிவனில் அடங்கி ஒடுங்கும் எனும் உண்மையின் அடிப்படையில், சிவனை முழுமுதற் கடவுளாக கொண்டு சிவனே சீவன் - முக்தியெனவும் சிவனுடன் இரண்டறக் கலத்தலே பிறவி எடுத்ததின் நோக்கமெனவும், முழுமையாக நம்பிக்கை வைத்து சிவனை வழிபடுபவர்கள் சிவனடியார்கள் அல்லது சைவர்கள் என அழைக்கப்படுகின்றார்கள். இந்த வணக்கமுறையும் வழிபாடும் சைவம் அல்லது சைவசமயம் என ஆதி அனாதியான காலம் தொட்டு, பெயர் பெற்று விளங்கி வருகின்றது. பல ஆயிரம் வருடங்களாக எண்ணிலடங்கா யோகிகள் தோன்றி தாம் கண்ட உண்மைகளைக் கூறிச்சென்றுள்ளார்கள். அந்த உண்மைகள் யாவும் சிவனில் இருந்து தோன்றியவைகளாகும். எனவே சிவனே ஆதி யோகியாகவும் விளங்குகின்றான். இவ்வுலகில் தற்பொழுது இருக்கக் கூடிய மதங்கள் அல்லது சமயக் கோட்பாடுகள் தோன்றுவதற்கு முன்னர் உருப்பெற்று நிலையாக இன்றுவரை நீடித்து நிலைத்து நிற்கின்றது, அதன் பெயர் சைவம் அல்லது சைவ சமயமாகும்.

### சைவம், தமிழ் – சைவர்கள் தமிழர்கள்– சைவத்தமிழர்கள்

சைவமும் தமிழும் எமக்கு இருகண்கள் என்றால், சைவத்தமிழ் எமது முதற்கண்ணாகும். தமிழ் மொழிக்கு எப்படி தனித்தன்மையும் சிறப்பும் உண்டோ, அஞ்ஞனமே சிவனுக்கும் சைவத்திற்கும் தனித்தன்மையும், அதி சிறப்பும் ஒருங்கே அமையப் பெற்றிருக்கின்றது. தமிழும் சைவமும் எமது முன்னைய பரம்பரையினரின் அரும்பெரும் செல்வம். இவை இரண்டும் எமது அடையாளம் இதனை எமது வருங்காலச் சந்ததியினருக்கு எப்படிக் கையளிக்க போகின்றோம் என்பதுதான் எம்முன்னர் உள்ள பெரிய கேள்வி.

சிவனுடைய வடிவமாகிய நடராச தாண்டவ வடிவம், சகல அண்ட சராசரங்களையும், படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என ஐந்தொழில்களையும் குறிப்பனவாகவும் அறிவையும் அறியாமையையும் வேறுபடுத்தி காட்டுபவனவாகவும் அமைந்துள்ள, இடையறாத நடனக்காட்சி, மனிதனுக்கும், சகல உலகத்திற்கும், இறை வனுக்கும் இடையே உள்ள தொடர்பினை சித்தரித்து - சிந்திக்கத் தூண்டுகின்றது.

அண்மையில் அமெரிக்காவின் விண்வெளி நிலையம், செவ்வாய் கிரகத்திற்கு அனுப்பிய விண்கலத்தின் பெயர் பாத் பயிண்டர் *PATH FINDER* (பாதம் பட்டு நடந்த இடம் பாதை)...

(27ம் பக்கம் பார்க்க)

# கண்ணீரும் செந்நீரும்




## அமரர் சண்முகநாதன் ஸ்ரீரவீந்திரன்

மண்ணில்: 17-11-1953 | விண்ணில்: 08-03-2019

தாயகக் கனவை நனவாக்கச் சென்றீர்!
சுற்றம், உறவுகளைக் கண்டு குசலம் அறிந்தீர்கள்!
வழிபட்ட ஆலயங்கள் சென்று, ஆன்ம விடுதலைக்கு வழிதேடினீர்கள் போலும்!
'என்னால் முடிந்தது' என்று கிள்ளிக் கொடுத்த
உங்களைப் பரமன் அள்ளியணைத்தான்!!
தாயக மண் உங்களுக்கு விபூதிப் பிரசாதமாயிற்று.
பிறந்த மண்ணுக்கே வித்தாகிப் போனீர்கள்!
கண்களில் கசிவது கண்ணீர் மட்டுமல்ல, செந்நீரும்தான்.

ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.
மனைவி, மக்கள், குடும்ப உறவுகள், நண்பர்கள்.



# அமரர் சர்வேஸ்வரன் நவரத்தினம் அவர்களின்

## ஆத்மசாந்தி பூசையும் நினைவஞ்சலி ஒன்றுகூடலும்

எமது அன்புக்குரிய அமரர் சர்வேஸ்வரன் அவர்களின் ஆத்ம சாந்தி பூசையும் நினைவஞ்சலி ஒன்றுகூடலும் இலண்டன் சிவன் நிலைய மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் தங்கள் குடும்பத்துடன் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

Date : Sunday, 07 April 2019
Time : 12 noon to 04.00 pm
Venue : Lewisham Sivan Temple & Sivan Centre
4A Clarendon Rise, Lewisham
London SE13 5ES

**வைத்திய கலாநிதி சீ.நவரத்தினமும் மனைவியும்**
**திருமதி ஜனனி சிவகணேசன்**
**வைத்திய கலாநிதி ஜெயா நவரத்தினம்**

Dr S Navaratnam +44 7956 579 239
Home: +44 1277 223 981
E-Mail: seeniar_navaratnam@hotmail.com

# ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கிறோம்



மண்ணில்
11.10.1949

விண்ணில்
09.02.2019

## அமரர் கந்தசாமி சண்முகநாதன்

(காரைநகர் பலகாடு-லண்டன்)

அன்பு மகனாக, ஒரே அண்ணனாக
அன்புடன் நேசிக்கும் மைத்துனராக
ஆருயிர் கணவனாக,
பாசமான தந்தையாக
உற்றாரின் அன்பான உறவினராக
நண்பர்களின் இனியவராக
இல்லத்தின் ஒளிவிளக்காக

குடும்பத்தின் குலவிளக்காக
எம்மை வாழவைத்து, வாழ்வில் உயர்த்தி
இன்று நீள்துயில் கொண்ட
எங்கள் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்திக்காகப்
பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!
தங்கள் பிரிவால் துயருறும், குடும்பத்தினர்.



# அமரர் பரந்தாமன்

கிருஸ்ண பரமாத்மாவுக்குப் பல பெயர்கள் உள. மாயவன், யாதவன், மதுசூதனன், கோபாலன், மணிவண்ணன், ஸ்ரீரங்கன், பரந்தாமன், கண்ணன், கேசவன் என்பன அவற்றில் சில. இப்பெயர்கள் முழுதும் அமரரில் அடக்கம் பெறுகின்றன. கம்பீரத் தோற்றம், இனிய முகம், இதமான வார்த்தை, கருமையழகு, தமிழ்ப்பணி, சமயத் தொண்டு, மன்னிக்கும் பாங்கு, கள்ளமில்லா வெள்ளை உள்ளம், இலக்கிய ஆர்வம், தமிழ் இனப் பற்று, 'ஐயா, ஐயா' என்று பிறரை அழைக்கும் பாங்கு என்ற வார்த்தைகள் தம்பி பரந்தாமனை ஆட்கொண்டுள்ளன எனில் அது மிகையல்ல.

மிக இளவயதில் இவருக்கேற்பட்ட மரணம், கடவுள்மீதே எமக்கு வெறுப்பை ஏற்படுத்துகின்றன. 'கொடிது, கொடிது இளமையில் வறுமை' என்ற ஔவையார்கூட 'கொடிது, கொடிது இளமையில் மரணம்' என்ற வார்த்தையைக் கூறி வைக்க மறந்துவிட்டாள்.

அமரருக்குறிய இரங்கல் கூட்டம் ஒன்று ஸ்ரீகனகதுர்க்கையம்மன் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்றது. காரை அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த குமார் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். இதில் திருமதி அஞ்சு, தணிகாசலம், சிவபாலன், கந்தசாமி கோகுலன், இளையதம்பி தயானந்தா, சதீஸ், சிறீரங்கன், கணேஸ்குமார் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

*இணுவை கோகுலன்*



வவுனியூர் இரா.உதயணன்

# கனவுகள் கற்பனைகள் நிஜங்கள்

கந்தவனம் நிமிர்ந்து வானத்தைப் பார்த்தார். கருமேகக் கூட்டங்கள் எங்கும் படர்ந்திருந்தன. பூமாதேவி சினம்கொண்டுவிட்டாள் போலத்தோன்றியது அவருக்கு.

'நல்ல மழை பெய்யப் போகுது. காரை எடுத்து கொஞ்சம் தள்ளிவிட்டு மூடிவிடுவமே.'

"சும்மா இருங்கோ அப்பா, வயசு போகப்போக யோசனையெல்லாம் எங்கெங்கோ போகுது"-கலைமதி சினந்து கொண்டாள்.

மகன் சுதன் இங்கிலாந்துக்கு மேற்படிப்புக்காக போனவன், அப்படியே அங்கே செற்றிலாகிவிட்டான். அவன் தனது சொந்தத் தாய்நாட்டைவிட்டுப் போய் முப்பத்திரெண்டு வருடங்கள் ஆகிவிட்டன. அப்படியென்றால் காருக்கு வயது இருபத்தியேழு வருடங்களுக்கு மேல்.



அந்தக் காலத்தில் கந்தவனம், மனைவி கலைமதியையும் ஏற்றிக்கொண்டு மகன் லண்டனில் இருந்து அனுப்பிய கார் என்று பெருமையாக வலம் வந்த நாட்கள் எல்லாம் போய்விட்டன.

"கார் மழையிலதானே நனையப்போகுது. நனைந்திட்டுப் போகட்டும்"

கந்தவனம் கலைமதியை திரும்பிப் பார்த்துவிட்டு பேசாமல் இருந்தார். கலைமதியின் சினத்துக்கான காரணம் அவருக்குத் தெரியாமல் இல்லை. திரும்பவும் கார் கதையைத் தொடங்கினால் மதி எரிந்து விழுவாள் என்று நன்றாகவே கந்தவனத்துக்கு தெரியும். மனைவி கலைமதியை 'மதி' என்று கூப்பிடும் கந்தவனம் மெல்ல திரும்பி மீண்டும் மதியைப் பார்த்தார்.

மதியோ ஒன்றும் தெரியாதவள் போல் அண்ணாந்து வீட்டின் முகட்டைப் பார்த்தவண்ணமிருந்தாள்.

நாட்கள் ஓடும் வேகத்தை மதி நினைத்துக்கொண்டிருந்தாள். அவளுக்கோ வயது எழுபத்திஎட்டு. கந்தவனத்திற்கு எண்பத்திமூன்று. இப்பவெல்லாம் எழும்பி நடமாடித்திரிவது கூட கஸ்டமாகவிருந்தது. உடல் பலவீனமடைந்து வருவதை இருவரும் உணர்ந்தனர்.

மதன் கனடாவில் இருந்து தொலைபேசியில் அழைத்திருந்தான். மெல்லப் பேச்சை தொடங்கினார் கந்தவனம்.

"என்னவாம்"- வேண்டா வெறுப்புடன் கேட்டாள் மதி.

"மருமகள் துளசி கர்ப்பிணியாம். இன்னும் ஆறு மாதங்கள் இருக்காம்."

மதி படாரென்று முகத்தை திருப்பிக்கொண்டு "லண்டன்காரன் தன்ர அலுவலையெல்லாம் வாங்கிவிட்டான். இப்ப கனடாக்காரன் அலுவல் வாங்க கடிதம் போடுறாரோ?"

"நீ எண்ணத்தை சொன்னாலும் எங்கட பிள்ளையள்தானே."

"அவங்கள் ரெண்டு பேரும் தங்கள் தாய் தகப்பன் என்று நினைவுவச்சு உருகிறாங்கள் என்று நினைக்கிறியளோ"

"இன்னும் எப்படி உதவிபெற்று தங்கட தங்கட அலுவல்களை முடிக்கலாம் என்றுதான் இன்னும் தொடர்பில இருக்கிறாங்கள். போதாக்குறைக்கு ரெண்டுபேருக்கும் நல்ல மனிசிமார் வந்து வாய்ச்சிருக்கினம். இவங்கள் அவளவையள் சொல்லுறதைக் கேட்டு தலையாட்டி பொம்மைகளாக மாறிவிட்டாங்கள்"

மதி மெல்ல கதிரையை விட்டு எழும்பி தேத்தண்ணி போட சமையலறைக்குள் சென்றாள்.

கந்தவனம் மெல்ல பழசுகளை நினைத்துப் பார்த்தார்.

வாத்தியாராக இருந்த காலத்தில் எவ்வளவு கஸ்ரப்பட்டு மாதம் கிடைக்கிற சம்பளத்தில் கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து நண்பர்களிடமும் கடன்வாங்கி முதலில் சுதனை லண்டனுக்கு அனுப்பி வைத்தது ஞாபகத்திற்கு வந்தது. பிறகு எட்டு வருடங்கள் ஓடிப்போக அவன்தான் தன்ர செலவில் மதனை கனடாவிற்கு அனுப்பி வைத்தான்.

ஆனால் இப்ப...

மதி தேனீர் கோப்பையை கொண்டு வந்து கந்தவனத்திடம் நீட்டினாள். ஒன்றும் சொல்லாமல் வாங்கிக்கொண்டார்.

"இங்க பாருங்கோ, ரெண்டும் பெடியளாகப் போனதாலதான் எங்களுக்கு இந்த நிலை. கடைசி ஒரு பொம்பிளைப்பிள்ளையையாவது பெத்திருந்தால் எங்கள இப்படி விட்டிட்டு போயிருப்பாளே?"

"என்ன மதி கதைக்கிறாய். பெண் பிள்ளையாய் இருந்திருந்தாலும் அவளும் புருசன் சொல்படிதானே கேட்டு நடக்கவேணும். அவளும் சிலவேளை லண்டன், கனடா என்று புருசனோட போய் செட்டில் பண்ணியிருப்பாள்."

"சும்மா கதைக்காதேங்கோ. எப்பவும் பெண்பிள்ளைகளுக்கு தாய், தகப்பன் மேல பாசம் அதிகம்."

"இனி பழசுகள் கதைத்து என்ன பலன்" மதியின் பேச்சுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்துடன் கந்தவனம் சொன்னார்.

ஆனால், மதியோ விடுவதாக தெரியவில்லை.

"இருபத்தி மூன்று வருசங்களாக கனடா, லண்டன் என்று திரிந்ததெல்லாம் மறந்து போச்சோ."

"சுதனின்ர முதல்பிள்ளை பிறந்த உடனேயே சரக்குத்தூள், அந்தத்தூள், இந்தத்தூள் என்று எல்லாம் அரைத்துக்கொண்டு பிளேன் ஏறியது ஞாபகத்திற்கு வர மறுக்குதே. அங்க போய் ஆறு மாதம் அதுவும் குளிர் காலத்தில ஒன்றுக்கு மேல் இன்னொரு உடுப்பாக போட்டுக்கொண்டு சேவை செய்ததெல்லாம் மறந்துபோச்சோ."

"அப்பவெல்லாம் சுதன் என்ன சொன்னவன், இன்னும் ஒரு ஐந்தாறு வருசங்கள்தான் இங்க நானும் மனுசியும் பிள்ளையும் இருப்பம். பிறகு நாட்டுக்கு வந்து உங்களோடதான் இருப்பம். சொல்லி முடிச்சு அடுத்த வருசம் அடுத்த பேரப்பிள்ளை. பழையபடி சரக்குத்தூள் அரைத்துக்கொண்டு பிளேன் ஏறியது மறந்து போச்சோ."

"நீங்கள் எங்களோடேயே இருங்கோ. நிரந்தர வசிப்பிட விசா எடுத்துத்தாறன் என்று சொன்னவனோ இல்லையோ. நீங்களும் அதற்கென்ன என்று தலையைத் தலையை ஆட்டி என்னையும் அங்க கூட்டிப்போய் ரெண்டு பேருமாக பிள்ளைகளைப் பார்த்து பள்ளிக்கூடம் கூட்டிப்போய் கூட்டிவந்து உணவூட்டி ஐந்து வருசங்களை ஓட்டினது மறந்திட்டுதோ. நாங்கள் ஊருக்கு வர சம்மந்தியாக்கள் போய் நின்று ரெண்டு வருசங்கள் உங்களை மாதிரித்தான் பிள்ளை பார்த்து திரும்ப ஊருக்கே திரும்பி வரவிடாமல் உங்கட மருமகள்காரி தடுத்து வைத்திருந்தது உங்களுக்கு நல்லாத் தெரியும்தானே."

பனி, மழை, வெயில் என்று பார்க்காமல் அப்ப எங்களால உதவி செய்ய முடிஞ்சுது.

"உங்கட கனடா மகனும் போதுமானவரை எங்களிட்ட உதவி பெற்றுவிட்டான். அவனும் ஊருக்கு ஒரு நேரம் திரும்பி வாறன் என்று சொல்லிப்போட்டுதானே போனவன்."

"இப்ப என்ன மதி சொல்லவாறாய்" கந்தவனம் கடுப்புடன் கேட்டார்.

"பிள்ளைகளைப் பற்றி குறை சொன்னால் உடன இவருக்கு கோபம் வந்துவிடும். அவங்கள் சத்தியம் செய்யாக்குறையாக சொல்லிவிட்டுப் போனதைத்தானே நான் சொல்லுறன். இப்ப மாறி நிக்கறாங்கள். போதாக்குறைக்கு மதன் அடுத்த பிள்ளைப்பேறு பற்றி சொல்லியிருக்கிறான். நாங்க ரெண்டு பேரும் இப்ப பிளேனில ஏறி போகக்கூடிய நிலையிலயா இருக்கிறம்?."

"மதன் தெரியப்படுத்த வேணும் எண்டுதான் சொல்லியிருப்பான். அவனுக்கு எங்கட நிலை தெரியும்தானே."

"என்னப்பா சொல்லுறியள். எப்பவும் அவங்கள விட்டுக்கொடுக்கமாட்டியளே."

"அவங்கள் செய்யிறது எல்லாம் சரியெண்டு சொல்லவாறியளோ."

"நான் சரி பிழை சொல்ல வரேல்ல. உனக்கு மாற்றம் ஒன்றே மாறாதது எண்டு தெரியவேணும்."

"எங்களுக்கு வயது போச்சு. நாங்கள் உங்களோட வந்து இருக்கவேணும். இல்லாட்டி, நீங்கள் இங்க வந்து எங்களோட இருக்கவேணும் எண்டு உங்கட ரெண்டு ஆசை மகன்களிட்டையும் கேட்டபோது என்ன சொன்னவங்கள் எண்டு மறந்து போனியளோ."

"நீ சொல்லவாறது எனக்கு நல்லா விளங்குது. அதுக்காக என்னோட விதண்டாவாதம் கதைச்சு என்ன பிரயோசனம்."

"எங்களுக்கெல்லாம் இனி ஊரில வந்து இருக்க இயலாது. பிள்ளையளும் இங்க படிக்குது. இப்ப நாங்கள் இந்த நாட்டு சூழ்நிலைக்கு பழகிப்போட்டம். உங்களையும் என்னையும் கூப்பிட்டு தங்களோட வைத்துப் பார்ப்பதும் கஸ்டம், வயோதிபர் இல்லத்தில் போய் இருங்கோ. மாதா மாதம் காசு கட்டிறம் எண்டு சுதன் சொல்ல மதன் ஆமோதித்தவனோ இல்லையோ."

மதியின் கண்கள் கலங்கிவிட விக்கி விக்கி அழுதாள். கந்தவனம் மெல்ல எழும்பி மதி அருகே சென்று அவளின் தலையைத் தடவினார். இவங்கள் ரெண்டு பேரையும் நம்பினது உண்மை. ஆனால், அவங்களை நம்பி ரெண்டு பேரையும் நாங்கள் பேறேல்ல.

எனக்கு நீ, உனக்கு நான் எண்டு இருக்கிறம். காலம் முடியும் வரை அப்படியே இருந்துவிட்டுப் போவம். கொள்ளி வைக்க வாராங்களோ தெரியாது. முதல்ல போறவருக்கு மற்றவர் கொள்ளி வைக்க வேண்டியதுதான். சொல்லும்போது கந்தவனத்தின் கண்கள் சிவந்தன. அதையும் மதிக்குக் காட்டிக்கொள்ளாமல் மறுபக்கம் திரும்பிக்கொண்டார்.

தூறலாக ஆரம்பித்த மழை பெரிதாகக் கொட்டியது. வெளியே நின்ற போர்ட் பியஸ்டா காரின் மேல்தளத்தில் கொட்டிய மழையின் சத்தத்தைக் கேட்டு வெளியே எட்டி காரைப் பார்த்தார் கந்தவனம். ●

# சிம்புவை வில்லனாக ஏற்றுக் கொள்வார்களா?



கன்னட படத்தின் தமிழ் ரீமேக்கில், ஆர்யாவுக்கு வில்லனாக சிம்பு நடிக்கிறார். 'வந்தா ராஜாவாத்தான் வருவேன்' படத்தைத் தொடர்ந்து, வெங்கட் பிரபு இயக்கத்தில் 'மாநாடு' படத்தில் நடிக்க இருக்கிறார் சிம்பு. இதற்கிடையே ஓவியா நடித்த '90 எம்.எல்.' படத்திற்கு இசையமைத்ததோடு, அப்படத்தில் கௌரவத் தோற்றத்திலும் வந்து போனார். தற்போது, ஹன்சிகா நடித்துவரும் 'மாநாடு' படத்தில், ஸ்பெஷல் கேரக்டர் ஒன்றில் நடிக்கவும் அவர் ஒப்பந்தமாயிருக்கிறார். சமீபகாலமாகக் குண்டாகக் காட்சி தரும் சிம்பு, மீண்டும் தனது உடலை பழைய மாதிரி மெலிய வைக்க சிறப்பு பயிற்சிகள் செய்வதற்காக லண்டன் சென்றுள்ளார். லண்டனில் இருந்து திரும்பியதும் அவர் 'மாநாடு' படத்தில் நடிக்கத் தொடங்குவார். இந்நிலையில், ஸ்டுடியோ கிரீன் நிறுவனத்துக்காக ஞானவேல்ராஜா தயாரிக்கவுள்ள புதிய படமொன்றில் சிம்பு நடிக்க உள்ளார். ஆனால், இப்படத்தில் நாயகனாக அல்ல, வில்லனாக நடிக்க இருக்கிறாராம்.

ஏற்கனவே தமிழில் நாயகனாக அதிக படங்களில் நடித்து வரும் விஜய் சேதுபதி, விக்ரம் வேதா படத்தில் மாதவனுக்கு வில்லனாகவும், 'பேட்ட' படத்தில் ரஜினிக்கு வில்லனாகவும் நடித்து பரபரப்பை ஏற்படுத்தினார். நாயகன் கதாபாத்திரத்தைப் போலவே வில்லன் வேடமும் விஜய் சேதுபதிக்கு நன்றாகவே பொருந்தியது. ஆனால், சிம்புவுக்கு வில்லன் வேடம் எந்தளவுக்கு செட்டாகும் என்பது தெரியவில்லை. இதுவரை அவரை நாயகனாகவே பார்த்துப் பழகிய ரசிகர்கள், அவரை வில்லனாக ஏற்றுக் கொள்வார்களா?.

## அமலா பால் இப்போது படுகவர்ச்சி!



நடிகை அமலா பால் கடற்கரையில் எடுக்கப்பட்ட தனது புகைப்படங்களை தனது 'இன்ஸ்டாகிராம்' பக்கத்தில் வெளியிட்டுள்ளார். விவாகரத்திற்குப் பிறகு மீண்டும் சினிமாவில் நடித்து வரும் அமலா பால், அடிக்கடி பயணங்கள் செய்வதையும் வாடிக்கையாக வைத்திருக்கிறார். அவ்வாறு செல்லும் இடங்களில் எடுத்துக் கொண்ட தனது புகைப்படங்களையும் தனது சமூகவலைதளப் பக்கத்தில் வெளியிட்டு வருகிறார். சமயங்களில் அவை அளவுக்கதிகமான கவர்ச்சியாக இருப்பதாக ரசிகர்கள் விமர்சித்து வருகின்றனர். சில புகைப்படங்களை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ளார் அமலா பால். வழக்கம் போல் அதிலும் அவர் உள்ளாடை தெரியும்படி படுகவர்ச்சியாகத் தான் உடையணிந்துள்ளார்.

## 'மக்கள் செல்வி' வரலட்சுமி சரத்குமார்



பிறந்தநாளை முன்னிட்டு 'டேனி' படத்தின் போஸ்டரில் வரலட்சுமி சரத்குமாருக்கு 'மக்கள் செல்வி' பட்டம் வழங்கப்பட்டுள்ளது. நடிகர் சரத்குமாரின் முதல் மனைவியின் மகளான வரலட்சுமி, சினிமாவில் நடிப்பதைத் தாண்டியும் சமூக சேவையிலும் ஈடுபட்டு வருகிறார். அரசியலைக் கற்றுக் கொண்டு அதில் இறங்கும் திட்டத்தில் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் தனது 34வது பிறந்தநாளைக் கொண்டாடினார். வரலட்சுமி போலீசாக நடிக்கும் 'டேனி' படத்தினை சந்தான மூர்த்தி இயக்குகிறார்.

ஏற்கனவே, நடிகர் விஜய் சேதுபதியை 'மக்கள் செல்வன்' என்ற பட்டத்துடன் ரசிகர்கள் அழைக்கின்றனர். நாயகியாக அறிமுகமானபோதும், சர்கார், சண்டைக்கோழி 2 உள்ளிட்ட சில படங்களில் வரலட்சுமி, வில்லியாக நடித்திருந்தார். அப்படங்களில் அவரது நடிப்பு பெரிதும் பேசப்பட்டது. தொடர்ந்து வில்லி மற்றும் வித்தியாசமான கதாபாத்திரங்களாக தேர்வு செய்து நடித்து வருகிறார். அவர் கை நிறைய படங்கள். மாரி 2 படத்தைத் தொடர்ந்து, கன்னி ராசி, சக்தி, அம்மாயி, நீயா-2, பாம்பன், வெல்வெட் நகரம், காட்டேரி, ராஜபார்வை, கன்னித்தீவு மற்றும் 'டேனி' என 10க்கும் மேற்பட்ட படங்களில் வரலட்சுமி நடித்து வருகிறார்.


## விஜய் - நயன் சர்ச்சில் நடந்த திருமணம்



'தளபதி' படப்பிடிப்பில் நயன்தாரா கலந்து கொள்கிறார். அட்லீ இயக்கத்தில் புதிய படமொன்றில் விஜய் நடித்து வருகிறார். ஏற்கனவே தெறி, மெர்சல் என இரண்டு வெற்றிப் படங்களைக் கொடுத்த கூட்டணி என்பதால், இப்படம் மீது ரசிகர்களுக்கு எதிர்பார்ப்பு எகிறியுள்ளது. இன்னும் பெயரிடப்படாத இப்படம் 'தளபதி 63' எனக் குறிப்பிடப்பட்டு வருகிறது. இப்படத்தில் விஜய்க்கு ஜோடியாக நயன்தாரா நடிக்கிறார். சென்னையில் தற்போது இப்படத்தின் படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.

நயன் நடிக்கும் முதல் காட்சி கிண்டியில் உள்ள சர்ச் ஒன்றில் படமாக்கப்பட்டது. நயன் மணக்கோலத்தில் கலந்து கொண்டார். விஜய்-நயன் திருமணக் காட்சி அது. ஏற்கனவே அட்லீ இயக்கத்தில் நயன்-ஆர்யா நடித்த ராஜாராணி படத்தின் முதல் காட்சியும் சர்ச் ஒன்றில் திருமணம் நடைபெறுவது போல் தான் இருக்கும். அப்படம் பல்வேறு விமர்சனங்களை எதிர்கொண்ட போதும், மாபெரும் வெற்றியடைந்தது குறிப்பிடத்தக்கது.

## ஒருவிதமாக விஷால் கைப்பிடித்து விட்டார்!



அனிஷாவுடன் திருமணம் நிச்சயமானதால், ஆசிர்வதிக்கப்பட்டதாக நடிகர் விஷால் தெரிவித்துள்ளார். மேலும் மோதிரம் மாற்றிய பிறகு இருவரும் எமோஷனல் ஆகிவிட்டனர். நடிகர் விஷாலுக்கும், நடிகை அனிஷா ரெட்டிக்கும் ஹைதராபாத்தில் சமீபத்தில் திருமண நிச்சயதார்த்தம் நடந்தது. பெற்றோர், நண்பர்கள், நலம் விரும்பிகள் முன்னிலையில் அவர்கள் மோதிரம் மாற்றிக் கொண்டனர். இந்நிலையில் அனிஷா தனக்கு கிடைத்தது ஆசிர்வாதம் என்கிறார் விஷால். அனிஷா கிடைத்ததில் மகிழ்ச்சியாகவும், ஆசிர்வதிக்கப்பட்டதாகவும் உணர்கிறேன். லவ் யூ அனிஷா என்று ட்வீட் செய்துள்ளார் விஷால். நிச்சயதார்த்தத்தின்போது மோதிரங்களை மாற்றிய பிறகு அனிஷாவும், விஷாலும் எமோஷனல் ஆகிவிட்டனர். ஆர்யாவுக்கு திருமணமான கையோடு நண்பர் விஷாலுக்கு நிச்சயதார்த்தம் நடந்துள்ளது. அவருக்கு ரசிகர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

## ஜி.வி.பிரகாஷ் பக்கம் காற்று!



ராஜீவ் மேனன் இயக்கத்தில் ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் ஜி.வி. பிரகாஷ் குமார் நடித்து வெளியான படம் 'சர்வம் தாளமயம்'. இந்தப் படத்துக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. இதைத் தொடர்ந்து, த்ரிஷா இல்லனா நயன்தாரா பட இயக்குநர் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் 'காதலைத் தேடி நித்யானந்தா' எனும் 3 டி படத்தில் நடித்து வருகிறார்.

இயக்குநர் எழில் இயக்கவிருக்கும் படத்திலும் நடிக்க இருக்கிறார். தவிர, அறிமுக இயக்குநர் கமல் பிரகாஷ் இயக்கத்தில் ரொமாண்டிக் காமெடி ஜானரில் ஒரு படத்தில் நடித்து வருகிறார். அந்தப் படத்தின் அறிவிப்பு வரும்போதெல்லாம் முரட்டு 'சிங்கிள்'களுக்கான படம் எனக்குறிப்பிட்டிருந்தனர்.

இந்நிலையில், ஆரா சினிமாஸ் சார்பாக மகேஷ் கோவிந்தராஜ் தயாரிக்கும் இப்படத்திற்கு 'ஐ எம் சிங்கிள்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. எழில் இயக்கத்தில் அவர் நடிக்கும் படத்தின் படப்பிடிப்பும் இந்த மாதம் தொடங்குகிறது. '100% காதல்', 'ஜங்கரன்', '4ஜி', 'அடங்காதே', 'குப்பத்து ராஜா', 'ஜெயில்', 'வாட்ச்மேன்' உள்ளிட்ட படங்கள் ஜி.வி.பிரகாஷின் கைவசம் உள்ளன.

சிவ தியாகராஜா

# இனிய நண்பர் வரதருக்கு ஓர் இறுதி அஞ்சலி




**“வரதரோடு நெருக்கமாகப் பழகப் பழக, அவரது பரந்து பண்பட்ட மனிதநேயப் பண்புகள் வியக்க வைத்தன. வாய்மை, நேர்மை, நன்றி மறவாமை வரதர் பேணிக் கடைப்பிடித்த மனிதநேயப் பண்புகள்”**

கண்கள் மூடுகிறேன். சிரித்த முகத்துடனும், வனப்பான வதனத்துடனும் வரதகுமார் காட்சி தருகிறார். கண்களைத் திறக்கிறேன், அவர் நம்மிடையே இன்று இல்லை என்ற உண்மை உள்ளத்தை ஊடுருவி, நெஞ்சை நெக்குருக்கி, கண்களில் நீரை வரவழைக்கிறது.

1987-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17-ம் திகதி, செவ்வாய்க்கிழமை, இடம் ஹீத்திரோ விமான நிலையம். விமான ஓடு பாதையில் 15 இலங்கைத் தமிழர்கள் தாங்கள் அணிந்திருந்த உடைகளை எல்லாம் களைந்துவிட்டு, வெறும் ஜட்டியோடு பெப்ரவரி மாதக் குளிரில் நடுங்கிய வண்ணம் நிற்கிறார்கள். பொலிஸ்காரர்களும், பத்திரிகை நிருபர்களும் அவர்களை வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பிரித்தானிய அரசு அவர்களை இலங்கைக்கு நாடு கடத்துவதை எதிர்த்து அவர்கள் மேற்கொண்ட இந்த நடவடிக்கை, இருபதாம் நூற்றாண்டில் பிரித்தானியாவில் நிகழ்ந்த அதிசய நடவடிக்கைகளில் ஒன்று.

அவர்களின் இந்தச் செய்கை காரணமாக அவர்களை பொலிஸார் கைது செய்தமைக்கும் - அவர்கள் செல்லவிருந்த விமானப் பயணம் தடைப்பட்டமைக்கும்- அவர்களை அவசரமாக நாடுகடத்த முற்பட்ட அரசின் செயற்பாடு பற்றி அன்றைய மாலைப் பத்திரிகைகள் வெளியிட்ட செய்திகளுக்கும் - பிரித்தானிய அரசின் ஆயுத உதவியோடு ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ளும் இனப்படுகொலைக்குத் தப்பி, அகதிகளாக வந்த தமிழர்களை நாடு கடத்துவதற்குத் தடை விதித்த ஹைகோர்ட் உத்தரவிற்கும் - பின்னணியிலிருந்து செயற்பட்டவர் பிரித்தானிய தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் குழுவின் அமைப்பாளராக இருந்த நண்பர் வரதகுமார்.

திரு.வரதகுமார் யாழ்ப்பாணம் மானிப்பாயில் பிரபலமான ஒரு குடும்பத்தில் பிறந்தவர். குடும்ப இல்லத்தின் பெயர் ‘குமார புரம்’. அவரது தந்தையார் மு.வைரமுத்து. இலங்கை அரச பணியில் சிவில் சேவை (C.C.S) பட்டம் பெற்று நீண்ட காலம் கொழும்பில் பணியாற்றியவர். சில காலம் இலங்கை தேசாதிபதியாகவிருந்த சேர் ஒலிவர் குணதிலகாவின் அந்தரங்க காரியதரிசியாகப் பணியாற்றியவர். அவரது பாரியாரின் பெயர் பூமகாலட்சுமி.

திரு.வரதகுமார் 1947-ம் ஆண்டு மே மாதம் 11-ந்திகதி பிறந்தார். இரு சகோதரர்களுக்கு இடையே இரண்டாவது பிள்ளையாகப் பிறந்த வரதகுமார் தனது ஆரம்ப கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், மேற்படிப்பை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் பயின்று, பட்டப்படிப்பை தமிழ் நாட்டில் சென்னை தாம்பரத்திலுள்ள சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் முடித்துக் கொண்டு 1980களில் பிரித்தானியா வந்தடைந்தார்.

இலங்கைக்கு பிரித்தானியர்களிடமிருந்து சுதந்திரம் கிடைத்த நாள் முதலாக சிங்கள மேலாதிக்கம் தமிழ் மக்களை ஒடுக்கி, நசுக்கி, அவர்களின் தாயகங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றி, அவர்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தி வருவதை எதிர்த்துக் கொதித்தெழுந்த மனிதர்களில் அவரும் ஒருவர். ‘இலங்கைத் தமிழ் அரசியல் தலைவர்களில் பெரும்பாலானோர் தங்கள் சொந்த நலன் கருதி அரசியல் செய்கிறார்களே ஒழிய, மக்களுக்காக மனத்தூய்மையுடன் செயல்படுவோர் ஒரு சிலரே’ என்பது அவர் கருத்து.

இலண்டன் வந்த வரதகுமார், தன்னைப் போல் மக்கள் நலனில் அக்கறை கொண்ட திரு.கந்தசாமி (இலங்கையில் செயற்பட்ட காந்தீய அமைப்பில் பணியாற்றியவர்), அருட்தந்தை பத்திநாதர் இருவருடனும் இணைந்து 1981-ம் ஆண்டில் இலண்டனில் ‘தோண்ரன் ஹீத்’ என்ற இடத்தில் காரியாலயம் அமைத்து ‘தமிழர் தகவல் நடுவம்’ (Tamil Information Centre) என்ற நிறுவனத்தை ஆரம்பித்தார்.

இது மனித உரிமைகளுக்காக உழைக்கும், இலாப நோக்கமற்ற ஒரு நிறுவனமாகும். இலங்கையில், ஐக்கிய இராச்சியத்தில், மற்றும் எங்கெல்லாம் தமிழ் பேசும் மக்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் அம்மக்களின் உரிமைளைப் பெற்றுத்தரும் நோக்குடன் இந்த நிறுவனம் இயங்கி வந்திருக்கிறது. மனித உரிமைகளைப் பேணுவதற்கும், இலங்கை வாழ் தமிழ் மக்கள் தங்கள் சுய நிர்ணய உரிமைகளைப் பெறுவதற்காக உழைப்பதற்கும் இந்த நிறுவனம் உறுதிபூண்டிருக்கிறது.

இது தவிர இலங்கை வாழ் தமிழர்களின் பிரச்னைகள் பற்றிய தகவல் சேமிப்பு மையமாகவும் இது விளங்கி வந்திருக்கிறது. இன்று வரை 50,000க்கும் மேற்பட்ட பத்திரங்களைக் கொண்ட ஆவணத் தொகுப்பு தமிழர் தகவல் நடுவத்திடம் உள்ளது.

இந் நிறுவனத்தின் ஆரம்ப காலத்தில், இலங்கையில் மலையகத்தில் வாழும் இந்திய வம்சாவழித் தமிழர்களின் அவல வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் முகமாக வெளியிட்ட ‘சொர்க்கத்திலிருந்து துரத்தப்பட்டமை’ (Banishment from Paradise) என்ற குறும்படம் பிரபலமாகப் பேசப்பட்டது.

1983 ஜூலை மாதத்தில் அரசினால் ஏவிவிடப்பட்ட சிங்களக் காடையர்கள் தமிழ் மக்களைக் கொன்று குவித்தும், அவர்களது உடமைகளைத் தீக்கிரையாக்கியும் கொண்டிருந்த சமயத்தில் இலண்டன் பி.பி.சி தொலைக்காட்சி நிருபர் மேற்கொண்ட பேட்டியில் ‘தமிழர்களைக் கொன்று குவிக்கும் பேரினவாத அரசைப்பற்றி’ அழுத்தமாக, ஆணித்தரமாக வெளியுலகிற்கு எடுத்துரைத்தார் வரதகுமார்.

1987-ம் ஆண்டில் இலண்டனிலிருந்து இயங்கி வந்த தமிழர் தகவல் நடுவம் மூடப்பட்டு அதன் கிளைகள் தமிழ் நாட்டில் சென்னை, மதுரை ஆகிய நகரங்களில் நிறுவப்பட்டு இயங்கி வந்தன. பிரபல பத்திரிகையாளர் எஸ்.சிவநாயகம் ‘தமிழர் தகவல்’ என்ற சஞ்சிகையை ஆரம்பித்து அதன் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

இலண்டனில் தங்கியிருந்த வரதகுமார், இலண்டனில் இயங்கி வந்த தமிழ் அகதிகள் புனர்வாழ்விற்கான குழுவின் (Tamil Refugee Action Group: TRAG) அமைப்பாளராக (Coordinator) இணைந்து கொண்டார். அடுத்த பத்து ஆண்டுகள் அந்த நிறுவனத்தில் பணியாற்றி அகதிகள் நலனுக்காக இரவும் பகலும் உழைத்தார். அக்காலகட்டத்தில் ‘அவர் பார்க்காத சட்ட நிபுணர்கள் இல்லை; ஏறாத கோர்ட்டுப் படி இல்லை’ என்பார்கள்.

1991-ம் ஆண்டில் அவரது பழைய நண்பர்கள் காலமாகி, தமிழர் தகவல் நடுவத்தின் தமிழ் நாட்டுக் கிளைகள் மூடப்பட்ட போது, இலண்டனில் இலங்கைத் தமிழர் அதிகமாக வாழ்கின்ற ‘ஈஸ்ட்ஹாம்’ (East-ham) பகுதியில் ‘தமிழ் இல்லம்’ முகவரியில் தமிழர் தகவல் நடுவத்தை மீண்டும் பிரித்தானியாவில் நிறுவிக் கொண்டார் வரதகுமார். சில ஆண்டுகள் தமிழர் தகவல் நடுவத்திலும், தமிழர் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்திலும் பணி புரிந்தார். காலப் போக்கில் புனர் வாழ்வு அமைப்பின் பணிகளை தமிழர் தகவல் நிறுவனத்துடன் இணைத்துக் கொண்டார். அவரது இயக்கத்தின் கீழ் தமிழ் மக்களின் வாழ்வியல் பிரச்சனை பற்றிய பல நூல்கள் வெளியிடப்பட்டன; ‘மீட்சி’ என்ற மாத இதழும் வெளிவந்தது.

2004-ம் ஆண்டில் கிங்ஸ்ரன் நகருக்கு மாற்றப்பட்ட தமிழர் தகவல் நடுவம் புனரமைப்பு செய்யப்பட்டு பல புதிய உப நிறுவனங்களை அமைத்துக் கொண்டது.


2005-ம் ஆண்டில் சமூக அபிவிருத்தி நடுவம் (Centre for Community Development) நிறுவப்பட்டது.

அடுத்த 2006-ம் ஆண்டில் முதியோர் வலுவூட்டல் திட்டம் (Elders Empowerment Programme) ஆரம்பிக்கப்பட்டது. 2014 முதல் தமிழர் பாரம்பரிய வரலாற்று அலகு (History and Heritage Unit); தமிழ் மகளிர் முன்னேற்ற அமைப்பு (Tamil Womens Development Forum); மன நலத் திட்டம் (Healthy Mind Programme) ஆகிய அமைப்புகள் நிறுவப்பட்டு அவை இன்றுவரை சிறப்பாக இயங்கி வருகின்றன. பலதரப்பட்ட நோக்குகள் கொண்ட இந்த நிறுவனங்கள் வரதகுமாரின் பரந்த சமூக நல நோக்கின் பிரதிபிம்பங்கள்.

2005-ம் ஆண்டில் எனது நண்பன் விசாகன் மூலம் வரதகுமாரின் அறிமுகம் எனக்குக் கிடைத்தது. அதற்கு அடுத்த ஆண்டில் முதியோர் வலுவூட்டல் திட்டத்தில் சேர்ந்த பின்னர் ஒவ்வொரு வியாழக்கிழமையும் அவரைச் சந்தித்து உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. அவரோடு நெருக்கமாகப் பழகப் பழக அவரது பரந்த பண்பட்ட மனித நேயப் பண்புகள் வியக்க வைத்தன. வாய்மை, நேர்மை, நன்றி மறவாமை அவர் பேணிக் கடைப்பிடித்த மனித நேயப்பண்புகள்.

இம்மாதம் 7ந்திகதி எங்கள் சங்கத்திற்கு வருகை தந்து மட்டக்களப்பில் ஆரம்பித்திருக்கும் தமிழ் முதியோர் வலுவூட்டல் திட்டம் பற்றிப் பேசிய வரதர், அடுத்த புதன்கிழமை 13ந்திகதி மாலை சடுதியாகக் காலமாகிவிட்டார் என்ற செய்தி நம்மையெல்லாம் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியிருக்கிறது.

**“சீரிய நெற்றி எங்கே?**
**சிவந்த நல் இதழ்கள் எங்கே?**
**கூரிய விழிகள் எங்கே?**
**குறுநகை போனதெங்கே?**
**நேரிய பார்வை எங்கே?**
**நிமிர்ந்த நின் நடைதான் எங்கே?**
**நிலமெலாம் போற்றும் தோற்றம்**
**நிழலாக மறைந்த திங்கே!**
**வரதரா மறைந்தார்; இல்லை!**
**வாய்மைக்கு மரணம் இல்லை.**
**அழிவில்லை; முடிவுமில்லை**
**அன்புக்கு மரணம் இல்லை!**



மனம் திறந்து பேசுகிறார் ஹோமியோபதி வைத்திய நிபுணர் **ஆர்.தியாகராஜன்**

# பதற்றம்




**ஹோ**மியோபதி மருத்துவம் மனித உடலில் தோன்றும் நோய்களைவிட ஒருபடி மேலே இருந்து மனித உடலை கட்டுக்குள் வைத்திருக்கும், மனதில் தோன்றும் மாற்றங்களுக்கும், பிரச்சினைகளுக்கும் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்து சிகிச்சை அளிப்பதாலேயே 200 வருடங்களுக்கு மேலாக தலைசிறந்த *HOLISTIC* மருத்துவ முறையாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. *HOLISTIC APPROACH*- ஒருங்கிணைந்த அணுகுமுறை மருத்துவத் துறையில் அரிதாகிவிட்டதாலேயே உலக மனித சமுதாயம் நோய்களின் காட்டாற்று வெள்ளத்தில், சிக்கி, தவித்துக் கொண்டிருக்கிறது. மீட்கப் புறப்பட்ட மருந்துகளும், மருத்துவ ரட்சகர்களும் தங்களுடைய குறுகிய பிளவுபட்ட (*Narrow Fragment-Specialist Approach*) அணுகுமுறையால், நோய் குழப்பங்களை உருவாக்கி வாழ்நாள் முழுவதும் மீளாத் துயரில் மிதக்க விடுகின்றனர். நான், என்னுடைய அணுகுமுறை, குணநலன்கள், நடை உடை பாவனை இவற்றாலேயே பிறரால் அறியப்படுகிறேன். இவை அனைத்தும் என்னுடைய மனதின் செயல்பாடுகளாகும்.



உடலில் ஏதாவது குறையோ, நோயோ இருந்தால் கவர்ச்சியான உடை மற்றும் அலங்காரப் பூச்சுக்களால் பிறர் அறியாதபடி மூடி மறைத்துவிடலாம். சவத்தைக்கூட உயிரோட்டத்துடன் அலங்காரம் செய்து அழகு பார்க்கும் தொழில்நுட்ப யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால், ஒருவரின் மனதின் செயல்பாடுகளை பிறருக்கு தெரியாமல் மறைப்பது, ஒழிப்பது மிகவும் கடினம். ஒரு மருத்துவரிடம் சிகிச்சை பெறுவதற்காக அணுகும்போது, அவர் நோயாளியின் நுரையீரல் மற்றும் இதய செயல்பாட்டினை ஸ்டெதஸ்கோப் வழியாக அறிகின்றார். இரத்தப் பரிசோதனை, *Scan* போன்ற பரிசோதனைகள் மூலமாகவும் அவரின் உடம்பின் உள்ளே சென்று பிரச்சினைகளை ஆராய்ந்து சிகிச்சை அளிக்க முயற்சி செய்கின்றார். பெரும்பாலும் மனிதனின் மனம் வழியே நோயாளிக்குள் சென்று சிகிச்சை அளிப்பது அரிதாகவே காணப்படுகிறது. ஆனால், ஒரு ஹோமியோபதி மருத்துவருக்கு மனதின் வழியே அணுகும் (*Psychosomatic-Holistic Approach*) செயல்திட்டம் மிகமிக அவசியம். ஹோமியோபதி வைத்திய முறையின் விதியும் அதுவே.



**Holistic Approach ஆச்சரியப் பலனளித்த ஒரு சம்பவம்**

சில வருடங்களுக்கு முன்பு சுமார் இருபத்து ஐந்து வயதான இளைஞர் ஒருவர் மிகுந்த மனப் பதற்றத்துடனும், உடல் சோர்வுடனும் லண்டனில் என்னைச் சந்தித்தார். நேரில் வருமுன்பே அவரின் தாயார் மகனின் நிலை குறித்து மிகுந்த கவலையுடன் என்னிடம் பேசியிருந்தார். மகன் நன்கு படித்திருப்பதாகவும், படிப்பிற்குரிய தரமான வேலை அமையவில்லை என்றும், தற்சமயம் பார்மசி ஒன்றில் அதிருப்தியுடன் வேலை செய்து கொண்டிருக்கிறார் என்றும் கூறினார்.

மேலும், தந்தைக்கு அதிக வேலைப்பளு ஆதலால், தாயிடமே அனைத்து விஷயங்களையும் பகிர்ந்து கொள்வதாகக் கூறியிருந்தார். தாயார் விபரித்தபடியே மகனுடைய நிலைமை இருப்பதை நேரில் கண்டேன். அவர் தனக்கு 'பேஸ்த்' அடித்த மாதிரி இருப்பதாகக் கூறினார். எந்நேரமும் பதற்றமாகவும், பயமாகவும், எதிர்காலம் குறித்த நம்பிக்கை இன்றி குழப்பமாகவும் இருப்பதாகக் கூறினார். சைவ உணவு பழக்கமுடைய அவர் நண்பர்கள் யாருமின்றி தானுண்டு, தன் வேலையுண்டு என்று வாழ்ந்து கொண்டிருந்தவர். சுமார் இரு வருடங்களாக 'பார்மஸி' கடைக்கு வேலைக்குப் போகத் தொடங்கிய பின்தான் பிரச்சினை ஆரம்பித்துள்ளது. திங்கள் முதல் சனி வரை ஆறு நாட்களும் காலை முதல் மாலை வரை வேலை... வேலை... வீட்டிலிருந்து சாப்பாடு வேலைக்குக் கொண்டு போனாலும், பெரும்பாலான நாட்கள் வேலை முடியும் வரை ஓய்வின்றி சாப்பிட நேரமின்றி, வீட்டுக்கே திரும்பவும் சாப்பாட்டைக் கொண்டு வந்து விடுவார். வேலைத் தளத்தில் டீ, கோப்பி போன்ற பானங்களை அரிதாகவே குடிப்பார்.

முதலாளியும் தன்னுடைய பங்குக்கு வேலை கொடுத்துக் கொண்டே இருப்பார். தண்ணீர் குடிப்பது கூட குறைந்துவிட்டது. உடல் படிப்படியாக உணவின்மையால் சக்தி இழக்கத் தொடங்கியது. சோர்வுற்ற உடல், மனதின் அசுர வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல், மேலும் சோர்வடைந்து போனது. தன்னுடைய அவசரத்துக்கு ஒத்துழைக்க முடியாத, தன்னுடலைக் கண்டு அவருடைய மனமும் பதற்றம் அடைந்தது. பயந்து குழம்பிப் போயிற்று.

இப்படித்தான் அவருக்குப் 'பேஸ்த்' அடித்தது. இடம்-நாள்-நேரம் பாராது தொடர்ச்சியாக ஒரு செயலில் ஈடுபடும்போது திடீரென உடல் சக்தி இழந்து சோர்வுற்று விடும் (*No Energy-Exhausted Status*) இந்த நிலையில் மனமும் களைப்புற்று சிந்திக்கும் திறனற்று குழம்பி விடும். (*Confused*). கம்பியூட்டர் யுகத்தில் வீடியோ கேமிலும், பேஸ்-புக்கிலும் மூழ்கித் திளைக்கும் அன்பர்களுக்கு இந்த ஆனந்த *Exhausted* அனுபவம் அடிக்கடி ஏற்பட்டிருக்கும்.

சிகிச்சைக்கு வந்திருந்த இளைஞருக்கு நாள்தோறும் தண்ணீர் மற்றும் திரவ பானங்கள் குறிப்பிட்ட இடைவெளியில் அருந்துமாறும், குறிப்பிட்ட நேரத்துக்கு வேலைத்தளத்தில் மதிய உணவு உட்கொள்ளுமாறும் ஆலோசனை கூறி ஹோமியோபதி மருந்துகளும் பரிந்துரை செய்தேன். ஒரு வருட தொடர் சிகிச்சைக்குப் பின் உடலும் மனமும் இயல்பு நிலைக்குத் திரும்பியது. உற்சாகத்துடன் பொருத்தமான, புதிய வேலையும் தேடிக் கொண்டார். அடுத்தடுத்த வருடங்களில் திருமணமும் நடைபெற்று, குழந்தைகளும் பெற்று குதூகலமாக சமுத்திர சாகரத்தில் நீந்திக் கொண்டிருக்கிறார்.

தற்கால இணைய உலகில், உலாவும் இளைஞர்களும், யுவதிகளும், குழந்தைப் பிள்ளைகளும், தாத்தா பாட்டிகளும் அபரிமிதமான தகவல் தாக்குதலால் தொடர் பதற்றமுற்று தூக்கமின்றி தவிக்கின்றார்கள். சாதாரண தலைவலியைக்கூட - மூளை புற்றுநோயாகவும், அஜீரணத்தை - மாரடைப்பாகவும், கைகால் விறைப்பதை -பக்கவாதமாகவும் கற்பனை செய்து கொண்டு மருத்துவர்களுக்கும், மருத்துவ உலகிற்கும் வித்தை காட்டும் மனநோயாளிகளாக, ஒருவித பதற்றத்துடன் உலாவிக் கொண்டிருக்கிறார்கள்.

'பேஸ்-புக்'கில் பதிவேற்றும் படங்களுக்கு '*LIKE*' வரும்வரை பதற்றத்துடன் நித்திரையைத் தொலைத்தவர்கள் அநேகர். 'வாட்ஸ் அப்' குரூப்பில் வாக்குவாதங்கள் ஏற்பட்டு குரூப்பிலிருந்து வெளியேற்றப்படுவதால், அமைதி இழப்பவர்கள் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கிறது.




'செல்' போன்களின் வருகையும், 'செல்பீ' மோகமும் ஏற்படுத்தும் உயிர் இழப்புகளும் நாள்தோறும் கூடிக்கொண்டே போகின்றது. ஒரு மணி நேரத்தில் ஒருவரால் குறிப்பிட்ட அளவு வேலை மட்டுமே செய்ய முடியும். ஒரு வேலை செய்யக்கூடிய நேரத்தில் ஒன்பது வேலைகளைச் செய்ய முயற்சித்தால், பதற்றம் மட்டும்தான் உண்டாகும். ஒரு வேலையை தொடங்கக்கூட முடியாது. மனம் பதறிக்கொண்டே இருக்கும். குழம்பிப் போய்விடும். உடலும் சோர்வுற்றுவிடும். சோர்வு நிலையே நோய்க்கான முதல்படியாகும்.

சரியான திட்டமிடுதலும், தனித்துவமான ஆலோசனையுடன் கூடிய- *Holistic Approach* - ஒருங்கிணைந்த ஹோமியோபதி மருத்துவம் நூறுவீத தீர்வைக் கொடுக்கும். ●

**மேலதிக ஆலோசனைகளுக்கு**
**020 8144 1553**



மாதவிடாய் சீரமைப்பு சிகிச்சை
MRT
Menstrual Regulation Treatment
ஒழுங்கற்ற மாதவிடாய்
Irregular Menstruation
ஹார்மோன் குறைபாடுகள்
Hormone Defects
அதீத ரத்தப்போக்கு
Over Bleeding
கர்ப்பமாவதில் சிக்கல்
Infertility
Normal ovary
Polycystic ovary
PCOD
சினைப்பை நீர் கட்டி
சிறப்பு சிகிச்சைகள்
உயர் இரத்த அழுத்தம் (B.P/Hyper Tension)
கொலஸ்ட்ரால் (Cholesterol)
சிறுநீரக கோளாறுகள் (Kidney Diseases)
மூட்டு வலி (Arthritis)
தோல் வியாதிகள் (Skin Diseases)
ஹார்மோன் பிரச்சனைகள் (Hormone Disorders)
மாதவிடாய் கோளாறுகள் (Menses Disorders)
செக்ஸ் பிரச்சனைகள் (Sex Disorders)
குழந்தையின்மை (Infertility)
டயபட்டிஸ் (Diabetes)
பி.சி.ஓ.எஸ்.–ஆல் பாதிக்கப்பட்டு மன அழுத்தத்துக்குத் தள்ளப்படுபவர்கள்
34%
70%
பி.சி.ஓ.எஸ். பாதிப்பு ஏற்பட்டதே தெரியாமல் வாழும் பெண்கள்
உடல் எடை அதிகரித்தல்
Obesity
முகப்பரு
Pimples
தலைவலி
Headache
சரியான தூக்கமின்மை
Sleepless
முடிகொட்டுதல்
Hair Fall
உயர்தர மருத்துவம் → பாதுகாப்பான மருந்துகள் → விரைவான சேவை
HOMOEO CARE
இலவச மருத்துவ ஆலோசனைக்கு
0208 144 1553
30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்
0044 7833341693
homoeocare
www.homoeocare.com
homoeocare@rediffmail.com

உ

# பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்

# THE FEDERATION OF SAIVA (HINDU) TEMPLES U.K.


200A Archway Road, London N6 5BA, Tel:020 8348 9835 / Fax: 020 8482 6508 Web: www.sivafedaration-uk.org/ E.mail:admin@ sivafedaration-uk.org

Correspondence:2-4 Bedford Road, Walthamstow, London E17 4PX | Tel: 0208 527 3819


## பிரித்தானிய சைவத்திருக் கோயில்கள் ஒன்றியம் 2019ம் ஆண்டில் நடாத்தும்

- திருமுறை ஓதல் போட்டி
- தமிழ் பேச்சு போட்டி
- ஆங்கில பேச்சு போட்டி
- நாடகப் போட்டி

எல்லாம் வல்ல இறைவன் திருவருளாலே பிரித்தானியா வாழ் சைவ மக்களிடையே சைவ சமய அறிவையும் புலமையையும் ஊக்குவிக்கும் பொருட்டு பிரித்தானிய சைவத்திருக்கோயில்கள் ஒன்றியம் 20-வது ஆண்டாக மேற்படி போட்டிகள் நடாத்த உள்ளது. அதற்கான விண்ணப்பம் கோரப்படுகிறது.

### போட்டிகளுக்கான விண்ணப்ப படிவம் 2019

பங்குபெற விரும்பும் போட்டிகளின் அருகில் புள்ளடி இடவும்

☐ திருமுறை ஓதல் ☐ தமிழ்ப் பேச்சு ☐ ஆங்கிலப் பேச்சு ☐ நாடகம்

பெயர் (Name):..........................................................................................

Write Clearly in English

முகவரி (Adress): .....................................................................................

Post code: .................. Telephone:......................... Email Adress:..........................

பிறந்த திகதி (Date of Birth):..................... வயது பிரிவு (As at 01.03.2019):...............

முதல் நிலை போட்டி செய்ய விரும்பும் கோயில்:.............................................................

போட்டியாளரின் அல்லது போட்டியாளரின் பெற்றோரின் கையொப்பம்:.................................

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய விலாசம்: Application to be posted to:

**MR.S.PATHMAMOHAN**
(Saiva Temples Federation Competition 2019)
Croydon Metropolitan College
30-32 Southend, Croydon,
Surrey CRO 1DN. Or (Email:patmohan19@gmail.com)

**Copy of application from could be obtained from the affiliated temples to the Fedaration or visit www.katpakapathy.com / www.ghanapathy.co.uk / www.saivamunnettasangam.com**

| திரு.மு.கோபாலகிருஷ்ணன் | திரு.செ.கனகசுந்தரம் | திரு.க.வி.கணேசமூர்த்தி |
|---|---|---|
| செயலாளர் | தலைவர் | பொருளாளர் |

## பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் 2019ம் ஆண்டில் நடாத்தும் போட்டிகளுக்கான விதிமுறைகள்

1. பிரித்தானியாவில் வாழும் சைவ சமயத்தவர்கள் எவரும் பங்குபற்றலாம்.
2. திருமுறை ஓதல் போட்டி, தமிழ் ஆங்கிலம் பேச்சுப் போட்டிகளுக்கான வயது எல்லை
   I. 5 வயதிற்கு உட்பட்டோர் II. 5-7 வயது III. 7-10 வயது
   IV. 10-13 வயது V. 13-16 வயது VI. 16-25 வயது.
3. ஒன்றியத்தினால் தரப்பட்ட பேச்சுக்கள் மட்டுமே போட்டியில் பயன்படுத்தப்பட வேண்டும். (தேவார புராணம் ஒழுங்கு முறை, பேச்சுக்கள் பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ளது)
4. திருமுறை ஓதல் போட்டியில் பங்கு பற்றுபவர்கள் ஆலயத்தில் நின்று இறைவனை வழிபடுவது போன்று பாட வேண்டும். தரப்பட்ட வயதுக்கான ஒழுங்குமுறைப்படி திருமுறைகளை அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப தெரிவு செய்து பாடலாம். (சுருதிப் பெட்டியையும் தாளத்தையும் பாவிக்கலாம்).
5. நாடகப் போட்டிகளுக்கான வயது எல்லை
   i) 18 வயதிற்குட்பட்டோர் ii) 18 வயதிற்கு மேற்பட்டோர்
6. நாடகம் இவ்வருட ஒன்றியத்தின் இலக்கான கந்தபுராணமும் வாழ்வியலும் என்பதை ஒட்டியதாகவும், 20 நிமிடங்களுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும் (குழுத்தலைவர் மாத்திரம் விண்ணப்பித்தால் போதும்).
7. போட்டிகளுக்கான கட்டணம் இலவசம். (போட்டிகளுக்கான செலவுகள் ஒன்றியத்தினால் வழங்கப்படமாட்டாது).
8. போட்டிகள் முதல் நிலை பிரதேச ரீதியில் பின்வரும் கோயில்களில் சனிக்கிழமை 27.04.2019யும், ஞாயிற்றுக்கிழமை 28.04.2019யும்
   வடக்கு மேற்கு இலண்டன்- Ealing கனகதுர்க்கை அம்மன் ஆலயம்
   கிழக்கு இலண்டன்- Manor Park சைவ முன்னேற்றச் சங்கம்
   தென்மேற்கு இலண்டன்- Wimbledon ஸ்ரீ கணபதி ஆலயம்
   தென் கிழக்கு இலண்டன்- Lewisham சிவன் கோயில்
   இலண்டனுக்கு வெளியில் வசிப்பவர்கள் மேற்குறிப்பிட்ட ஏதாவது கோயில்களில் பங்கு பற்ற முடியும்.
9. இறுதி நிலைப் போட்டி Archway முருகன் கோயிலில் 05.05.2019 ஞாயிற்றுக்கிழமை (2 pm) அன்று நடைபெறும்.
10. ஒன்றியத்தினால் வழங்கப்பட்ட விண்ணப்ப படிவம் மூலம் பங்கு பற்றலாம். முடிவுத் திகதி 12.04.2019.
11. ஒவ்வொரு நடுவர் குழுவிலும் மூன்று நடுவர்கள் அங்கம் வகிப்பார்கள். இவர்கள் பங்கு பற்றும் பிள்ளைகளின் உறவினர்களாக இருக்கமாட்டார்கள்.
12. நடுவர்களின் தீர்ப்பே போட்டிகளின் இறுதி முடிவாகும்.
13. போட்டியில் முதலாவதாக வருபவர்கள் 25.05.2019, 26.05.2019 களில் நடைபெறும் 20வது சைவ மாநாட்டில் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

போட்டிகளுக்கான பிரிவுகளும் அவற்றுக்கான விபரங்களும்

| பிரிவு | வயது எல்லை 01.03.2019 | as at 01.03.2019 | திருமுறைகள் | தமிழ்ப் பேச்சு தலைப்புகள் | English Speech Topics |
|---|---|---|---|---|---|
| 1 | 5 வயதிற்கு உட்பட்டோர் | 01.03.2014ற்கு பின் | தேவாரம் | பெற்றோரைப் போற்றுவோம் | Saivaism |
| 2 | 5-7 வயது | 28.02.2014 தொடக்கம் 01.03.2012 வரை | தேவாரம் புராணம் | திருநீறு | Thirumu-raikal |
| 3 | 7-10 வயது | 28.02.2012 தொடக்கம் 01.03.2009 வரை | தேவாரம் புராணம் வாழ்த்து | கந்தபுராணம் | Lord Murugan |
| 4 | 10-13 வயது | 28.02.2009 தொடக்கம் 01.03.2006 வரை | பஞ்ச புராணம் வாழ்த்து | ஈழத்துச் சித்தர் யோகர் சுவாமிகள் | Karakaal Ammaiyar |
| 5 | 13-16 வயது | 28.02.2006 தொடக்கம் 01.03.2003 வரை | பஞ்ச புராணம் திருப்புகழ் வாழ்த்து | சுவாமி விபுலானந்தர் | Thirumoolar |
| 6 | 16-25 | 28.02.2003 தொடக்கம் 01.03.1994 வரை | பஞ்ச புராணம் திருப்புகழ் வாழ்த்து | சிவராத்திரி | Thirukural |



பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்
THE FEDERATION OF SAIVA (HINDU) TEMPLES U.K
200A, Archway Road, London N6 5BA
Correspondence:2-4 Bedford Road, E17 4PX Mob:07500 348 132 & 07956 919 511
20th வது சைவ மாநாடு
SAIVA CONFERENCE
"கந்த புராணமும் வாழ்வியலும்"
பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் இவ்வருடம்
2019 மே 25ம், மே 26ம் திகதிகளில் நடத்தவிருக்கும் மாபெரும் சைவ மாநாட்டில்
கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.
Chief Guest
Sri Sivagnana Balaya Swamigal
Mailam Pommapura Atheenam
Special Guest
Sri satguru Bodhinatha Veylan Swami
Hon.Guest
Sri Ramasamy Sundara Rajan
Guest Speaker
Kambavaruthi Jeyaraj
Guest Speaker
Chanthiramouleesan Laleesan
Innisai Kacheri
Malavika Sundar
Free Entry
Designed & Printed @ JR Print Tel: 020 8503 6643
Saturday 25th May 2019 from 9.00 am - 9.00 pm
HIGHGATE HILL MURUGAN TEMPLE
200A, Archway Road, London N6 5BA
Sunday 26th May 2019 from 9.00 am - 9.00 pm
LONDON SIVAN KOVIL,
4A Clarendon Rise, London SE13 5ES.
Mr.M.Gopalakrishnan
Secretary
Mr.C.Canagasundaram
Chairman
Mr.K.V.Kaneshamoorthy
Treasurer



சரோஜினி சந்திரகோபால்



## பக்தர் வெள்ளத்தில் 'அரோகரா' கோஷம் ஒலிக்க

# லண்டனில் சைவ முன்னேற்ற சங்க தில்லை நடராஜர் கோயில் கும்பாபிஷேகம்

அடியார்க்கு அருள் பாலிக்கும் அருள் மிகு சிவகாமி சமேத சிதம்பரேஸ்வரர் ஆலய நூதன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா மிகக் கோலாகலமாக நடந்தேறிய நன்னாள் 10.02.2019. தில்லை அம்பல நடராஜனுக்கு தனித் திருக்கோயில் இல்லையென்ற சிவனடியார்களின் பிரார்த்தனைக்குச் செவிசாய்த்து, மனமிரங்கி, 2, Salis Bury Road, Manor Park இல் எழுந்தருளிக் கிழக்கு இலண்டன் வாழ் சைவர்கள்-இந்துக்கள் மனதில் நிரந்தரமாகக் குடிகொண்டுள்ள, ஐந்தொழில் புரிந்திடும் அம்பலவாணரைக் காணக் கண் கோடி வேண்டும்.

திருக்குட நன்னீராட்டு விழாவினைத் தலைமை தாங்கி வழி நடத்தியவர் ஆசீர்வாதசரபம் ஆகமப்ரவீணா நயினை நாகபூசனி அம்மன் தேவஸ்தானப் பிரதம குருக்கள் சிவஸ்ரீ கைலை வாமதேவன் குருக்கள் அவர்கள். இவருடன் இணைந்து கிரியைகளில் செயல்பட்டவர்கள் இலண்டன் ஸ்ரீமுருகன் கோயில் பிரதம குருக்கள் கயிலை சிவஸ்ரீ நாகநாத சிவம் சிவாசாரியார் அவர்களும், ஸ்ரீசிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர் ஆலய பிரதம குருக்கள் சிவாகம ரத்தினம் சிவஸ்ரீ சிவராம சிவாசாரியார் (ரமேஷ் குருக்கள்) அவர்களுமே. சிற்பக் கலை மாமணி விஸ்வப் பிரம்மஸ்ரீ, சிற்பரதக் கலைத் திலகம் திரு.சரவணமுத்து ஜெயகாந்தன் கைவண்ணத்தில் உயிர் கொண்ட இக்கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழாவின் போது இலண்டனில்



உள்ள பல ஆலயங்களில் இருந்தும் 30க்கு மேற்பட்ட சிவாசாரியார்கள் ஒருங்கிணைந்து கிரியைகளில் பங்கு கொண்டமை நடராஜர் ஆலயத்திற்கும், சைவமுன்னேற்றச் சங்கத்திற்கும் பெரும் மகிழ்ச்சியும், கௌரவமும் தரும் விடயம் என்று சங்க நிர்வாகத்தினர் கருதுகின்றனர். நடராஜர் ஆலயத்தைச் சேர்ந்த, சிவ வைத்திலிங்க ஐயர் சிவாசா குருக்கள், சமீபத்தில் ஆலயத்துடன் இணைந்த சிவஸ்ரீ கார்த்திக் குருக்கள் இருவருமே கும்பாபிஷேக பணிகளில் மிகவும் ஈடுபாட்டுடன் செயல்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதேவேளையில், "சுப்பிரமணியம்" என எல்லோராலும் அழைக்கப்படும் திரு.ஜெயராமன் கிருஷ்ணமூர்த்தி அவர்களின் கடின உழைப்பும், சிந்தித்துச் செயல்படும் திறனும் பாராட்டுதற்குரியதே.





06.02.2019 முதல் 10.02.2019 வரையில் இடம்பெற்ற ஹோமங்கள், பூஜைகள், மற்றும் யாகசாலை வழிபாடுகளின் போது, வேத ஆகம பாராயணம், ஓதுவார் மூர்த்தி சுவாமி தண்டபாணி அவர்களது திருமுறைப் பாராயணம், மங்கள வாத்தியங்களின் ஒலி, ஜெகஜோதியாகப் பிரகாசித்த தீப ஒளி, இவற்றில் மெய்மறந்து, "இலண்டன் சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் நிற்கின்றோமா? இல்லை... சிதம்பரத்தில் நிற்கின்றோமா?" என்ற இனிய வினா பலர் மனதில் தோன்றியதை மறுப்பதற்கில்லை. 8ம் 9ம் திகதிகளில், ஆலயத்தில் சிவலிங்கத் திருமேனி கொண்டு எழுந்தருளியுள்ள திருமூல நாதருக்கும், கமலாம்பிகை அம்மனுக்கும் அடியார்கள் பக்தியுடன் எண்ணெய் சாத்திய புண்ணிய கைங்கர்யக் காட்சியும், அதன்போது உணரப்பட்ட பக்திப் பிரவாகமும் வாழ்நாளில் மறக்கமுடியாத உண்மைகள். இவ்வாறே ஏனைய மூர்த்திகளுக்கு எண்ணெய்க் காப்பும், ஐம்பொன் விக்கிரகங்களுக்குப் பாலாபிஷேகமும் செய்யக் கிடைத்த வாய்ப்பைப் பெற்ற நம் அனைவருக்கும் "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" என்ற திருமுறை வரியை நினைவுபடுத்தியது.

இறை மூர்த்தங்களையும், புதிதாக அமைந்த ஆலயத்தையும் அதன் அழகையும் கண்குளிரப் பார்த்து மனம் நிறைந்த பக்தர்களுக்கு, மறுநாள் காலை பக்தி பூர்வமாக நடந்த கும்பாபிஷேகக் காட்சி, எழுத்தில் அடக்கிவிட முடியாத பேரானந்தத்தையும், சிவ ஆனந்தத்தையும் தந்தது. இறைவன் அன்புள்ளவன் என்று சிறு வயது முதல் படித்த வரிகளுக்கு நிரூபனம் போல, தன்னுடைய அன்பை அத்தனை அடியார்களுக்கும் வாரி வழங்குவதற்காக அவன் மனமிரங்கி, அன்று எமக்கு இந்த திருக்குட முழுக்கு விழாவை, கண்குளிரவும், உள்ளம் மகிழவும், உடல் புல்லரிக்கவும் தந்தது அவனது பேரருளாகும்.

அடியார்களின் "அரோகரா" என்ற ஒலியும், நாவிலே "ஓம் நமசிவாய" என்ற உச்சரிப்பும், கண்களில் திரை போட்டு நின்ற கண்ணீரும், எப்படி வணங்குவது? எவ்வாறு போற்றுவது? என்று தத்தளித்த மனங்களுக்கு அன்று நடைபெற்ற கும்பாபிஷேகத் திருவிழா மறக்கமுடியாத ஒரு சிவானந்த அனுபவமாகும். விமானக் கலசங்களுக்கும், ஆலய மூர்த்திகளுக்கும் கலச அபிஷேகம் நடைபெற்ற கோலாகலக் காட்சிகளைக் காண வேண்டுமென்று தவமிருந்த பலரது ஆவலை சிவபெருமான் நிறைவேற்றித் தந்தமை, அவனுடைய பேரருட் திறத்தையும், வியக்க வைக்கின்ற பெருங்கருணையையும், தன் அடியார்களுக்காக அவன் செய்கின்ற ஈடிணையற்ற திருவருளையும் ஒருங்கே காட்டுகின்றது.

42வது வருடத்தில் காலடி வைத்திருக்கும் சைவ முன்னேற்றச் சங்கத்தின் தலைவர்கள் வரிசையில் 14வது இடத்தில் இருப்பவர் இன்றைய தலைவர் திரு. தர்ம இரவீந்திரமோகன் அவர்கள். சிறப்பாக நடந்தேறிய கும்பாபிஷேகம் பற்றிப் பேசுகையில், "பல ஆண்டு கால ஆவலை ஆண்டவன் இன்று நிறைவேற்றித் தந்துள்ளான். சங்க அங்கத்தவர்களின் விடா முயற்சி, உண்மையான உழைப்பு, பக்திபூர்வமாக நடைபெற்ற ஆலய கிரியைகளின் பலன், இவற்றில் இறைவன் மனமிரங்கி எமக்காக இந்தக் கும்பாபிஷேகக் காட்சியைத் தந்தமையும், எமது பிரார்த்தனைகளை ஏற்று, எங்களுக்காக அவன் கோவில் கொள்ள முன்வந்தமையையும் நாம் நன்றியுடன் உணர்ந்து வாழ்நாள் முழுவதும் வழிபட எமக்கு அருள்புரிய அவன் சந்நிதியில் பிரார்த்திப்போம்" என்றார். தொடர்ந்து பேசுகையில் கோயில் கட்டடப் பணிகளை நிறைவேற்றி உதவிய, முன்னைய தலைவர் திரு.ச.ஆனந்ததியாகர், அறங்காவலர்கள், நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் இன்றைய அறங்காவலர்கள், நிர்வாக உறுப்பினர்கள் அனைவருக்கும் மகிழ்வுடன்



நன்றி கூறினார்.

சிதம்பரேஸ்வரர் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ சிவராம சிவாசாரியார் (ரமேஷ் குருக்கள்) கும்பாபிஷேக விழா பற்றி பேசும்போது, "திருக்குட நன்னீராட்டு விழாவில் நானும் பங்கு கொள்ள வேண்டும் என்பது சிதம்பரேஸ்வரர் சித்தம். அவனன்றி ஓரணுவும் அசையாது. எல்லாம் அவன் செயல். செய்வது நாமாக இருந்தாலும் செய்விப்பவன் அவனே" என்றார்.

1977இல் வித்திடப்பட்ட சங்க வரலாற்றில், ஓரடி நிலம் கூட இல்லாத காலத்தில் இருந்து இன்று வரை சங்கம் பதித்த சுவடுகள் பல்லாயிரம். 1989இல் சங்கத்திற்கென ஒரு கட்டடம் வாங்கும் திட்டம் அங்கத்தவர் மனதில் தோன்றிய போதும், 1995இல் திரு.கு.சிதம்பரப்பிள்ளை அவர்கள் தலைவராக இருந்த காலத்திலேயே இவ்வெண்ணம் நிறைவேறியது. 24 ஆண்டுகளுக்குப் பின், கருங்கல்லால் அமைந்த அழகான சந்நிதியில் கம்பீரமாக, கருணை வடிவாக அமர்ந்து, கிழக்கு இலண்டனில் உள்ள ஒரே ஒரு சிவன் கோயில் எனும் பெரும் புகழுடன் கும்பாபிஷேகத் திருவிழா நடந்தேறத் திருவருள் புரிந்த சிதம்பரேஸ்வரர் பேரருளை நெஞ்சிலிறுத்தி அவன்தாள் பணிந்து வணங்கி மகிழ்கின்றது சைவ முன்னேற்றச் சங்கம் (UK).●

# அசிங்கம்

அன்று திங்கட்கிழமை. நேரம் காலை பதினொரு மணி. அந்த பிரபல பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள வகுப்பறையொன்றில்- சமுதாய எழுச்சி- என்ற தலைப்பில் ஒரு பேராசிரியர் தனது மாணவர்களுக்கு விரிவுரை நடாத்திக் கொண்டிருக்கிறார்.

**சமூக விதிகள்-** மதக் கோட்பாடுகள்- கலாச்சாரச் சடங்குகள்- இவற்றின் பெயரால் கடந்த காலங்களில் இந்தியாவில் நடைபெற்ற சில அசிங்கமான விடயங்களை- காட்டுமிராண்டித்தனமான காரியங்களை- பைத்தியக்காரத்தனமான செய்கைகளை- மாணவர்களுக்கு உணர்ச்சி பூர்வமாக கூறிக்கொண்டிருக்கிறார்.

**உடன்கட்டை ஏறுதல் என்றால் என்ன என்று தெரியுமா உங்களுக்கு?**

ஒரு ஆண் இறந்து போனால் அவனது மனைவியும் அவனுடன் இறக்க வேண்டும். எரிகின்ற சிதையில் அவள் உயிரோடு குதிக்க வேண்டும். யாராவது இதற்குப் பயந்தால் அவள் ஒழுக்கம் கெட்டவளாக வெறுத்து ஒதுக்கப்பட்டாள். ஒரு பெண் தனது கணவனின் மீதுள்ள காதலை அவளின் இந்த உடன்கட்டை ஏறும் செயல் நிரூபிப்பதாக கூறி அவளின் உறவினர்கள் இதை கொண்டாடினார்கள். பத்தாயிரம் வருடங்களாக இந்த அசிங்கம் தொடர்ந்தது.

எவ்வளவு அசிங்கமான காட்டுமிராண்டித்தனம்!

**பேராசிரியர் மாணவர்களின் அபிப்பிராயத்தை-** ஆமோதித்தலை எதிர்பார்க்கிறார். யாருமே சிறிது நேரத்திற்கு எதுவுமே பேசவில்லை. திடீரென ஒரு மாணவன் கூறினான்:

அசிங்கமான - காட்டுமிராண்டித்தனங்கள்



கடந்த காலத்துக்கு மட்டும் சொந்தமானவையல்ல. அவை காலத்தை கடந்து செயல்படும் மனிதனின் பிறவிக் குணங்கள்.

எங்கோ பிறந்து - எப்படியோ வளர்ந்த ஒரு ஆணையும் - ஏதோ நினைத்து எதையோ எதிர்பார்த்து வளர்ந்த ஒரு பெண்ணையும் - பெரியவர்கள் என்று தங்களைத் தாங்களே கூறிக்கொள்ளும் ஒரு முட்டாள் கூட்டம் - அதைச் சொல்லி இதைச் சொல்லி - கல்யாணம் என்ற பெயரில் ஊரைக் கூட்டி -அம்மியை மிதித்து அருந்ததியைக் காட்டி - உனக்கு இவள் தான் என்றும் இவளுக்கு நீ தான் என்றும் அவர்களைச் சேர்த்து வைத்த பின் - பிடித்ததோ பிடிக்கவில்லையோ - ஊருக்கு பயந்து உலகத்திற்கு பயந்து - செக்கு மாடுகள் போல- தங்கள் சொந்த ஆசை அபிலாசைகளை மறந்து விட்டு - திருவள்ளுவர் கூறிய இல்லறம் நடாத்துகிறோம் என்று முட்டாள்தனமாக பிதற்றிக்கொண்டு - தொடரவும் முடியாமல் - முறிக்கவும் முடியாமல்- ஆயுள் பூராவும் இருவர் அனுபவிக்கும் ஆயுட்கால இம்சையைவிடவா சில நிமிடங்களே நிலைக்கும் உடன்கட்டை காட்டுமிராண்டித்தனம்!

ஜனனத்திலிருந்து மரணம் வரை- அசிங்கத்தை தவிர இங்கு வேறு எதை தான் செய்கிறான் மனிதன்?

# ஊர்க்குருவி

தாய் குருவியும்-சமீபத்தில் தான் குமாஸ்தா ஆனந்தன் வீட்டுக் கூரையில் பொரித்த அதன் ஐந்து குஞ்சுகளும்- வானத்தில் சுகமாக பறந்து கொண்டிருக்கின்றன.

உயரப் பறக்கும் பருந்து ஒன்றைக் கண்ட குஞ்சுகள்- குமாஸ்தா வீட்டில் அடிக்கடி ஒலிக்கும் ஒரு பழமொழியை நினைவு கூர்ந்து தாயிடம் அதற்கு விளக்கம் கேட்டன. பறப்பதை தற்காலிகமாக நிறுத்தி விட்டு ஒரு மரத்தில் அமர்ந்து தன் குஞ்சுகளுக்கு பின்வருமாறு கூறியது தாய் பறவை:

உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா? குமாஸ்தா வீட்டில் இந்தப் பழமொழியை நீங்கள் அடிக்கடி கேட்டிருப்பீர்கள். இப்படிப்பட்ட முட்டாள்தனமான பழமொழிகளை மனிதர்களின் வீட்டில் மட்டுமே நீங்கள் கேட்க முடியும்.

இயற்கை உருவாக்கிய இரு உயிரினங்களை - இது பருந்து- இது ஊர்க்குருவி என்று பிரித்துப் பார்த்து- உயரப் பறத்தல் ஒரு உன்னதமான விடயம்- தாழப் பறப்பது ஒரு தாழ்ந்த விடயம் என்று முடிவு கட்டி- பருந்து ஒரு உயர்ந்த பறவை- ஊர்க்குருவி ஒரு தாழ்ந்த பறவை என்று ஒப்பீடு செய்து- தாழ்ந்திருப்பது உயர்ந்த இடத்திற்கு முன்னேற முயற்சி செய்வது இயல்பு- என்று ஏதேதோ கற்பனை செய்து- இது போன்ற எத்தனையோ முட்டாள்தனமான பழமொழிகளை- தங்கள் அறிவீனங்களை- பலவீனங்களை- பறை சாற்றும் பழமொழிகளை இயற்றி இருக்கிறார்கள்.

இவற்றை பிரதிபலிக்கும் முட்டாள்தனமான செய்கைகளின் தொகுப்பே அவர்களின் வாழ்க்கை.

தான் யார் என்று தனக்கே தெரியாமல்- தான் ஓட்டும் காரின் மூலம்- தான் வசிக்கும் இடத்தின் மூலம்- தான் அணியும் உடையின் மூலம்- தனக்கு ஒரு போலித் தராதரத்தை ஏற்படுத்திக் கொள்ளுகிறது ஒரு கூட்டம்.



தான் யார்- தனது தேவை என்ன- என்று பகுத்தறியாமல்- யாரோ ஒருவருடைய தேவைகளை தனது தேவைகளாக்கிக் கொண்டு- அந்தத் தேவைகளை அடைவதற்காக இரவு பகலாக கஷ்டப்படுகிறது இன்னொரு கூட்டம்.

நான் இருக்கும் இடத்தால்- நான் பாவிக்கும் பொருட்களால்- அந்த இடத்திற்கு- அந்தப் பொருட்களுக்கு பெருமை வரவேண்டுமே தவிர எதிர்மறையாக இருக்கக்கூடாது என்று எந்த மனிதனும் சிந்திப்பதில்லை. இதனால் தான் அவர்களிடையே தேவையற்ற போட்டிகள்- பொறாமைகள்- சண்டைகள்!

குருவியாக இருப்பது தான் குருவிக்குப் பெருமை! பருந்தாக இருப்பது தான் பருந்துக்குப் பெருமை!

உயரப் பறக்க வேண்டிய தேவை ஊர்க்குருவிக்கில்லை! ஊர்க்குருவி பருந்தாக விரும்புவதுமில்லை!

# புருஷலட்சணம்

கடந்த நாற்பது வருடங்களாக அரசாங்க அலுவலகமொன்றில் பிரதம கணக்காளராக கடமையாற்றி - நேற்றையதினம் தான் ஓய்வுபெற்ற அறுபது வயது நிரம்பிய மூர்த்திக்கு இன்று எப்படி நேரத்தைச் செலவு செய்வது என்பது மிகப் பெரிய பிரச்சனையாக தோன்றியது. எடுத்ததெற்கெல்லாம் கோபம் வேறு வருகிறது.

மூர்த்தியின் மனோநிலை பற்றிய விஷயமறியாது- உற்சாகமாக அவருடன் விளையாடச் சென்ற அவரின் செல்லமான நாய்க்குட்டியை அசிங்கமாக திட்டி விரட்டுகிறார் மூர்த்தி. காரணமறியாத நாய்க்குட்டி அதன் தாயிடம் சென்று முறையிடுகிறது. பல வருடங்களாக மூர்த்தியின் வீட்டில் வாழ்ந்து அவரின் வாழ்க்கை முறைகளை அவதானித்த தாய் நாய் கூறியது:

பாவம் நமது எஜமான்!

உத்தியோகம் புருஷலட்சணம் என்று யாரோ ஒரு மடையன் சொன்னதை நம்பும் ஒரு சமுதாயத்தில் பிறந்து- கடந்த நாற்பது வருடங்களை- தன் வாழ்க்கையின் பொன்னான அரைவாசி நேரத்தை- உபயோகமில்லாத உத்தியோகம் என்ற ஒன்றிற்காக



அலுவலகத்திலேயே செலவழித்த பின்- அலுவலகத்திற்கு இப்பொழுது செல்ல முடியாத நிலையில்- வாழ்க்கையே முடிந்து விட்டது போல விசனப்படுகிறார்.

**கவனமாக கேட்ட குட்டி நாய் கேட்டது. உத்தியோகம் என்றால் என்ன?**

தலையில் கோளாறு உள்ள சில கழுதைகள்- விஞ்ஞான ஆராய்ச்சி என்ற பெயரில் எவருக்குமே உதவாத சில விடயங்களை கண்டுபிடிக்க- ஏமாற்றிப் பிழைக்கத் தெரிந்த சில குரங்குகள்- இந்தக் கண்டுபிடிப்புகளை பயன்படுத்தி ஆடம்பரப் பொருட்களால் கடைகளை நிரப்ப- இவை நமக்கு தேவைதானா- இவற்றால் எமது வாழ்க்கைக்கு என்ன சிறப்பு- என்று சிந்திக்கத் தெரியாத நமது எஜமான் போன்ற பல எருமைகள்- இவற்றால் எல்லாம் தான் எமது வாழ்க்கை சிறப்படைகிறது என்ற பொய்யான உணர்வால்- காலையிலிருந்து மாலைவரை- அலுவலகம் என்ற நாலு சுவருக்குள் அடைந்து கிடந்து- முப்பது நாட்களுக்கொருமுறை கிடைக்கும் பணத்தைக்கொண்டு வாழ்நாள் பூராவும் தேவையற்ற பொருட்களை வாங்கி வீட்டை நிரப்புவதற்கும்- இதே மாதிரி ஒரு செக்கு மாட்டு வாழ்க்கைக்கு தங்கள் பிள்ளைகளையும் தயார் செய்வதற்கும்- உதவியாக இருக்கும் முயற்சிக்கு பெயர்தான் உத்தியோகம்.

பாவம் மனிதர்கள்! பார்க்கும் உத்தியோகத்தால்-சம்பாதிக்கும் பணத்தால்- உபயோகிக்கும் ஆடம்பரப் பொருட்களால் வாழ்க்கை சிறப்பெய்துவதாக நம்புகிறார்கள்.

மனிதர்களுக்கு தெரியாது வாழ்க்கையே ஒரு சிறப்பு என்பது.




# London Sivan Kovil Trust

**Charity Registration No. 1051516**
**4A Clarendon Rise, Lewisham, London SE13 5ES.**
**Telephone Number: 00 44 208 318 9844 | Fax Number: 00 44 208 318 2108**

### Vacancy for a position of Assistant Priest

The London Sivan Kovil Trust is a UK registered charity of more than 23 years standing engaged in serving the community in Southeast of England with cultural, social and religious activities. We run a Hindu Temple, a Saturday school and a meeting place for elders. We have completed building a new temple at 4A Clarendon Rise, Lewisham, London SE13 5ES where the previous temple stood more than 15 years at a cost more than 1.5miilion sterling pounds and it was opened for public on 12th June 2011.

We have a vacancy for a Assistant Priest position as such Applications are invited from potential candidates to fill the post of an assistant priest from suitably qualified members of the public.

### Job Descriptions

Assistant priest will assist the Priests (Ministers of Religion) in their pastoral duties; in particular he will make flower garlands, prepare abisheka Thiraviyam for anointing the deities, decorate them with garlands and flowers, prepare Panchamirtham, a mixture of fruits honey and other ingredients, cook Amuthu, sacred sweet rice, Mothakam, Vadai, etc, for the Deities and then for distribution among the devotees. Assistant priest will be assigned responsibility for one or more aspects of the Annual Festival and other important religious ceremonies. Assistant priest will be reporting the senior priest/chief priest/secretary of the Trust.

### 1) Applicant should meet the following requirements

a) Applicants must have been conferred kurukkalship in terms of Vedaagamas

b) Reasonable spoken knowledge of Tamil

c) Must be able to weave garlands of all types

d) A fair knowledge of Astrology will be considered an added advantage.

### Perquisites

(1) Board and Lodging will be provided at the Trust's premises.

(2) Annual Leave of twenty eight days which include 8dyas public holidays.

(3) One and a half days leave is available for a week.

2. Pay and conditions of service will be discussed and agreed soon after telephone interview.

3. Applications close on or before 30 April 2019.

Please send your application with supporting documents by post to the London Sivan Kovil Trust's address given above for the attention of the Secretary of the Trust, alternatively applicant can send the application and supporting documents to the temple email address given below; sivan.kovil@yahoo.co.uk

**LONDON SIVAN KOVIL TRUST**


# ENGINE TEC MOTORS

we offer Facilities for

- Servicing
- Clutches
- Brakes
- Overhauls
- Car Electricals
- Pre - MOT Checks
- ALL Types of Repair & Body Work
- Insurance Work Undertaken

எஞ்ஜின் ரெக் மோட்டர்ஸ்
உங்கள் கார் திருத்த
வேலைகளுக்கு
நம்பிக்கையான நிறுவனம்

Ask for Vel or Rajan
Tel: 020 8640 8000
020 8640 1230
Mob: 0786 0226 476
07860 770 945

Email: vel@etmluk.com
rajan 339c@gmail.com
www.etmluk.com




Unit 5,339 London Road, Mitcham, Surrey CR4 4BE

தமிழிலேயே பேசி உங்கள் கார் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ளலாம்.

# கனடாவில் ஊடக ஆளுமைக்கு மதிப்பளித்த

# ‘ஊடகத்திரு-எஸ்தி 50+’

# நூல் வெளியீடு




வாழ்ந்து கொண்டிருக்கும் இலங்கையின் அதிமூத்த ஊடகவியலாளர்களில் ஒருவரும், கனடா தமிழர் தகவல் முதன்மை ஆசிரியருமான திரு.எஸ்.திருச்செல்வம் (எஸ்தி) அவர்களின் ஐம்பது ஆண்டுகளைக் கடந்த ஊடக வாழ்வைக் குறிக்கும் வகையிலான ‘ஊடகத்திரு-எஸ்தி 50+’ என்னும் நூலின் வெளியீடு ஸ்காபரோ சத்யசாயி மண்டபத்தில் கடந்த மாதம் நடைபெற்றது. ‘எஸ்தி நண்பர்கள் வட்டம்’ ஏற்பாடு செய்த இந்நிகழ்வுக்கு றொறன்ரோ பல்கலைக்கழக பேராசிரியர் அமுது யோசப் சந்திரகாந்தன் தலைமை தாங்கினார். செல்வி. பிரதிஷ்னி மதீஸ்வரனின் தமிழ் வாழ்த்தைத் தொடர்ந்து நூல் தொகுப்பாளர்களில் ஒருவரான திரு.எஸ்.ஜெகதீசனின் வரவேற்புரையுடன் விழா ஆரம்பமானது. திருமதி மைதிலி தயாநிதி, திருமதி வனிதா இராஜேந்திரம் ஆகியோர் நூலின் உள்ளீடுகள் பற்றி ஆய்வுரைகள் நிகழ்த்தினர். தாயகத்தின் போர்க்காலச் சூழலில் உண்மையை உண்மையாக எழுதிய ஒரு பத்திரிகை ஆசிரியர் சந்தித்த அவலங்களையும் நெருக்கடிகளையும் இக்கட்டுரைகள் நன்கு சித்தரிப்பதாக இவர்கள் இருவரும் தங்கள் உரைகளில் தெரிவித்தனர். எஸ்தியுடன் இணைந்து பணியாற்றிய, அவருடன் நெருங்கிப் பழகிய, அவரது ஊடக வாழ்வை நன்கறிந்த 51 பிரமுகர்களின் கட்டுரைகளைக் கொண்ட 188 பக்க நூலின் முதற்பிரதியை பெற்றுக் கொண்ட சர்வதேசப் புகழ் பெற்ற எழுத்தாளர் திரு.அ.முத்துலிங்கம் மதிப்புரை வழங்கினார். நூலின் தொகுப்பாளர்களில் இன்னொருவரான கல்வியியலாளர் பொன்னையா விவேகானந்தன் வெளியீட்டுரை நிகழ்த்தினார். திரு.திருச்செல்வம் அவர்களின் ஊடக வாழ்வின் சோதனைகளையும் சாதனைகளையும் பற்றி இதுவரை மற்றையோருக்குத் தெரிந்திராத பல விடயங்களை எடுத்தியம்பிய இவரது உரை சபையோரை நெகிழ்வடையச் செய்தது. கொழும்பு தினக்குரல் பத்திரிகையின் ஞாயிறு வார இதழ் ஆசிரியர் திரு.இராஜநாயகம் பாரதி இவ்விழாவின் பிரதம விருந்தினராகக் கலந்து முதன்மை உரை நிகழ்த்தினார். 1984ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் ஈழமுரசு, முரசொலிப் பத்திரிகைகளில் ‘எஸ்தி’ பிரதம ஆலோசகராகப் பணியாற்றியபோது பயிற்சிப் பத்திரிகையாளராக தமது ஊடகப் பயணத்தை ஆரம்பித்த பாரதி தமதுரையில் ஈழத்தமிழரின் ஊடக வரலாற்றில் திரு.திருச்செல்வம் அவர்களுக்குத் தனித்துவமான இடமுண்டெனக் குறிப்பிட்டதோடு, போர்க்கால நெருக்கடிகளின்போது திருச்செல்வம் அவர்கள் எதிர்கொண்ட சவால்களையும் சோதனைகளையும் இழப்புகளையும் விபரித்துக் கூறினார். திருச்செல்வம் அவர்களின் நிறைவுரை அவரது ஐம்பதாண்டைத் தாண்டிய ஊடக வாழ்வில் மேலும் பல சம்பவங்களை முதன்முறையாக சமூகத்துக்குத் தெரியப்படுத்தியது. மாலை ஐந்து மணிக்கு ஆரம்பமான நிகழ்வு சரியாக ஏழரை மணிக்கு நிறைவுபெற்றது. அப்பலோ பயணத்தின் ஐம்பதாவது ஆண்டைக் குறிக்கும் முகமாக கமல் கேகைலிங்கம் குழுவினர் வழங்கிய நவீன வில்லிசை ஒரு வரலாற்று நிகழ்வாக இவ்வரங்கில் இடம்பெற்றது.

**(தொகுப்பு: ராஜி)**













கந்தசாமி மனோகரன் M.A.,

# இந்தியா சுதந்திரமடைந்த செய்தியை நேரு பிரகடனம் செய்த செங்கோட்டை!

சென்ற இதழ் தொடர்ச்சி

வாடகைக்கு அமர்த்திய துடுப்புகள் கொண்ட படகுகளில் ஏறி கங்கை நதியின் நடுப்பகுதிக்குச் சென்றோம். யாத்திரிகர் ஆற்றின் நடுப் பகுதிக்குச் சென்று பிதிர் கடன் செய்வதற்கு உதவுவதற்காக வைதிகர்கள் பூசைப் பொருட்களுடன் படகுகளில் காத்திருந்தனர். வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றில் இறங்குவது எப்படி என எம்மில் பலர் திகில் கொண்டிருந்தோம். ஆனால், படகோட்டிகளின் உதவியுடன் படகில் இருந்து இறங்கி கங்கை நீரில் பாதுகாப்பாக அமைக்கப்பட்டு இருந்த பகுதியில் மூழ்கினோம். ஓடும் ஜலத்தில் நின்றபடியே முன்னோர்களை நினைந்து வணங்கி மன அமைதியும் தூய்மையும் கொண்டோம். திரும்பவும் படகில் ஏறி நிம்மதியுடன் ஆற்றின் அருகே காத்திருந்த எமது பேருந்து மூலம் விடுதிக்குச் சென்று அடுத்த நாள் புத்தகயாவுக்கான பயணத்திற்குத் தயாரானோம்.

பீகார் மாநிலத்தில் பல்குனி நதிக் கரையில், தென்புலத்தாரை முக்தி நிலைக்கு கொண்டு சேர்க்கும் கயா எனும் திருத்தலம் அமைந்துள்ளது. கயன் எனும்



அசுரனால் தவம் செய்யப்பட்டு, காசி, பிரயாகை ஆகிய தலங்களுக்கு இணையான புனிதம் பெற்ற இத்தலத்தில் இருந்து ஒரு கி.மீ. தொலைவில் புத்த கயா அமைந்துள்ளது. இத்தலம், மகத மன்னனின் மகனாகப் பிறந்த சித்தார்த்தர் போதி மரத்தின் கீழ் இருந்து ஞானம் பெற்ற இடம் என்பதால் புகழ் பெற்றது. பல்லாயிரம் வருடங்களுக்கு முன் புத்தர் ஞானம் பெற்றதாகக் கூறப்படும் போதி மரத்தினைக் காணக் கூடியதாக இருந்தது. இதன் ஒரு கிளையை, தேவநம்பிய தீசன் இலங்கையை ஆண்ட போது, சங்கமித்தை கொணர்ந்து நாட்டினான் என மகாவம்சம் எனும் நூல் கூறுகின்றது. புத்தகயாவில் அசோக மன்னனால் போதி மரத்தின் அருகே கட்டப்பட்டதாகக் கூறப்படும் கோவிலைக் கண்டோம். பிற்பட்ட காலங்களில் பல மாறுதல்களுடன் அமைந்த அக் கோவில் 180 அடி உயரம் கொண்டதாகவும், சிற்ப வேலைப்பாடுகளுடனும் அழகாகக் காணப்படுகின்றது. கம்பீரமாக அமைந்துள்ள அக் கோவிலின் கருவறைக்குள் சென்று மலர் தூவி வணங்கினோம். உலகின் பல பகுதிகளிலும் வாழும் மக்கள் வந்து தரிசிக்கும் பெருமை கொண்ட ஸ்தலமாக விளங்கும் இத்தலத்தில் சீன, யப்பானிய, கொரிய, சிங்கள இனத்தினர்கள் மிகவும் அமைதியுடன் வணங்கிக் கொண்டிருப்பதனை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. கௌதம புத்தரின் காலடி பட்ட தலத்தை தரிசித்த திருப்தியுடன் டெல்லி நோக்கிப் பறந்தோம்.

யமுனை நதியின் மேற்குப்புறமாக அமைந்த பழைய டெல்லிப் பிரதேசம் மகாபாரதத்தில் வருணிக்கப்பட்ட இந்திரப்பிரசாதம் எனும் நகரம் எனக் கூறப்படுகின்றது. இன்று நாம் புது டெல்லியில் காணும் செங்கோட்டை ஷாஜஹான் என்ற முகலாய மன்னனால் 1648ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகவும், ஏறக்குறைய முகலாயரின் ஆறு நூற்றாண்டு ஆளுகையின் பின் 1803ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் கைவசமானது எனவும் வரலாறு கூறுகின்றது. இந்தியா சுதந்திரமடைந்த செய்தியை ஜவஹர்லால் நேரு நள்ளிரவில் பிரகடனம் செய்ததும் இந்தக் கோட்டையில்தான்! இது இரண்டு கிலோ மீற்றர் சுற்றளவும், பதினெட்டு அடி முதல் முப்பத்து மூன்று அடி வரை உயரமான புறச் சுவர்களையும் கொண்டுள்ளது. இந்திய மூவர்ணக் கொடி கம்பீரமாகப் பறக்கும்



இந்தக் கோட்டையின் பிரதான வாயில் லாகூர் கேட் எனப்படுகின்றது.

தொடர்ந்து சர்தார் படேல் மார்க் போன்ற டெல்லியின் நெருக்கடி மிகுந்த பெரும் தெருக்களால் நாம், இந்திய பாராளுமன்றம் அமைந்திருந்த இடத்தினைச் சுற்றிச் சென்று, இந்தியாகேட், இந்திய ஜனாதிபதி தங்கும் ராஷ்டிரபதி பவன், இந்திரா காந்தி நினைவுச் சின்னம் ஆகியவற்றைப் பார்த்துக் கொண்டு காந்தியின் நினைவு இல்லம் சென்று மறைந்த மகாத்மாவுக்கு அஞ்சலி செலுத்தினோம். நேருஜி இறுதிவரை கடமையாற்றிய அவரது அறையையும் மாளிகையையும் சுற்றிப் பார்த்தோம்.

டெல்லியில் இருந்து வடக்கே உத்தரகாண்டில் அமைந்த முக்தித் தலமான ஹரித்துவார் செல்லும் பயணம் காலையில் ஆரம்பமானது. இமயமலையில் இருந்து ஊற்றெடுக்கும் கங்கைநதி ஹரித்துவாரில்தான் வெளிப்பட்டு வேகமாகப் பிரவாகிக்கின்றது. எமது பயணக்களை தீர்ந்தபின்னர், புண்ணிய தலத்தை சுற்றிப் பார்த்தோம். கங்கை நதி இரண்டாகப் பிரிந்து நடுவே தீவு போல ஒரு பகுதி அமைந்துள்ளது. இங்கு எழுந்தருளி உள்ள கங்கை அம்மன், கங்காத்வாரம், ஹனுமார் கோவில் ஆகியவற்றினைத் தரிசித்தோம். மாலையில் கங்காதேவிக்கு நடைபெறும் விளக்குப் பூஜையில் கலந்துகொண்டோம். ஜகஜ்ஜோதியாக ஜொலித்த அந்த இரவு நேரத்தில் வேகமாகச் சுழித்தோடிக் கொண்டிருந்த நதியில், தயக்கம் மிகுந்த அவதானத்துடன் நீரில் புஷ்ப விளக்குகளை மிதக்க விட்டோம். தீப வெளிச்சத்தில் கண்ணைப்பறிக்கும் அழகுடன் விரைந்து ஓடிக்கொண்டிருந்த கங்காதேவியைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தோம்.



ஹரித்துவாரில் இருந்து வடக்கு நோக்கி இருபத்து நான்கு மைல் தூரத்தில் ரிஷிகேஷ் எனும் புனித ஸ்தலம் அமைந்துள்ளது. இரயிபா ரிஷி செய்த தவத்தின் பயனாக ரிஷிகேஷ் எனும் பெயருடன் சிவபிரான் இத்தலத்தில் தோற்றம் அளித்து அருளினார் என்பது புராண வரலாறு. இங்கு கங்கையுடன் யமுனை சேரும் இடத்தில் திரிவேணி கட்டம் இருக்கின்றது. பேருந்தில் சென்ற நாம் அங்கு உள்ள பல கோவில்களையும் தரிசித்தபடி கங்கையின் கிளை நதிக்கு மேலாகப் போடப்பட்டிருந்த கம்பிகளால் ஆன பாலத்தினைக் கடந்து ஆற்றின் கிழக்குக் கரையில் அமைந்த பதினோரு தளங்கள் கொண்ட கோவிலையும் தரிசித்தோம். அத்துடன் லஷ்மணர், சத்ருக்கனன், பரதன், மௌனீச்வரன் கோவில்களையும் தரிசித்தோம். கங்கா நதியின் நீரோட்டத்தின் வேகம் குறைந்த ஆழமில்லாத கரையினைத் தேடி நாம் ஸ்ஞானம் செய்ய முனைந்தோம். எமது உடல் தளர்ச்சி காரணமாகப் பயம் பின்னே இழுக்க, ஆவல் முன்னே உந்த எச்சரிக்கையுடன் நதியில் இறங்கினோம். பக்தி மேலீட்டால் ஒரு அன்பர் தமது கைத்தடியையும் வீசிவிட்டு அச்சமின்றி, நதியில் இறங்கி நீந்தவும் முனைந்தார்! பாய்ந்தோடிக் கொண்டிருந்த குளிர்ச்சியான நீரில் மூழ்கிப் புத்துணர்ச்சி பெற்ற அனுபவம் நினைவை விட்டு அகலாது.

கங்காஸ்ஞானம் செய்து முடித்த பின், சிறிது தொலைவில் இருந்த ராம் ஜூலா எனும் இடத்திற்கு வாடகை வண்டி மூலம் அங்கு அமைந்துள்ள சிவானந்த ஆச்சிரமம் சென்று வழிபட்டோம். தமிழ்நாட்டில் பிறந்த சிவானந்த அடிகளால் 1932ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அந்த ஆச்சிரமம் 1960ஆம் ஆண்டளவில் பெரிதாகக் கட்டப்பட்டு, தற்போது பல நாடுகளில் இருந்து நாடி வரும் அன்பர்கள் யோகம் பயிலும் மையமாகத் திகழ்கின்றது.

அடுத்த நாள் உத்தரப் பிரதேசத்தில் அமைந்த மதுராவுக்கு தெற்கு நோக்கிப் பயணமானோம். யமுனா நதிக்கரையில் அமைந்த மதுரா நகர், கண்ணன் பிறந்த இடம் என யாவராலும் போற்றப்படும் தலம் என யாவரும் அறிவர்.

1653ஆம் ஆண்டு ஷாஜஹான் எனும் மன்னனால் வெண்ணிற சலவைக்கல்லால் கட்டப்பட்ட தாஜ்மஹாலை நாம் தூரத்தில் இருந்து பார்க்கும் போதே வியப்பு மேலிட்டது. நாற்பது மீற்றர் உயரமும் முகலாய செல்வாக்கில் அமைந்த வேலைப்பாடுகளும் கொண்ட நான்கு மினரட்கள் வானை நோக்கி அமைந்திருந்தன. அருகே கோள முகடுகள் கொண்ட வேறு கட்டடங்களும் காணப்பட்டன. இருபதாயிரத்திற்கும் மேலான தொழிலாளர்களைக் கொண்டு கட்டப்பட்டதாகவும், கல்லில் நுணுக்கமான கட்டட வேலைப்பாடுகள் செய்யும் சிற்பத் தொழிலாளிகள் தொலை தேசங்களில் இருந்து வரவழைக்கப் பட்டதாகவும் கூறப்படுகின்றது.

ஷாஜகானின் இரண்டாவது மனைவி மும்தாஜ் தனது பதினாலாவது மகப் பேற்றின்போது மரணம் அடைந்ததன் நினைவாகக் கட்டப்பட்டதே தாஜ்மஹால் எனப்படுகின்றது. ஷாஜஹானின் புதல்வன் அவுரங்கசீப் தனது தந்தையிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றி, தந்தை என்றும் பாராமல் அவனை ஆக்ரா கோட்டையில் சிறை வைத்தான். அவன் இறந்த பின் தாஜ்மஹாலில் மும்தாஜின் சமாதிக்கு அருகே அடக்கம் செய்யப்பட்டான்.

ஆக்ராவில் அமைந்துள்ள கோட்டை அக்பர் சக்கரவர்த்தியால் 1565ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. அக்பரின் பேரப்புதல்வன் ஷாஜஹான் தனது ஆளுகையின் போது தனக்கு உகந்த வெள்ளை பளிங்குகளைக் கொண்டு பெரும் செலவில் மாளிகையை அலங்கரித்தான். ஆனால், பரிதாபகரமாக அதே கோட்டையில் அவனது கொடிய மகன் அவுரங்கசீப்பால் இறக்கும்வரை சிறை வைக்கப்பட்டான். பகைவர்கள் நுழைவதற்குத் திண்டாடித் திகைக்க வைக்கும் விதமாக இக் கோட்டை கட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது. யமுனை நதி ஓரம் கட்டப்பட்ட இக் கோட்டையைச் சுற்றிப் பார்த்த பின்னர் டெல்லியை நோக்கிச் சென்றோம்.

நாம் ஏறக்குறைய மூன்று தசாப்தங்களுக்கு மேலாகவே ஏங்கிக் கொண்டிருந்த இந்த நெடும் பயணம் ஜெகன் என்று அன்பாக அழைக்கப்படும் SAINICA TRAVELS நிர்வாகி ஜெகதீஸ்வர ஐயர் மூலமாகச் சாத்தியமாயிற்று! இலண்டனில் வசிக்கும் இந்த இளைஞர் பரந்த உள்ளம் கொண்ட செயல் வீரர். 'நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' எனும் பெருநோக்கால் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் பல இடங்களுக்கான பயண ஏற்பாடுகளைத் திட்டமிட்டு, எமது இனத்தவர்களுக்கு என்றே, குறிப்பாக அகவையில் முதிர்ந்தவர்கள் சௌகரியமாகப் பயணம் செய்யும் வகையில் அன்பான தமது மருமகள் மதுராவின் உதவியுடன் முன்னெச்சரிக்கையான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார். ஐக்கிய இராச்சியத்தில் மட்டும் அன்றித் தென் இந்திய, வட இந்திய திருத்தலங்கள், பிற சுற்றுலாத்தலங்களுடன் மோரிசியர்ஸ், தாய்லாந்து, கம்போடியா, வியட்னாம், சீனா ஆகிய பல இடங்களுக்கும் விமான, கப்பல் பயண ஒழுங்குகள் செய்து தாமே வழிகாட்டியாகவும் இருந்து உதவுகின்றார். எமக்கும் அந்த வாய்ப்பு அண்மையில் கிடைத்தமை எமை ஆளும் ஈசன் செயல் என்றுதான் கூறவேண்டும்! ●

(முற்றும்)



டாக்டர். என்.ஜெகநாதன்



# நீ உன்னை அறிந்தால்...?

எமக்கென பெயர், அடையாள அட்டை உள்ளபோது, இது என்ன கேள்வியென சிலர் எண்ணலாம். முகக்கண்ணாடியில் தெரிவது எமது புறத்தோற்றமே. அகத்தோற்றம் என்பது மனதைச் சாருமென்றாலும் மனம் நிரூபிக்கக்கூடிய அம்சமாக இல்லை. நவீன கைத்தொலைபேசி / கணனித் திரையில் தோன்றக்கூடிய காரிய அம்சமான (VIRTUAL) மேடையாக மனம் எமக்கு அமைகிறது. இதையே 'மனம் எனும் மேடையில்...' என சினிமாப் பாடல் வரிகளில் குறிப்பிட்டுள்ளார்கள். என்னை (நான்) என்பது ஆன்மாவைக் குறிப்பதாக ஆன்மிகவாதிகள் ஏற்கிறார்கள்.

எது எவ்வாறிருப்பினும் 'முதலில் உன்னைத் திருத்தினால் உலகம் தானாக திருந்திவிடும்' என்பதை மறுக்க முடியுமா? பழுது என்னவென்று தெரியாமல் திருத்துவது எப்படியாகும்? உன்னையே நீ அறிந்தால் பழுது ஏற்படுவதை தடுத்துவிடலாம்.

ஐம்புலன்கள் உணர்ச்சிப்பேறு (PERCEPTION) அடைய வெறும் கருவிகளாகவே உள்ளன. அவற்றில் பழுது- குருடு, செவிடு எனவாகின்றன. அறிவுணர்வுக்கு (Awareness) பங்கம் விளைந்தால் புலன்கள் இயங்கியும் பயனில்லை. கண்ணிருந்தும் (அறிவு) குருடாகி விட்டதாக இதைக் குறிப்பிடுவார்கள். அறிவு- அறிந்து கொள்தல் என்பதை அறிவுணர்வு எனப் பெயர்ச்சொல்லாக குறிப்பிடலாம்.

நடைமுறை பாவனைக்குள்ள சொற்கள் அடையாளக் குறிகளாக, கருத்துப் பரிமாற்றலுக்காக உள்ளனவேயன்றி யதார்த்த மானவை (TRUE) எனச் சொல்வதற்கில்லை. மனக்கண், உள்பார்வை, உள்விவேகம் என பலவிதமான சொற்கள் இவ்வாறமைகின்றன. அவை உவமைகளாகவும் ஆகின்றன.

அறிவுணர்வு என்பதை புலன்களின் உணர்ச்சிப் பேறுகளை விளங்கிக் கொள்தல் என்ற கருத்துடனும் கூறலாம். அதை மனம் புரிவதாக கருதினாலும் அதற்கான தளவாடம் (HARDWARE) ஆக மூளை அமைகிறது. முன்னைய அறிவு, அனுபவங்களாக அதில் பதிந்துள்ள தகவல்களின்றி அறிவுணர்வு சாத்தியமாகாது.

முன்னைய அனுபவம் / அறிவு அற்ற குழந்தை எதையும் வாயினுள் ஊட்ட / சுவைக்க எத்தனிக்கிறது. இது பிறப்பில் அமைந்துவிட்ட இயல்பே. தனது பார்வையிலுள்ளது, செவி சாய்ப்பது தாயினதா அல்லது பிறரினதா என அதன் அறிவுணர்வுக்கு எட்டுவது நாளடைவில்தான். உடலை புரட்ட, தவழ, எழுந்து நிற்க, நடக்க இயலக்கூடியதாவதற்கு அதன் நரம்புத் தொகுதி விருத்தியடைய வேண்டும், அத்துடன் பழக்கச்சார்பு (CONDITIONING) என்ற விதமாக பேச்சு உச்சரிப்பு, நடை, நடத்தை (MANNERISM) போன்றவை ஒவ்வொருவருக்கும் தனித்துவமாக அமைகின்றன.

பழக்கம் வழக்கமாகி, நடத்தை சுபாவம் என்றாகி விடுகிறது. அது ஆயுள் பூராவும் நீடித்து விடுவதை 'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை' என்பார்கள். அவ்வாறு அடையக் காரணம் அவர்கள் தம்மை அறியத் தவறுதே.

'பழகப் பழக பாலும் புளிக்கும்' என்ற முதுமொழிக்கான விளக்கம் ஆழமானது. ஒரேவிதமான அனுபவத்தை புலன்கள் மீண்டும் மீண்டும் பெறும்போது மனம் 'சலிப்பு' அடையலாம். நாளடைவில் அந்த அனுபவம் 'தேய்ந்து' (முழுமையற்றதாக) ஆகக்கூடியதே. கவனக்குறைவாகவும் இது நிகழலாம். ஒவ்வொரு தடவையும் அதே அனுபவத்தை முழுமையாகப் பெறவெனின் முன்னையது நிராகரிக்கப்பட்டதாக வேண்டும். முன்னயது ஒரு பாடமாக அமையும் பட்சத்தில் மனம் உஷார் அடைவதாகி விடுவதாகிறது. சூடு கண்ட பூனை அடுப்பை நாடாது என்பார்கள்.

சந்தேகப் பேர்வழிகள் எவரையும் சந்தேகக் கண்ணுடன் நோக்குவர். சிலர் அன்பின் கருத்தை விதவிதமாக அர்த்தம் கொள்வது வம்பில் முடிகிறது. சுபாவத்திற்கமைய அவர்களின் அறிவுணர்வு மெய்மை (REALITY) காண்பது, 'PERSONALITY IS PERSONAL REALITY' எனவாகிறது. எமது சுபாவம் / மனநிலைக்கேற்பவே எதிலும் நாம் யதார்த்தம் காண்கிறோம். மனம் குதூகலமாக அமைந்தால் எதிலும் சிறப்பையும், மனம் விரக்தியடைந்திருந்தால் எதையும் மோசமாகவும் அறிவுணர்வாக அடைகிறோம்.

தன்னைப்பற்றி அறிந்து கொள்ளாது உலகத்தை (சூழலை) அறிந்துவிட்டதாக மார்தட்டுவதில் அர்த்தமில்லை எனலாம். தன்னையறியவதற்கு புலன்கள் உதவ முடியாதன. மனம் என்று சொல்வதைவிட அறிவுணர்வாகப் பெறக்கூடிய ஆற்றல் என்பதே ஒவ்வொருவது மனத்தகைமையாகிறது என்பது பொருத்தமானது. இதைப் புரிந்து கொள்வதான அறிவே தன்னையறிதல் ஆகிறது.



எண்ணத்தோற்றம் இல்லாது எக்காரியத்திலும் நாம் ஈடுபடுவதில்லை. அதற்கான செயற்பாடு (ACTION) எமது விதி (DESTNY) ஆவதும் சுபாவம் என்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன.

விதியை மாற்றமுடியாது என்றால் சுபாவமும் மாறுதலுக்கில்லை என்றேயாகும். முற்பிறவியானது பாவம் விதியை நிர்ணயிப்பதாகக் கருதுவது ஒரு நம்பிக்கையே. மரபியல் வழியாக (GENETIC) சில உடலமைப்புகள், நோய்கள் வரக்கூடிய தன்மை அமைவது யதார்த்தமே. உடலமைப்பில் ஓரளவு மாற்றம் பெற, நோய் தவிர்க்க / தாக்கம் குறையவென நாம் உடற்பயிற்சி, உணவு முறைகளைக் கையாள்கிறோம். சுபாவமும் அதற்கான முறைகளைக் கையாள்வதால் பயனடையலாம்.

சுபாவம் தனித்துவமாக அமைந்துவிடுவதில்லை. அடிக்கடியாக, பெருமளவில் வெளிப்பாடு அடைவதை அது குறிப்பது சந்தர்ப்ப சூழ்நிலைகள் சவாலாக அமையும்போது அது வேறுபட்டதாகவும் தோன்றலாம். 'பார்த்தால் பசு - பாய்ந்தால் புலியாகவும் ஆகலாம். எச்சூழ்நிலையிலும் நிதானம் தவறாது சமநிலையிலான மனம் கொண்டதை 'PRESENCE OF MIND' என ஆங்கிலத்தில் கூறுவார்கள்.

சில நேரங்களில் சில மனிதர்கள் எவ்வாறு எண்ணமாற்றுவார்கள் என்று சொல்வதற்கில்லை. அத்தகைய மாறுபாடுகளுடன் மனம் இயங்கக்கூடியது. மனதை அறிந்து கொள்வது என்பது ஒரு முயற்சியாகக் கருதப்பட வேண்டியதேயன்றி ஒரு முடிவுக்காக அல்ல. முயற்சியின்போது கிடைக்கப்பெறும் பயன்களே முக்கியமானவை. விண்வெளி ஆராய்ச்சிக்கு முடிவு கிடைக்காது. அதன்போது பெற்ற அனுகூலங்கள் பலவுள்ளன. மனதின் ஆழமும் விண்வெளியினதைப் போலவே எனலாம்.

ஆற்றல் எனப்படுவது குறித்த ஒரு நிலைக்குரியதல்ல. இரு எல்லைகளுக்கிடையிலான தன்மை (RANGE). மன ஆற்றலுக்கு எல்லைகள் உள்ளதாகக் கருதுவது சரியென்று படவில்லை. கற்பனைத்திறன் மூலம் மனிதனின் சாதனைகள் என்றவாறு பலவுள்ளவை இதனால்தான்.

இனி என்ன காரியம் செய்யலாம்? எவ்வாறு செய்ய வேண்டியுள்ளது? செய்து முடித்தவற்றின் விளைவுகள் எவ்வாறாகும்? என்ற கேள்விகளாக எண்ணமாற்றுதல் தொடர்வதே. எண்ணங்களை நிறுத்திவிடவும், நிறுத்தத்தை நிலைநாட்ட எத்தனிப்பதும் எண்ணங்களாக செயல்படுபவனவே. தூக்கத்திற்கான ஏக்கமே தினமும் இறுதியான எண்ணமாகிறது.

எதையும் முற்றிலும் சரியாகப் புரிந்து (REALISATION) கொண்டதாக எண்ணம் அமைவது, அதுவே யதார்த்தம் என்ற தீர்வுடன்தான். அதற்கு முன்பான அதைப் பற்றிய எண்ணங்கள் இனி செல்லாததாகின்றன. அல்லது இனிமேலுமாக தெளிவு / தூய்மை தேவையற்றது என்றவாறே. யான் (தான்) கொள்ளும் அர்த்தம் சந்தேகத்திற்கிடமின்றி யதார்த்தமே என யார்தான் கூற முடியும். முன்பு கூறியதுபோல் அவரவர் சுபாவம் / அறிவுக்கெட்டியதாகவே ஒருவரது தீர்வு இதில் அடங்கும்.

நோக்கப்படுவது ஒன்றேயாயினும் நோக்கும் ஒவ்வொருவரும் வேறுபட்ட அர்த்தம் கொள்ள முடியும். இதை உணராது 'தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்களே' என்று வாதாடுவது மடமை. மேலும் தெளிவு காண தகுதி / உத்தேசமில்லை என்பதையே ஒருவர் நிச்சயமாக்கலாம். அதுவரை அலசல் / ஆராய்வதில் கவனம் செலுத்தலாம்.

அலசல் என்பது பலகோணங்களில் நோக்குவது அல்லது கிளறி/புரட்டிப் பார்ப்பதாக செயற்படுவது. எதையும் கடையில் வாங்கும்போது அவ்வாறு செய்கிறோம். பிரித்து / கூறுகளாக்கி பரிசோதிப்பது (ANALYSIS) ஆராய்ச்சியானது. எதையும் அசலா / நகலா, கலப்படம் / மாசு கொண்டுள்ளவையா என அறிய எத்தனிப்பது தூய்மை அல்லது மெய்மை (யதார்த்தம்) காணவே.

எந்த ஒரு ஆற்றலும், அதன் விளைவுகளை முன்வைத்தே மதிப்பிடப்படுகிறது. மனஆற்றலை எத்தகைய சாதனைகளைப் படைக்கவல்லதாயுள்ளதாயினும் நிரந்தர மன அமைதி காண்பதே அளப்பெரிய சாதனையாகிறது. இந்த அமைதி ஏன், எவ்வாறு குலைகின்றது என்பதற்கான அறிவைத் தேடுவதற்காகவே சுய அலசல் பயன்பட வேண்டும். ஒன்றைப் பற்றி எதையும் அறிந்திராமல் தேடமுடியுமா? இவ்வாறு மனதை மாசுபடுத்துபவையின் நீக்கமே மனத்தூய்மைக்கு வழியாகிறது.

சத்தியமே இலட்சியமாவதற்கு உன்னை நீ உணர்ந்து கொள்ள வேண்டும்! ●




# பிரித்தானிய தமிழ் மொழி பரீட்சை பரிசளிப்பு விழா

பிரித்தானிய தமிழ்மொழிப் பரீட்சைச் சபையின் (British Tamil Exam Board) பரிசளிப்பு விழா குறொய்டன் Arch Bishop Lanfrank Academy மண்டபத்தில் சமீபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்தப் பரீட்சை சபையில் அங்கத்துவம் வகிக்கும் பிரித்தானியாவிலுள்ள தமிழ் பாடசாலைகளின் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மண்டபம் நிறைந்திருந்தனர். பரீட்சைசபை நடாத்திய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு தங்கப் பதக்கங்கள், சான்று பத்திரங்கள் ஆகியன வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். பரீட்சை சபை தலைவர் சிவா பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார். மாணவர்களின் ஆர்வத்தைப் பாராட்டினார். பாடசாலை மாணவர்களின் நாடகங்கள், பட்டிமன்றங்கள், நடனம் போன்றவை சபையை வெகுவாகக் கவர்ந்தன. பரீட்சை சபை செயலாளர் கே.அரியரத்தினம், நோக்கங்களைத் தெளிவாக விளக்கினார். சபையின் பிரதம பரீட்சை அதிகாரி எஸ்.முருகையாவும் பேசினார். திருவள்ளுவர் தமிழ் பள்ளி தலைமை ஆசிரியர் தவமலர் மனோகரன் பிரதம விருந்தினராக விழாவை சிறப்பித்தார். பிரித்தானிய தமிழ் பாடசாலைகளை ஒருங்கிணைத்து, தமிழ் மொழிப் பரீட்சை மற்றும் பரிசளிப்பு விழாவையும் சிறப்புற நடாத்தியதில் ஜோசைப் விஸ்வராஜா, அரியரத்தினம், முருகையா ஆகியோர் பெரும் பங்கு வகித்துள்ளனர். நிகழ்ச்சிகளை அழகுறத் தொகுத்து அளித்தார் யோகா தினேஷ்.




வித்துவான் வேந்தனார் நூற்றாண்டு விழாவும் நூல்கள் வெளியீடும்

5 நூல்கள் +
3 குறுந்தகடுகள் +
நூற்றாண்டு மலர்

ஈழத்தமிழ் உலகின் ஈடிணையற்ற பேரறிஞன், ஈழத்தமிழரின் உரிமைக் குரலின் முதல் மகன்; தமிழர்க்கு தனிநாட்டை எழுபது வருடங்களுக்கு முன் கர்சித்து கவி வடித்த கவிஞன், செந்தமிழன்.

காலம் : 28.04.2019 ஞாயிறு
மாலை 4 மணி முதல் இரவு 10.30 மணி வரை

இடம் : Watersmeet Theatre, High Street
Herts WD3 1EH

விபரங்களுக்கு வேந்தனார் இளஞ்சேய்
0785 555 8019


## தெய்வப்பிறவி தெய்வேந்திரத்திற்கு சிலை அமைப்பு



இலண்டனில் தாயகப்பணி செய்த அமரர் பொன். தெய்வேந்திரம் அவர்களின் உருவச் சிலை, அவர் பிறந்த ஊரான உரும்பராயில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கிருந்து தமிழ் அனாதைகள் அறக்கட்டளை மூலமாக தாய்நாட்டின் வடக்கு, கிழக்கு மக்களுக்கு இவர் செய்த தொண்டுகள் மிக அபாரம் என்றே கூறலாம். சுண்ணாகத்திலுள்ள 'வாழ்வகம்' என்ற அனாதைப் பிள்ளைகளின் பணிமனைக்காக, 25 ஏக்கர் பரப்பை T.O.T. என்ற இவரின் அமைப்பு வாங்கிக் கையளித்துள்ளது. மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள அனாதை இல்லங்களுக்கு இவர் அளப்பரிய பணிகள் செய்திருக்கிறார். உருப்பராய் கிராமத்தில் "கருணை இல்லம்" என்ற அனாதைப் பெண்கள் காப்பகத்தை இவர் நிறுவியுள்ளார்.

இவரது உருவச்சிலை திறப்பு விழாவில் கலாநிதி ஆறுதிருமுருகன் உட்பட கல்விமான்கள், பேராசிரியர்கள், மனித நேயத் தொண்டாளர் எனப் பலர் பங்குபற்றிச் சிறப்பித்தனர்.

இலண்டனில் இவர் ஆற்றிய ஆத்மீகப்பணி, உயிருள்ளவரை நிலைக்கும்.

**இணுவை கோகுலன்**

## எவன்தான் மனுஷன்

**ஜோ மல்லூரி**



சுவாசத்தை இழந்தா
மட்டும் மரணமில்லடா!
மனுஷன்- நேசத்தை
இழந்தாலே
மரணந்தானடா!
வாசிக்கத் தெரிஞ்சா மட்டும்
படிப்பு இல்லடா!
மனுஷன்-யோசிக்கத் தெரிஞ்சாலே
படிப்புதானடா!
வாங்கி வாங்கிச் சேர்க்குறது
வாழ்க்கையில்லடா!
மனுஷன்-மனசு வைச்சு
கொடுக்கிறதே நல்ல வாழ்க்கைடா!
விட்டுக் கொடுத்து வாழ்ந்தாமட்டும்
நட்பு இல்லடா!
மனுஷன்-கடைசி வரை விடாததே
நட்புதானடா!
இருக்கும்போது பெறுவதெல்லாம்
ஒண்ணுமில்லடா! மனுஷன்-
இல்லாதப்ப வருவதே புகழ்தானடா!
பிறந்தபோது கொண்டு வந்தது
ஒண்ணுமில்லடா!
மனுஷன்-இறந்தபிறகு
கொண்டு போக ஒண்ணுமில்லடா!
சூதாடிப் பெறுவதல்ல
வாழ்க்கைச் சூத்திரம்!
போராடிப் பெறுவதே
வாழ்க்கைப் பாத்திரம்!
வேலிபோட்டுத் தடுப்பதற்கு
மரணமென்ன வெள்ளாடா!
நல்ல கூலி வாங்கித் தள்ளி நிற்க
எமனுமென்ன சித்தாளா!
ஏழுமலை தாண்டிப்போக
ஏவுகணை கண்டாலும்,
ஆறடியத் தாண்டிப் போக
யாருமிங்க இல்லடா!

## அன்புக்கும் பாசத்துக்கும்!



**கவிஞர் சிவசிவா அழகன்ராஜ்**



காலமே கோலமாய்
அழியுதோ!
காலமே நீர்க் கோலமாய்
அழியுதோ!

நாளுமே ஓலமாய்
அழுகுதோ!
நாளுமே பலர் ஓலமாய்
அழுகுதோ!

கல்லை வெட்டிக்
கல்லறையில் பொறித்திடலாம்
தங்கள் பெயரை!

சொல்லை நாட்டிக்
கல்வெட்டிலும் குறித்திடலாம்
தங்கள் வாழ்வை!

தாங்கள் தம் மெய்யுயிரை
நீத்தது விண்ணுக்காகவா?
தாங்கள் தம் பொய்யுடலை
சாய்த்தது மண்ணுக்காகவா?

காரணம் தெரியவில்லையே
எங்கள் மதனகாவியம்...
இன்னும் ஓயவில்லையே;

அத்தானென் றழைக்கவா
தங்கள் மனையாள் நான்
அன்புருக;

அப்பாவென் றழைக்கவா
தங்கள் தனயன் நான்
பாசம்பெருக;

தங்கள் பிரிவாற்றாமை
எங்களை இயமனுக்குத்
தரக் கொல்கிறது!
எங்கள் துயராற்றாமை
தங்களை எங்களிடம்
வரச் சொல்கிறது!

எப்படி நாம் அழுதால்
எங்களைத் தாங்கள்
செவி மடுப்பீர்கள்?

எத்திசை நாம் அழுதால்
எங்களிடம் நீங்கள்
திரும் பிடுவீர்கள்?

தங்கள் அன்புக்கு
அடி யேது!
தங்கள் பாசத்துக்கு
முடி வேது!

தங்கள் அன்புக்கும்
தங்கள் பாசத்துக்கும்
அடிமுடி என்பதேது!



**பவானி ரவீந்திரன்**

# தாயகத்தில் தவிக்கும் குழந்தைகளுக்கு வெளிச்சம் காட்டும் அற்புத மனிதர்!

தாயகத்தில் தமிழோடு ஆன்மிகப் பணியையும் இணைத்து அவர் நலிந்தோருக்கு ஆற்றுகின்ற நற்பணிகளை நேரில் பார்த்தபோது வியந்திருக்கிறேன்; நெகிழ்ந்திருக்கிறேன். இங்கு பிறந்து வளர்ந்த எங்கள் 4 பிள்ளைகளுக்கும் இப்பணிகளின் சிறப்புகளைப் பற்றி சொல்லியிருக்கிறேன்.



தாயகத்திற்கு நானும் எனது கணவரும் சிலவேளைகளில் எங்களோடு வரும் எமது பிள்ளைகளும் சிவபூமியின் அமைப்புகள் ஒன்றையாவது தரிசிக்காமல் வருவது கிடையாது. ஆனால், கோண்டாவில் சிவபூமியின் சிறுவர் பாடசாலைக்கு ஒரு தடவையும் போகவில்லை. இந்த முறையும் போகும்போது எனது அண்ணா (புதினம்) செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனின் பணிகளைப் பார்த்து வா என்றார். அது எனக்கு புதிதாகப் படவில்லை. ஒவ்வொரு முறையும் இதைத்தான் சொல்வார். அவர் மீது அளவில்லாத மதிப்பு வைத்துள்ளார்.

கோண்டாவில் உள்ள சிறுவர் பாடசாலைக்கு போக முதல் தொல்புரத்தில் உள்ள சிவபூமியின் முதியோர் இல்லத்திற்கும் போனோம். எனது கணவரின் ஊரான சங்கானைக்கு கிட்டத்தான் தொல்புரம். காலையிலேயே பஸ் எடுத்துப் போனோம். கார்த்திகை மாதம். வடபகுதியில் மழைக்காலம். இல்லத்தில் வேலை செய்பவர்கள் வழக்கம்போல அன்பாகவும், பண்பாகவும் வரவேற்றார்கள். "ஆறு.திருமுருகன் எப்போது வருவார்?" என்று விசாரித்தேன். 'புதிதாக கட்டப்பட்ட அறை ஒன்றை திறப்பதற்கு இன்று காலை 9 மணிக்கு வருவார்' என்றார்கள். அவரைக் காணவேணும், பேசவேணும் என்ற விருப்பம் இருந்தாலும், அவருடைய நேரத்தை வீணாக்கி விடுவேனோ என்ற எண்ணம். நேரத்தைப் பார்த்தேன். 9.02 மணிக்கு, கலாநிதி செஞ்சொற் செல்வர் காரில் வந்திறங்கினார். ஆன்மிகத்தோடும், அமைதியோடும் ஆளுமையோடும் காணப்பட்டார். அவருக்குரிய தனித்துவம் அது.

சம்பிரதாய முறைப்படி ஆறு.திருமுருகன் புதிய அறையை திறந்து வைத்தார். திரு.நடராசா என்பவர் அந்த அறையை அன்பளிப்பாக கட்டிக்கொடுள்ளார்கள். அனுமதியுடன், அறையை உள்ளே போய் பார்த்தேன். இரண்டு கட்டில் போடப்பட்டுள்ளது. விசாலமானது. குளியலறை இணைந்துள்ளது; வசதியானது. எனக்கும் அதில் தங்கலாம் போல இருந்தது. நடராசா அவர்களோடு பேசியபோது, அவர் ஒரு தொழிலதிபர். துணிகள் இறக்குமதி செய்பவர். அவர் அறை கட்டுவதற்கு ஈழத்திலேயே உழைத்து அந்தப்பணத்தை அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார். அவரது 'தாராள' மனதை என் மனதில் போற்றினேன்.

ஆறு.திருமுருகனைக் கண்டதில் மகிழ்ச்சி அடைந்தேன். அண்ணாவை விசாரித்தார். விடை பெறும்போது 'தண்ணி குடித்தீங்களா?' என்று கேட்டார். அப்போது எனக்கு ஒன்று நினைவு வந்தது. நான் ஊரில் வளர்ந்த போது, பக்கத்தில் உள்ள சொந்தங்கள் வீடுகளுக்கு போனால் சாப்பிடவோ குடிக்கவோ ஏதாவது தராமல் போகவிடமாட்டார்கள். வேண்டாம் என்று சொன்னால், தண்ணியாவது குடித்துவிட்டு போ என்பார்கள். ஆறு. திருமுருகன் மாதிரி மனிதர்கள் இருக்கும் வரை நமது பண்பும் கலாச்சாரமும் அழியமாட்டாது.

மழையின் காரணமாக அன்றைய தினம் சிவபூமியின் பாடசாலைக்கு போகமுடியவில்லை. சில நாட்களின் பிறகு கோண்டாவிலுக்குப் போனோம். எந்தவித எதிர்பார்ப்புடனும் போகவில்லை. பள்ளியின் வளாகத்தில் முதலில் கண்ணில் பட்டது, பூக்களால் அலங்காரம் செய்யப்பட்ட பிள்ளையார். அவர் தனக்கு அமைக்கப்பட்ட இடத்தில் சந்தோசமாக இருந்தார். வளாகமும் மிகவும் துப்புரவாக இருந்தது. பிள்ளையாரைக் கண்ட சந்தோசத்தோடு அதிபரின் அறைக்குள் சென்றோம். அதிபர் கலைவாணி குகதாசன் எங்களை முகமலர்ச்சியோடு வரவேற்றார். எனக்கு அவரோடு பேசும்போது, பக்கத்து வீட்டு சிநேகிதியோடு பேசுவது போன்ற உணர்வு ஏற்பட்டது. சில நிமிடங்களில் ஊதாப்பு நிற சேலை உடுத்திய பெண் தேநீர் கொண்டு வந்தார். அதுவும் குடிப்பதற்கு நன்றாக இருந்தது.

> **'நீங்கள் சிறுபிள்ளைகள் போல் மாறாவிட்டால், பரலோக இராச்சியத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்'**
>
> **–பைபிள், யேசுநாதர்.**

அதிபரிடம் பள்ளியைப்பற்றிய சில விபரங்களை கேட்டறிந்தேன். 300 குழந்தைகள் பதிவில் உள்ளார்கள். 2013ம் ஆண்டு ஒரு வீட்டில் சில குழந்தைகளுடன் தற்காலிகமாக ஆரம்பிக்கப்பட்டது. 2014ம் ஆண்டு தற்போதைய இடத்தில், கோண்டாவில் நிரந்தரமாக தொடங்கப்பட்டது. படிக்கும் மாணவர்களின் வயது 5 தொடக்கம் 20 வயது வரை, 20 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். பல அன்பர்கள் பள்ளிக்கூடத்தை கட்ட பெரும் உதவி செய்துள்ளார்கள். மனிதநேயமும் நலன் விரும்பும் அன்பர்களின் அன்பளிப்போடு தான் இப்பள்ளிக்கூடம் இயங்குகிறது. சிவபூமியின் பாடசாலைக்கு பஸ்கள் மாணவர்களை காலையில் ஏற்றிவரும். 8 மணிக்கு தொடங்கி 2 மணிக்கு பள்ளி முடியும். காலையில் பணிசும், தேநீரும் மத்தியானம் சோறும் கறியும் கொடுக்கிறார்கள்.

வகுப்பறைகளுக்கு கூட்டிச் சென்றார். மாணவர்கள் எங்களை 'வணக்கம்' *Good Morning* என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் கூறி, எழுந்து நின்று வரவேற்றார்கள். எல்லாக்குழந்தைகள் முகத்திலும் பெரும் சந்தோசம்.



சிவபூமி முதியோர் இல்லம்

ஆசிரியர்களோடு பேசினோம். அவர்களும் சிரித்த முகத்தோடு வரவேற்றனர்.

வகுப்புகள் ஆரம்பிக்கப்படுகிறது. தியானமும் குழந்தைகள் செய்கிறார்கள். இங்கே பெரும்பான்மையான பிள்ளைகள் பல்லுக்கூட தீட்டத் தெரியாத நிலையில் வந்து சேர்ந்திருக்கிறார்கள். ஒவ்வொரு மாணவருடைய தேவைக்கேற்ப பாடங்களை சொல்லிக் கொடுக்கிறார்கள். சிறு குழுவாக மாணவர்களைப் பிரித்து படிப்பிக்கிறார்கள். சாப்பிடுவது, எழும்புவது, இருப்பது, உடை போடுவது எப்படி என்று குழந்தைகளுக்கு பயிற்சி கொடுக்கிறார்கள். சில குழந்தைகள் மலசலக்கூடத்திற்கு போகமுதலே நனைத்து விடுவார்கள். ஆசிரியர்கள் வயது வந்த பிள்ளைகளை, ஒரு தாயைப்போல மிகவும் அன்போடும் கரிசனத்தோடும் முறையோடு கையாள்கிறார்கள்.

எல்லா வகுப்பறைகளுக்கும் போய்ப் பார்த்தோம். டிலக்சன் என்ற மாணவன் அழகாக பாட்டுப் பாடினான். காயத்திரி என்னும் மாணவி வடிவாக படம் கீறிக் கொண்டிருந்தாள். 'எனக்கொரு படம் வரைந்து தருகிறாயா?' என்று நான் கேட்டவுடன், அழகான குருவிகளை 10 நிமிடத்தில் வரைந்து தந்தாள். அந்தப்படத்தை



பொக்கிஷமாக வைத்திருக்கிறேன். வகுப்பறைகளில் மாணவர்கள் வரைந்த படங்கள், எழுதிய கதைகள், எல்லாம் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. இங்கே விளையாட்டுகளிலும் பயிற்சி கொடுக்கப்படுகிறது. துஷ்யந்தன் என்ற மாணவன் 2014ம் ஆண்டு கிரேக்க நாட்டில் நடந்த ஒலிம்பிக்ஸ் போட்டியில் (மனவளர்ச்சி குன்றியவர்க்கானதில்) வெள்ளிப் பதக்கத்தை பெற்றான்.

அவுஸ்திரேலியாவில் நடந்த ஆசிய பசுபிக் போட்டியில் இரண்டு மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள். போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களை யாழ் நகரமே வரவேற்று கொண்டாடியது. மிகவும் பெருமைக்குரிய விசயம். இவர்களுடைய முன்னேற்றத்திற்கு பின் ஆசிரியர்களின் கடும் உழைப்பு தெரிகிறது. பூமியை விட பெரும் பொறுமையோடு ஆசிரியர்கள் இயக்குகிறார்கள்.

வயது வந்த மாணவர்கட்கு தொழிற்பயிற்சியும் கொடுக்கிறார்கள். கற்பூரம் செய்து சந்தைப்படுத்தினார்கள். அச்செழுத்து (*Printing*) செய்ய பயிற்சி கொடுக்கிறார்கள். ஒவ்வொரு குழந்தையின் ஆற்றலுக்கு ஏற்ற மாதிரி பயிற்சி கொடுக்கிறார்கள். கற்பூரம் செய்வதற்குரிய மூலப்பொருட்களின் விலை கூடியதால் நெய் விளக்கு செய்து கொண்டிருந்தார்கள். சமுதாயத்தில் ஒருவராக வாழக் கற்றுக் கொடுக்கிறார்கள். பிரித்தானியாவில் மனவளர்ச்சி குன்றியவர்கள் மருத்துவமனைகளிலும் கடைகளிலும் அவர்களுடைய ஆற்றலுக்கு ஏற்றமாதிரி வேலைகள் செய்வதை கண்டிருக்கிறேன். இதே மாதிரி தாயகத்திலும் பல நிறுவனங்கள் முன்வரவேண்டும். ஆறு.திருமுருகன் பணிக்கு எப்படி நன்றி சொல்வது என்று தெரியாமல் தவிக்கிறேன்.

இந்தப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் எல்லோரும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். அவர்கள் வித்தியாசமாக இருப்பது அவமானப்படுவதற்கு ஒன்றுமில்லை. குழந்தைகட்கு அதையிட்டு ஒரு பிரச்சனையுமில்லை. மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்ற கவலையுமில்லை. அந்தக் குழந்தைகளும் ஒரு தாயின் கருவறையில் பத்து மாதம் இருந்துதான் வந்தவர்கள். அவ்வளவுதான்!

எங்கு இருட்டு இருக்கிறதோ அங்கே வெளிச்சம் வேண்டும். மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளை அவமானமாகப் பார்க்கும் எமது சமுதாயத்தில் என்ன செய்வது என்று தெரியாமல் வலியோடும் வேதனையோடும் இருந்த பெற்றோர்கட்கும் கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்ட குழந்தைகட்கும் 'இதோ நானிருக்கிறேன்' என்று நேர்மையும் மனத்துணிவும் அசையாத கடவுள் நம்பிக்கையும் கொண்ட ஆறு.திருமுகன், இப்பாடசாலையை தொடங்கியுள்ளார். அவர் வெளிச்சத்தை காட்டியுள்ளார். அது பிரகாசமாக ஒளிர்கிறது. அது தொடர்ந்து ஒளிர நாங்கள் எல்லோரும் உதவிக்கரம் நீட்ட வேண்டும்.

நானும் அப்பள்ளியிலிருந்து குழந்தைகளின் களங்கமில்லாத அன்பையும் சந்தோசத்தையும் என்னோடு எடுத்து வந்தேன். இவ்வளவு சந்தோசமும் என் வாழ்நாள் முழுவதும் என்னோடு வாழும். ●



ஆசிரியையுடன் கட்டுரையாளர்





ப.வை. ஜெயபாலன்



## கேள்வி என்றால் கௌணாவத்தை

# வைரவர் ஆலய வேள்விதான்!

மாசி, பங்குனி என்றால் மனதில் மலர்வது ஊர் வேள்விகள்தான். யாழ்ப்பாணத்தின் அன்றய கலாசார அடையாளங்களில் ஒன்று. இன்று, அவை இல்லை என்றாலும் மனதில் நினைவுகள் நின்றாடுகின்றன. வலி வடக்கு எங்கள் பிரதேசம். மாவை கந்தன் ஆலயம், துர்க்கை அம்பாள் கோயில், நகுலேஸ்வரம் என பிரசித்திபெற்ற பழமை ஆலயங்களும் அங்குதான். கௌணாவத்தை, தச்சங்காடு என்பன உட்பட வேள்விக்கு பெயர்போன வைரவர் ஆலயங்களும் அங்குதான்.

**யாழ். குடா நாட்டில் அது ஒரு கொண்டாட்டம்!**

வீட்டுக்கு வீடு தோட்டம், வயல், ஆடு, மாடு, கோழி வளர்ப்பு என உப வருவாய் வழிகள். மகாஜனா, யூனியன் சென்கென்றீஸ் என்று உத்தியோகஸ்தர்களை வீட்டுக்கு வீடு உற்பத்தி செய்த உயர்தர கல்லூரிகளும் கூட அங்குதான். ஆனாலும் சிக்கனம், சேமிப்பு, சீதனம் சம்பாத்தியம் என்ற கடும் உழைப்புடன் கூடிய மரபுவழி உதிர பழக்க வழக்கங்களுக்கும் குறைவில்லை.

வேள்வி என்றால் கௌணாவத்தை வைரவர் கோயில் வேள்விதான்-யாழ்குடா நாட்டுக்கே அது ஒரு கொண்டாட்டம். பாம்பு போன்ற விச யந்துகள் தீண்டாமல், நோய் நொடி தாக்காமல் தம்மை காப்பாற்றும்படியாக வேண்டி நேர்த்தி வைத்து தம் வளர்ப்பு சேவல், ஆட்டுக்கடாவை கோயில் வேள்விக்கு நேர்ந்து விடும் ஒரு நம்பிக்கை சடங்கு இந்த வேள்வி. காங்கேசன்துறை சீமெந்து தொழில்சாலையின் காலை மாலை "சைறன்" சங்கொலி ஓசை கேட்கும் தூரம் எல்லாம் உள்ள ஊர்கள் அனைத்துக்கும் இது வேள்விக்கோயில். கருங்கம்பானை கீரிமலையை ஒட்டிய ஒரு சிற்றூர் இந்த கௌணாவத்தை.

வேள்விக்கு நேர்ந்த கடாக்களை வளர்ப்பதிலும் ஒரு நேர்த்தி. வருடா வருடம் கன்னரின் வளர்ப்புக்கிடாய்க்குத்தான் கியாதி. மாடு அளவுக்கு அவர் கடாவின் வளர்ப்பு தேறும். கடாவை தெரிவு செய்வதும் ஒரு நுணுக்கம். நல்ல இனத்தில் இனப்பெருக்கத்துக்கு என்றே கிடா வளர்ப்போர் ஒரு சிலர் இருப்பார்கள். மறி ஆடு கடாமீது நாட்டம் கொள்கிறது என்றால் கட்டியுள்ள கயிற்றோடு சுத்திச் சுத்திக் கத்தும். கடாக்கு விடும் கந்தையா வீட்டுக்கு மறி போகும். கழுத்து கயிற்றை இழுத்தபடி குழையை கட்டிக்கொண்டு முன்னால் ஒருவர், பின்னால் ஒருவர் தள்ள கடா நகரும். குட்டி போட உள்ள மறிக்கு விசேட கவனிப்பு. குட்டி ஈன்றதும் குட்டிகளில் நிறம், பருமன், நெற்றி சுட்டி என்று பார்த்து வேள்விக்கு உரிய குட்டி தேர்வு நடக்கும். நல்ல குட்டிகளை வேள்விக்கு வளர்க்க விற்பனை செய்யப்படுவதும் உண்டு.

வேள்விக்கு தெரிவான கடாவுக்கு விசேட உணவு வகை. குட்டிப்பருவம் தேறிய பிறகு அதை கீழ் கிடங்கில் வளர்ப்பவர்களும் இருப்பார்கள். கடாவை கட்டி வளர்த்தால் கயிற்றில் சுற்றி வட்டமிட்டு இளைத்துப் போகும், கண்ணூறு பட்டு மெலிந்து போகும் என்பதால் இந்தக் கிடங்கு வளர்ப்பு. மேலே கூரை, இறங்கிபோய் இரை ஊட்ட படிக்கட்டு. உள்ளே கிடாய். உளுத்தம் கோது, புண்ணாக்கு, சீமை கிறவை இலை குழை என்ற சத்துணவு கடாவை புஷ்டியாக்கும். ஒரு கையால் உணவை தீத்தி, மறுகையால் கடாவின் பிடரியை தடவி வளர்ச்சியைப் பார்த்து மன மகிழ்ச்சியில் திளைப்பது வளர்ப்பவனின் பழக்கம்.

வேள்வி நெருங்க நெருங்க வளர்ப்பு முறை மாற்றமும் வேகமும் பெறும். உணவு சமிபாடாகி மீண்டும் பசி எடுக்க வேண்டும் என்பதற்காக கஞ்சா போன்ற போதை வஸ்து குழையோடு சேர்த்து கொடுபடுவதாகவும் கூறப்படுவதுண்டு.

வேள்வி நாள் விளக்கு வைப்புடன் ஒரு வெள்ளிக்கிழமை தொடங்கும். மறு வெள்ளி இரவு வேள்வி கலகலப்பு.





சந்திமடுவு, கோயிலடி, தெருச்சந்தை எங்கும் யார் என்ன கடா வளர்க்கிறார்கள் என்ற விடுப்பு விண்ணானக் கதைகள் தொடரும். கதைக்கு கை, கால் முளைத்து கன்னர்கிடாய் பற்றி பெரிய எதிர்பார்ப்பை கிளப்பும். வேள்வி வெள்ளி இரவு, கடாவுக்கு விசேட சோடனை, மாலை, பொட்டு பட்டுச் சால்வை. கோயிலுக்கு கடா கொண்டு செல்லப்படுவதும் ஊர்வலமாகத்தான். நாற்புறமும் சோடித்த உழவு யந்திர வாகனம். மின்சார அலங்காரம். முன்னாலே தவில், நாதசுர ஒலி அல்லது பறை மேளம். மேலே பந்தலைப் போல நகரும் வெள்ளி விரிப்புக்கு கீழே பொங்கலுக்கான பண்டங்கள். அழகாக பட்டுச் சேலை கட்டிய பெண்களின் தலையில் பால் பானை பிற. கற்பூரச்சட்டி, கரகம் காவடி என்ற கலகலப்பும் இருப்பதுண்டு. கரிய, பருத்து திரண்ட, அழகான கடா கதாநாயகனாக கொம்புகள் வளைந்து பளபளப்பாக ஆனந்த சிலிர்ப்புடன் தலையை ஆட்டிக்கொண்டு உழவு இயந்திரத்தில் ஊர்வலம் வரும். தன் தலை உருளப் போவதை அறியாத ஐந்து அறிவு ஜீவன் அது.

சிகரம், சப்பறம், வானவெடியின் வர்ணஜாலம், மேளச்சத்தம், சின்ன மேள ஆட்டம் என்று கோயில் சுற்றாடல் ஆரவாரத்தில் அதிரும். வடக்கு வீதி மேடையில் கலை நிகழ்ச்சி விடிய விடிய தொடரும். சுற்றாடல் எங்கும் வரிசை வரிசையாக பொங்கல் பானைகள். புகை மண்டலம், காப்பு, கடைகள். பொம்மை விற்பனை விரிப்புகள், சிறுவர்களின் விசில், பொம்மை குழல் ஊதல் ஓசைகள். காற்றாடிக்காரன், பலூன்காரன், தும்பு



முட்டாய், மிட்டாய் விற்பனைக்காரன் என சிறுவர்களை கவரும் விற்பனைக்காரர்கள். கள்ள சாராய விற்பனைகள்.

அதிகாலையே கிடாய் வெட்டு ஆரம்பிக்கும். கட்டணம் வெட்டுக்கு கட்டிய கிடாய்கள் வரிசையில் நிற்கும். வைரவர் கோவில் வாசல் முழுக்க முற்றத்தில் பெரிய பெரிய வெட்டுக்கத்திகள். உருவேறி ஆடும் பூசாரி. கழுத்தை கொடுத்து கொண்டு பெரிய ஆடுகள் திமிறாமல் நிற்கும். குட்டிகள் சின்னன்கள் என்றால் முன்பின் ஒவ்வொருவர் இழுக்க வெட்டு தலையை துண்டாக்கும்.

கழுத்து ரத்தம் கனதூரம் பீச்சி அடிக்கும். ஆடு துடித்து விழும். இழுத்து சென்று ஓரமாக உள்ள வீதியில் வரிசையாக விலை கூவலுடன் விற்பனை ஆரம்பிக்கும். பின்புறம் சைக்கிள் கரியரில், அல்லது வாகனத்தில் வாங்கிய கடா பங்கு இறைச்சியாகி, பயன்பட வீதியில் பயணிக்கும்.

துண்டாடப்பட்ட கடா தலைக்கு தனி விலை. வைரவர் வாசலில் வெள்ளக்காடாக இரத்தம் முட்டி வழியும். அழகான கொண்டை பூவுடன் அறுத்த சேவல்களின் தலைகள் கடகங்களை நிறைத்துக்கிடக்கும். இன்று எல்லாமே மாற்றம்தான். வேள்விக்கும் சட்டத்தடை. நேர்த்தி ஆடுகள் உயிரோடு கோயில்களில் ஏல விற்பனையாகி வீடுகளில் விருந்தாகிறது. அந்த வழக்கம்-புலம் பெயர் நாடுகளிலும் பங்கு இறைச்சிப் பழக்கம். ●

# வாழ்நாள் சாதனையாளர்

# நாடகர் பாலேந்திரா

எசெக்ஸ் தமிழ் கழகத்தினதும் தமிழ்ப் பாடசாலையினதும் ஆண்டுவிழாக்களில் தமிழ், சமய, சமூகத் தொண்டாற்றி வருபவர்களைக் கௌரவித்து, அவர்களுக்கு வாழ்நாள் சாதனை விருது வழங்கி வருகிறார்கள். அந்தவகையில் இவ்வாண்டு தமது 20 ஆவது ஆண்டு விழாவில் நாடகர் திரு. பாலேந்திரா கௌரவிக்கப்பட்டார்.

கடந்த மார்ச் 10 ஆம் திகதி கிழக்கு லண்டனில் ரெட் பிரிட்ஜ் நகர மண்டபத்தில் நடைபெற்ற எசெக்ஸ் தமிழ் கழகத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு கலை விழாவில் மூத்த ஈழத்து நாடகக் கலைஞர் திரு. க. பாலேந்திரா அவர்கள் ரெட் பிரிட்ஜ் நகர மேயர் கவுன்சிலர் திருமதி டெபி கவுர் தயிரா அவர்களிடமிருந்து வாழ்நாள் சாதனையாளர் விருதினைப் பெற்றார்.

வைபவத்தின் போது, சங்கத் தலைவர் திரு. க. ஜெயக்குமார் அவர்கள் திரு. பாலேந்திரா அவர்களின் தமிழ் கலை உலக பங்களிப்பை பற்றி விளக்கி, திரு. பாலேந்திராவோடு இணைந்து கலைப் பணியாற்றும் அவரது துணைவி ஆனந்தராணியையும் மேடைக்கு அழைத்தார். லண்டன் ஸ்ரீ முருகன் கோயில் பிரதம சிவாச்சாரியார் கயிலை இராம நாகநாதசிவன் குருக்கள் பாலேந்திராவுக்கு தலைப்பாகை அணிவித்து வழங்கிய நல்லாசிகளுடன் இந்த விருது வழங்கப் பட்டது. கழகத்தின் நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் அங்கு நுண் கலை தமிழ் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் ஆகியோரையும் மேடைக்கு அழைத்து, அவர்கள் சூழ மேடையில் நிற்க திரு. ஜெயக்குமார் வாழ்த்துப் பாவினை வாசித்தார். பின்னர் விருது வழங்கப்பட்டது. அப்போது திரு. க. பாலேந்திரா அவர்களுக்கு "அண்ணாவி மேதை " என்ற சிறப்புப் பட்டமும் வழங்கப்பட்டது.

அந்த வாழ்த்து மடலில் "கூத்து என்ற நாடகத்தை மேம்படுத்தும் நோக்கோடு அவைக்கு ஆற்றும் கழகம் என்ற அமைப்பினை உருவாக்கி நாற்பது ஆண்டுகளுக்கு மேல் அதற்கு உரமூட்டிக் கலைப்பணி ஆற்றி வருகின்ற திரு. கனகரத்தினம் பாலேந்திரா அவர்களின் நற்பணியைப் பாராட்டி அவருக்கு எசெக்ஸ் தமிழ் கழகத்தினர் தமது 20ஆவது ஆண்டு காலை விழாவின் போது அண்ணாவி மேதை என்ற பட்டத்தைச் சூட்டி மகிழ்ந்தபோது பாராட்டிப் பாடிய வாழ்த்துமடல்" என்ற குறிப்புடன் வாழ்த்து பாடல் வரையப் பட்டுள்ளது.




அன்றைய தினம் சுமார் 300 இளையவர்கள் பயிலும் எசெக்ஸ் தமிழ் கழக மாணவர்களின் இயல் இசை நாடக நிகழ்ச்சிகள் மிக சிறப்பாக நடைபெற்றன. "அறிவு தந்த அரிவை" என்ற 20ஆண்டு நிறைவு நினைவு மலரும் வெளியிடப்பட்டது. மண்டபம் நிறைந்த அவையினர் இளையவர்கள் தமிழ் கலை திறன் கண்டு மகிழ்ந்தனர்.

எழுபதுகளின் ஆரம்ப காலத்தில் இருந்தே தாயகத்தில் நாடகத்துறையில் ஈடுபட்டு உழைத்து தனக்கென தனி முத்திரை பதித்து வருபவர் பாலேந்திரா. 40ஆண்டுகளுக்கு முன்னர் 1978இல் தமிழ் அவைக்காற்று கலைக் கழகம் என்ற அமைப்பை உருவாக்கி அதனூடாக தமிழ் நாடகப் பணி செய்து வருகிறார். எண்பதுகளில் லண்டனுக்கு புலம் பெயர்ந்த பின்னரும் இவர், தொடர்ச்சியாக இன்றுவரை லண்டனிலும் மற்றும் புலம்பெயர் நாடுகளிலும் நாடக செயற்பாடுகளை தொடர்ந்து செய்து வருவது குறிப்பிடத்தகுந்தது. 70க்கு மேற்பட்ட காத்திரமான நாடகங்களை, தயாரித்து சுமார் 500க்கு மேற்பட்ட நேர்த்தியான நாடக மேடையேற்றங்களை உலகெங்கும் நிகழ்த்தி சாதனை புரிந்து வருகிறார். தமிழ் நாடகங்களை உலகில் பல நாடுகளுக்கு கொண்டு சென்று நிகழ்த்தியவர். சுமார் 30 வருடங்களாக லண்டனில் பிறந்து வளரும் தமிழ் சிறுவர்கள் இளையோர்களை பயிற்றுவித்து ஒரு இளைய தலைமுறை நாடகர்களை லண்டனில் உருவாக்கி வருகிறார். 15 வருடங்களுக்கு மேலாக லண்டன் தமிழ் நாடகப் பள்ளி என்ற அமைப்பை உருவாக்கி மனைவி ஆனந்தராணியுடன் இணைந்து வாராந்தம் சிறுவர்களுக்கு நாடக பயிற்சி வழங்கி வருகிறார். லண்டன் தமிழர் அமைப்புகள் பல இவருக்கு விருது கொடுத்து கவுரவித்துள்ளன, கனடாவில் தமிழர் தகவல் விருது மற்றும் அஃகேனம் விருது ஆகியவற்றை பெற்றுள்ளார். இலங்கையில் இவரது நாடக முயற்சிகள் குறித்து பாடசாலைகளிலும், பல்கலைக் கழகங்களிலும் மாணவர்கள் பயிலுவதுடன்,



ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகின்றனர். தற்போது அடிக்கடி தாயகம் வந்து இளையவர்களுக்கு அரங்கப் பயிற்சி கொடுத்து வருகிறார். இலங்கையில் 2013இலும் 2015இலும் நாடக நிகழ்வுகளை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய இடங்களில் நிகழ்த்தியுள்ளார். ●




9ம் பக்கத்தின் தொடர்ச்சி...

இதன் அர்த்தம் பாதை அல்லது வழியைக் கண்டுபிடிப்பவர் என்பதாகும். இவ்விண்கலத்தில் மிகவும் பழமைவாய்ந்த செம்மொழிகளில் ஒன்றான தமிழிலும் உரையாடலை பதிவு செய்து ஒலிபரப்புவதற்காக அனுப்பியிருந்தார்கள், ஏனெனில் செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் இருந்தால் அவர்கள் தமிழை விளங்கக் கூடியவர்களாக இருக்கலாம் என்ற கருத்தே. இச்செய்தி எமக்கு ஒரு முக்கிய விடயத்தை சொல்லுகின்றது.

மாறிவரும் இவ்வுலகில் எமது குழந்தைகளுக்கும் இனிவரப்போகின்ற தலைமுறையினருக்கும் எமது பொக்கிசங்கள் சரியான முறையில் கையளிக்கப்பட வேண்டும் என்பதே. இது நம் ஒவ்வொருவரதும் கடமை.

இந்தத் தலைமுறையினர் தவறின், எம்மை எந்தத் தலைமுறையினரும் மன்னிக்க மாட்டார்கள்.

இதற்குத்தானே ஆங்காங்கே கோவில்களும் பள்ளிக்கூடங்களும் இயங்குகின்றன என்று கூறுபவர்களும் உளர். அப்படியானால் ஏன் எமது குழந்தைகளைத் தமிழ்ப் பெயரினால் அழைக்க முடியவில்லை? ஏன் அவர்கள் வாயில் தமிழ் நடனமிடவில்லை? ஏன் கோவில் என்று சொன்னவுடன் இன்று வீட்டுவேலை நிறைய இருக்கின்றது என உடன் பதில் வருகின்றது? ஏன் வீட்டில் அம்மா என அழைக்கின்ற பிள்ளை, தெருவில் இறங்கியவுடன் மம்மி என பாடுகின்றனர்? ஏன் தம்மைத் தமிழர்களாகப் பார்க்க, அறிமுகப்படுத்தத் தயங்குகின்றார்கள்?

நிறையவே செய்யவேண்டியுள்ளது, முதலில் பள்ளிக்கூடங்கள் கோவில்களாக மாறவேண்டும்! கோவில்கள் பள்ளிக்கூடங்களாக மாறவேண்டும்!. அதன்படி பார்த்தால் இரண்டும் இரட்டிப்பாவதுடன் நாம் அனைவரும் கற்கவும் கற்பிப்பதற்கும் எம்மைத் தயார்படுத்துவதன் மூலம்தான், எமது மனச்சுமையை இறக்கி எதிர்காலத்தைப்பற்றிய பயத்தினை விலக்கி, சைவத்தையும் தமிழையும் சிறிய வட்டத்தில் இருந்து உலக வட்டத்திற்கு மாற்றமுடியும். இதற்கு கருத்தொருமித்தவர்கள் கூடி கலந்துரையாடி, நியாயமானதும் ஆக்கபூர்வமுமானதுமான முடிவுகளை எடுத்து, நடைமுறைப்படுத்துவதன் மூலம் மட்டுமே, உருப்படியான மாற்றத்தினை கொண்டுவர முடியும்.



சைவத்தமிழ் வாசக அன்பர்களின் எண்ணங்களையும் கருத்துக்களையும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன். தொடர்புகளுக்கு, தொலைபேசி: 07448067799. agamumpuramum@gmail.com ●







# இலண்டன் தமிழ் பெண்கள் அமைப்பு நடத்திய மகளிர் தினம்

இலண்டனில் தமிழ்ப் பெண்களை ஒருங்கிணைத்து இலண்டன் தமிழ்ப் பெண்கள் அமைப்பு மிகவும் சிறப்பாக மகளிர் தினத்தைக் கொண்டாடியுள்ளது. பெண்களின் எழுச்சியைக் கருத்தில் கொண்டு வருடந்தோறும் மார்ச் 8ஆம் திகதி உலகெங்கும் மகளிர் தினம் சிறப்பிக்கப்படுகின்றது. அதனை முன்னிட்டே மார்ச் 9ஆம் திகதி சனிக்கிழமை இவ்வமைப்பினரால் ஹறோ சென்ட் அன்ரூஸ் தேவாலய மண்டபத்தில் மாலை 4.30 மணிக்கு நிகழ்வு ஆரம்பமாகியது. தமிழ் முறைப்படி கோலம், நிறைகுடம் என்பன வரவேற்க மண்டபத்துள் நுழைவோரை நிர்வாகத்தினர் அன்போடு வரவேற்றுக் கொண்டனர்.

மங்கல விளக்கேற்றல், அகவணக்கம், மன்றக்கீதம் ஆகியவற்றைத் தொடர்ந்து வரவேற்புரையை நவஜோதி யோகரட்னமும் தலைமையுரையை மாதவி சிவலீலனும் நிகழ்த்தினர். அடுத்து இளையோர் அரங்கு இளம் பெண்பிள்ளைகளால் முன்னெடுக்கப்பட்டது. அவ்வகையில் ஆரணி நித்தியலிங்கம் தமிழ் தொலைக்காட்சி நாடகங்களில் பெண் பிம்பம் பற்றியும், சியானுகி பிரபநாதன் தமிழ் பண்பாடு கலாசாரம் பற்றியும் நீரூஜா சுமந்திரன் பெண்களின் உடலியற் பிரச்சினைகள் பற்றியும் வைஷ்ணவி கணேசராஜா பெண்களின் உரிமைகள் பற்றியும் விக்ஷணிகா நித்தியானந்தா பாலின ஊதிய இடைவெளி பற்றியும் அபிஷேக்கா நித்தியலிங்கம் பாலின இடைவெளி பற்றியும் அபிராமி ஜெயசீலன் திருநங்கைகள் பற்றியும் உரையாற்றிய போது அரங்கமே அவர்களைப் பெருமையுடன் பார்த்து






வியந்தது.

'பெண்' எனும் தலைப்பில் இடம்பெற்ற காத்திரமான கவிதை நிகழ்வில் நிவேதா உதயராயன், அனுசியா ஜோதிபால், நவஜோதி யோகரட்னம், மாதவி சிவலீலன், நிலா பரமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். 'புலம்பெயர் தேசத்தில் தமிழ்ப் பெண்களின் சமத்துவம் பேணப்படுகின்றது/ பேணப்படவில்லை என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றத்தில் ரஜித்தா சாம் நடுவராக விளங்கி நிகழ்வை விறுவிறுப்புடன் நடத்தினார். இரு அணிகளும் சிந்தனையைத் தூண்டும் வகையில் நகைச்சுவையுடன் தமது விவாதங்களை முன் வைத்த போது சபையினர் பலத்த கரகோஷமிட்டு இரசித்தனர். இதில் பாமினி ஜெயநேசன், வாசுகி பரந்தாபன், கஸ்தூரி சிவயோகநாதன், மாயா நவநீதனாதன், ஜீன் ஜோசப், புனிதா ரகுராஜ் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர். தொடர்ந்து முதியோரினால் கோலாட்டம் ஆடப்பட்டது. தாளம் தப்பாது கச்சிதமாக இசையோடு இசைந்து ஆடிய ஆடல் அனைவரையும் கவர்ந்திருந்தது. இதில் மகேஸ்வரி பத்மநாதன், கமலா சதாசிவம், ஜெயலக்ஷ்மி மயில்வாகனம், லலிதா ஜூடா, லக்ஷ்மி மூர்த்தி, சுகிர்தா செல்வராஜா ஆகியோர் பங்கு பற்றியிருந்தனர்.

சிறிய இடைவேளையின் பின்னர் 'மாற்றாள் வீட்டு மல்லிகை' எனும் நாடகம் மேடையேற்றப்பட்டது. சபை நிறைந்த சிரிப்பொலியுடன் பெண்களுக்கான வாழ்வை இரசிக்கவும், ஒருவரையொருவர் கொண்டாடவும் புறம் பேசா மனத்தினராய் இருக்கவும் நேர்மறை எண்ணங்களை ஒதுக்கவும் பழக வேண்டுமென்ற செய்திகளைச் சொல்வதாக அந்நாடகம் அமைந்திருந்தது. இந்நாடகத்தில் ராஜேஸ்வரி பாலராஜன், அகல்யா நித்தியலிங்கம், காயத்ரி ஸ்ரீகரன், கஸ்தூரி திவானி பிரதாபநாதன், வசந்தகுமாரி நித்தியானந்தா, மாதவி சிவலீலன் ஆகியோர் நடித்திருந்தனர். தொடர்ந்து அதிர்ஷ்ட லாபச்சீட்டில் வெற்றி பெற்றோருக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

நிறைவாக 'புலம்பெயர் சூழலில் தமிழ்ப் பெண்கள் எதிர் நோக்கும் சவால்கள்' எனும் தலைப்பில் அனைத்துலக உளவள ஆலோசகர் வேணி விஜயராஜா அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினர். சபையினரின் கேள்விகளுடனும் கருத்துப் பரிமாற்றங்களுடனும் உரை பிரயோசனமாக அமைந்ததாகச் சபையோர் கூறி மகிழ்ந்தனர். நன்றியுரையினை தமயந்தி சண்முகநாதன் கூறினார். அனைத்து நிகழ்ச்சிகளையும் நிலா பரமலிங்கம் அழகாகத் தொகுத்து வழங்கினார். மேடையின் பின்புறம் இருந்து நளாயினி திறமையுடன் ஒலியமைப்பு வசதியினை ஏற்படுத்திக் கொடுத்தார்.

நிகழ்வுகள் அனைத்தும் நேர்த்தியாகவும் செம்மையாகவும் ஒழுங்கமைத்து அனைத்து மட்டப் பெண்களையும் ஒருங்கிணைத்து நடத்தியமையால் வந்திருந்த அனைவருக்கும் மகிழ்ச்சியையும் புத்துணர்ச்சியையும் தந்ததாக விழா முடிவில் அனைவரும் பேசிக் கொண்டதைக் காணக் கூடியதாக இருந்தது. உணவு பரிமாற்றம் முதல் அரங்கு நிகழ்வு வரை எதுவுமே சோடை போகவில்லையெனப் பாராட்டப் பெற்ற இவ்விழாவில் அனைத்து வேலைகளும், குறிப்பாக ஒலி வாங்கி அமைப்பு, புகைப்படம் எடுத்தல் போன்ற அனைத்துமே பெண்களாலேயே முன்னெடுக்கப்பட்டன. ஆண்களை அனுமதிக்காது பெண்கள் தங்களைத் தாங்களே கொண்டாடி மகிழ்ந்து சுதந்திர மனநிலையுடன் புத்துணர்வு பெற்றவர்களாக விடை பெற்றுச் சென்றனர். ●

## முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு அமைப்புகளுக்கு லண்டனிலிருந்து உதவி

லண்டன் பிரபல நடன ஆசிரியை கலாநிதி ஜெயந்தி யோகராஜாவினால் ஏற்பாடு செய்யப்பட்டு, ஹறோவில் நடந்த நாட்டியவிழா நிதி சேகரிப்பு நிகழ்வின் மூலம் சேகரிக்கப்பட்ட நிதி உதவியையும், பொருள் உதவிகளையும் முல்லைத்தீவில் வாழும் விதவைகள் குடும்பத்திற்கும்,



புதுக்குடியிருப்பு 'ஒளிரும் வாழ்வு' மாற்றுத் திறனாளிகளின் அமைப்புக்கும் சமீபத்தில் வழங்கப்பட்டது. அங்கு நேரில் இவைகளைச் சமீபத்தில் ஜெயந்தி யோகராஜா அவர்களே எடுத்துச் சென்று வழங்கியிருந்தார்.



நடன ஆசிரியைகளான ரட்ணலட்சுமி, பாமினி சித்தரஞ்சன், அனனியா ஜங்கரன், நந்தினி ராஜன், பிரியதர்சினி துளசீதரன், சங்கீத நவரட்னம், சாந்தி பிரதீபன், சோபிகா துளக்சன், கௌசல்யா பிரதாபன், சஸ்கியா யோகராஜா ஆகியோரை இணைத்தே நாட்டியவிழா நடாத்தப்பட்டது. டாக்டர் ஜெயந்தி யோகராஜா எழுதித் தயாரித்த நாட்டிய நாடகமே "JOURNEY OF DANCE".

## இறுதிச் சுற்றுக்கு ஈழத்துச் சிறுமி!



'சுப்பர் சிங்கர்' என்று உலகத் தமிழ் ரசிகர்களிடையே பிரபலமான போட்டிப் பாடல் நிகழ்ச்சியில் ஜூனியர் பிரிவில் (16 வயதுக்குட்பட்ட) இறுதிச் சுற்றுக்கு மூவரில் ஒருவராக கனடாவில் வாழும் ஈழத்துச் சிறுமி சின்மயி தெரிவாகியுள்ளார். கடுமையான போட்டியில், உலகத் தமிழ் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளார். சாவகச்சேரி, மட்டுவில் பகுதியை சேர்ந்த இவர், சிறு வயதில் தாயகத்தில் ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாக கனடாவுக்கு பெற்றோருடன் சென்று வாழ்ந்து வருகிறார். நிகழ்வில் கலந்து கொண்ட அவரது தாயார் ஆனந்தக் கண்ணீர்விட்டு, மகிழ்ச்சியை தொலைக்காட்சியில் தெரிவித்து, நேயர்களை நெகிழ வைத்தார்.



ஏ.ஜே.ஞானேந்திரன்

# பாதி உலகச் சொத்து 26 பணக்காரர்களிடமா?

இன்று பூமியின் பாதிப் பகுதியை நிறைத்திருப்பவர்கள் உலகின் மிக வறியவர்கள். இவர்கள் தொகையை 3.8 பில்லியன் என்ற கணக்கிடுகிறார்கள். இந்த 3.8 பில்லியன் தொகையினரின் மொத்தச் சொத்து மதிப்பு, உலகின் 26 அதிஉச்ச பில்லியனர்களிடம் இருக்கின்றதாம். அட பாவமே என்று கவலைப்படுவதா அல்லது அம்மாடியோவ் என்று வாயைப் பிளப்பதா? சுவிஸ் நாட்டின் டாவோஸ் நகர மாநாட்டில் ஒக்ஸ்பாம் என்ற அமைப்பு இந்தப் புள்ளி விபரங்களை வெளியிட்டதுடன், கடந்த ஆண்டு பணக்காரர்கள் மேலும் தனவந்தர்களாக, ஏழைகள் மேலும் வறிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ளது. இந்தப் பணக்காரர்கள் செலுத்த வேண்டிய வருமான வரித் தொகையை ஒரேயொரு வீதத்தால் அதிகரித்தால் போதும். இதன் மூலம் 418 பில்லியன் டொலர் மேலதிக வருமானம் ஈட்ட முடியும். இந்தப் பணத்தால் கல்வி கற்காமல் இருக்கின்ற ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்வி கற்பிக்க முடியுமாம். அதேபோல சுகாதார வசதிகளும் செய்து, 3 மில்லியன் மரணங்களைத் தடுத்து நிறுத்தமுடியும் என்கிறார்கள். அட கடவுளே ஒரு வீதத்திற்கு இவ்வளவு சக்தியா?

ஒக்ஸ்பாம் அமைப்பு கொடுக்கும் ஒரு புள்ளிவிபரத்தைக் கவனியுங்கள். உலகெங்கிலுமுள்ள 2200 பில்லியனர்களின் வருமானம், 2018ஆம் ஆண்டில் 900 பில்லியன் டொலர்களால் அதிகரித்துள்ளது என்கிறார்கள்.




ஒவ்வொரு இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை, புதிய பில்லியனர் ஒருவர் உருவாக்கப்பட்டுள்ளார். அதாவது ஒரு நாளில் 2.5 பில்லியன் டொலர் வருமான அதிகரிப்பு! 12 வீத வருமான அதிகரிப்பு செல்வந்தர்கள் உலகில் இடம்பெற, 11 வீத வருமான வீழ்ச்சி ஏழைகள் உலகில் சம்பவித்துள்ளது.

பட்ட காலிலேயே படும். கெட்ட குடியே கெடும்.

# வெடவெடக்கும் குளிரில் மரதன் ஓட்டம்

மரதன் ஓட்டப் போட்டிகளில் கலந்து கொள்ள உங்களுக்கு ஆர்வம் இருக்கலாம். ஆனால், ஜாக்கிரதை உலகிலேயே மிகவும் குளிரான ஓட்டப்பந்தயம் இது!

நடக்கும் இடம் சைபீரியா. இங்குள்ள ஒய்ம்யக்கன் என்று அழைக்கப்படும் குக்கிராமம் ஒனறில்தான் இந்தப் போட்டிகள்



முதற் தடவையாக இடம்பெற்றன. வைர அகழ்வுக்கு பிரபல்யமான யக்குட்டியா என்ற பிராந்தியத்திலேயே இக் கிராமமும் இருக்கின்றது. குறித்து வைத்துக் கொள்ளுங்கள். போட்டி ஆரம்பத்தின் போது வெப்ப நிலை (குளிர் நிலை) மைனஸ் 52 பாகை!!!!!!!!!! 21 வயதிலிருந்து 71 வயதுவரை போட்டியாளர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். உறைய வைக்கும் குளிரில் இடம்பெற்ற ஓட்டப்போட்டியை கண்டு களிக்க, அவுஸ்திரேலியா, ஜப்பான், இந்தியா, தாய்வாய் ஆகிய இடங்களிலிருந்து பார்வையாளர்கள் வந்திருந்ததாக "சைபீரியா ரைம்ஸ்" பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. முதற் தடவையாக இந்தப் போட்டியை ஏற்பாடு செய்தவர்கள், வெளிநாடுகளிலிருந்தும் போட்டியாளர்கள், அடுத்த வருடம் வந்து கலந்து கொள்வதை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். இதில் கலந்து கொண்டவர்களில் வயதாளியானவரும்(71) அனுபவசாலியுமான யேகோர் பெர்மியாக்கொவ் என்பவர் ஒன்பதரை மைல் தூரத்தை இரண்டரை மணி நேரத்தில் ஓடி முடித்திருக்கிறார். இதற்கு நேர்மாறாக 21 வயதான ஒலெசோவ் 6.2மைல் (10 கி.மீ) தூரத்தை ஒரு மணி 8 நிமிடங்களில் ஓடிமுடித்து விட்டு, ஓடுவதை நிறுத்தியிருக்கிறார். இன்னொரு கிராமியத் தலைவரான பெஸ்டரெவ் என்பவர் 24 மைல் தூரத்தை 3 மணி 58 நிமிடங்களில் ஓடி முடித்துள்ளார்.

இதில் சோகம் என்னவென்றால், எவருமே ஒரு மரதனுக்குரிய 26.219 மைல் தூரத்தை ஓடி முடிக்கவில்லை என்பதுதான்!. போட்டிகள் ஆரம்பித்த போது குளிர் கொஞ்சம் குறைவாம். எவ்வளவு தெரியுமா? உறைநிலைக்கு கீழே 45 பாகை சென்டிகிரேட்!!!!!!

# சிறைப்பட்ட சிலந்தி மனிதன்....

ஹொலிவுட் ஸ்பைடர்மான் உங்களுக்குத் தெரியாதவரல்ல... ஆனால், அவரைப்போல பல சாகசங்கள் காட்டும் பிரெஞ்ச் நாட்டு நிஜ ஸ்பைடர்மானை உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? 56 வயதான இவர் பெயர் அலெயின் றொபேர்ட். உலக நாடுகளெங்கும் உள்ள பெரிய பெரிய கட்டடங்களில் சிலந்திபோல மேலேறிக் காண்பித்து, உலகப் புகழ் பெற்றுள்ளவர் இந்த மனிதர். இந்தத் தடவை 200 மீற்றர் உயரமான ஒரு கட்டடத்தை, மனிலா நகரில் வெற்றிகரமாக ஏறிமுடித்து, கீழே இறங்கியவரை பொலிஸார் கைது செய்திருக்கிறார்கள். எந்த விதமான பாதுகாப்பு ஏற்பாடுகளும் இல்லாமல் இந்த 47 மாடிக் கட்டடத்தை ஏறியிருக்கிறார்.



அதாவது ஆபத்துதவியாக தன்னை எந்தக் கயிற்றிலும் பிணைத்துக் கொள்ளாமல், வெறும் கைகளால் கண்ணாடிச் சுவரின் மேலேறி, கீழிறங்குவது என்பது கிலியூட்டுவது மாத்திரமல்ல, மனித சக்திக்கு அப்பாற்பட்டது. பிலிப்பைன்ஸ் நாட்டின் ஒன்பதாவது அதிஉயர்ந்த இந்தக் கட்டடத்தில் இவர் ஏறியபோது அதிகாரிகள் உட்பட 200 பேர் வரையில் கீழே நின்று இவர் சாகசத்தை பார்த்திருக்கிறார்கள். பலர் வீடியோ படம் எடுத்திருக்கிறார்கள்.

கறுத்த ஷேர்ட், மஞ்சள் காற்சட்டை, தலையில் பொருத்தப்பட்ட கமரா- இப்படி ஒரு கோலத்தில் கட்டடத்தின் கண்ணாடிச் சுவரில் இலாவகமாக ஏறி, பின்பு ஏறிய வழியிலேயே இறங்கி வந்த இவரை, மக்களிடையே பீதியை உண்டாக்கினார் என்ற குற்றச்சாட்டில், கைது செய்துள்ளார்கள். காலை 10 மணியளவில் மேலே ஏற ஆரம்பித்தவர், மதியம் கீழிறங்கியபோது, தயாராகக் காத்திருந்த பொலிஸ் அதிகாரிகள் இவரைக் கைது செய்திருக்கிறார்கள். வானுயர்ந்த கட்டடங்களின் உச்சிக்கு ஏறுவது என்பது இவருக்கு அல்வா சாப்பிடுவதைப் போன்றது என்கிறார்கள்.

அதிலும் வாகன நெரிசல் தெருக்களை நிறைக்கும் நேரங்களில்தான் இவர் தன் சாகசத்தை ஆரம்பிப்பது வழமை. துபாய் நகரின் 328 மீற்றர் உயரமான புர்ஜ் கலீபா கட்டடம், ஈபெல் கோபுரம்- இவர் கால்கள் பதிந்த சில கட்டடங்கள்.!

மேலேறியவருக்கு இறங்குமுகமா?

# விறைத்த மனிதர்கள் இவர்கள்..... கர்ஜனை நடுவே தூங்குவதா?

உங்களில் எத்தனை பேருக்கு, ஒரு மீற்றர் தூரத்தில் சிங்கங்களை சுதந்திரமாக உலாவவிட்டு (நாலாபக்கமும் அடைக்கப்பட்ட இடத்தில்தான்), நிம்மதியாகக் குறட்டைவிட்டுத் தூங்க முடியும்?

முடியுமென்கிறார் சுஸான் ஸ்கொட் என்ற 50 வயதுப் பெண்மணி.

இவர் தங்கியிருக்கும் வீட்டின் முற்புறத்தில் இறைச்சியை நெருப்பில் வாட்டிச் சாப்பிடும்போது சிங்கங்கள் இந்த மாமிச வாடையில் பலமாகக் கர்ஜிப்பதைக் கேட்க முடியும் என்கிறார் இவர். இவர் தங்கியுள்ள இருப்பிடத்தின் தடுப்பு வேலியருகே ஒரு மீற்றர் தூரத்தில் உள்ள இன்னொரு தடுப்பு வேலிக்குள் 77 சிங்கங்கள் இருக்கின்றன. தென் ஆபிரிக்க வன விலங்கு பாதுகாப்பு அமைப்பு, மூன்று படுக்கையறைகள் கொண்ட இந்த இருப்பிடத்தை ஓர் இரவுக்கு சுமாராக 7000 ரூபாய் என்ற கணக்கில் வாடகைக்கு விடுகின்றது. நீங்களும் இங்கு தங்க முடியும். சுதந்திரமாக சிங்கங்கள் எப்படிச் செயற்படுகின்றன என்பதை இந்த வேலியூடாகப் பார்க்க முடியும். மேலதிக பாதுகாப்பாக சிங்கங்களின் அடைப்பில், மின்சார வேலிகளும் எழுப்பப்பட்டுள்ளன. இந்தச் சிங்கங்களின் கர்ஜனை பற்றிச் சில வரிகள் தரவேண்டும். பூனைக் குடும்பத்தில் மிகப் பலத்த ஒலிக்குச் சொந்தக்காரர் சிங்கந்தான். நன்கு வளர்ந்த ஒரு சிங்கத்தின் கர்ஜனை எட்டு மீட்டர் (5 மைல்) தூரத்திற்குக் கேட்கும்.



சிங்கங்கள் ஏனைய சிங்கங்களைத் தாக்க முற்படலாம் என்பதற்காகவே, மின்சார வேலிகளை எழுப்பியிருப்பதாக சொல்லப்படுகின்றது.

சிங்கங்களை விட நீக்கோழிகள், வரிக்குதிரைகள், வெவ்வேறு இனத்திலான பெரிய காட்டு மான்கள், இன்னொரு பக்கத்தில் உலா வருகின்றன. 50 வருடங்களில் அரை மில்லியனாக இருந்த சிங்கங்களின் தொகை, இன்று 20,000 ஆகக் குறைந்துள்ள நிலையில், இப்படியான பாதுகாப்பு நிலையங்கள் இவற்றை அழிவிலிருந்து மீட்கும் என்று கருதப்படுகின்றது. உங்களுக்கும் தில் இருந்தால் சில இரவுகள் இங்கே தங்கலாம். தூங்க முயற்சிக்கலாம்...

# 28வது ஆண்டு மலர் வெளியீடு

# 28வது ஆண்டு விருது விழா











கனடாவின் மூத்த தமிழ் இதழான தமிழர் தகவலின் 28வது ஆண்டு மலர் 'இளமுகிழ்ச் சுவடு' வெளியீடும், 28வது ஆண்டு 'தமிழர் தகவல்' விருது விழாவும் ரொறன்ரோ நகரசபை அங்கத்தவர் சபா பீடத்தில் பெப்ரவரி 24ஆம் திகதி சிறப்பாக நடைபெற்றது. இலங்கையின் அதிமூத்த ஊடகவியலாளர்களில் ஒருவரும் ஐம்பதாண்டுகளுக்கு மேலாக ஊடகப்பணியாற்றி வருபவருமான திரு எஸ். திருச்செல்வம் இதன் முதன்மை ஆசிரியர். கலைஞரும் ஒலிபரப்பாளருமான திரு. கந்தசாமி கங்காதரன் விழாவைத் தொடக்கி வைத்து உரையாற்றினார். செல்வி. ஐஸ்வரியா சந்துருவின் தமிழ் வாழ்த்தையடுத்து சிவசிறி ஜெயகாந்தக் குருக்கள் ஆசியுரை வழங்கினார். தமிழர் தகவலின் உதவி ஆசிரியர்களில் ஒருவரான திரு. குயின்ரஸ் துரைசிங்கம் தலைமையில் இளமுகிழ்ச் சுவடு வெளியீடு இடம் பெற்றது. ஒன்ராறியோ சட்டசபை உறுப்பினர்கள் லோகன் கணபதி, விஜே தணிகாசலம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மூத்த ஒலிபரப்பாளர் பி. விக்னேஸ்வரன் வெளியீட்டுரை நிகழ்த்தினார். உலகிலேயே தமிழில் வெளிவரும் ஒரேயொரு தகவல் இதழ் தமிழர் தகவல் என்றும் இதன் ஆண்டு மலர்கள் வரலாற்று ஆவணங்களாகத் திகழ்கின்றன என்றும் திரு. விக்னேஸ்வரன் தமது உரையில் தெரிவித்தார். ஆண்டு மலரின் முதற் பிரதிகள் இதில் கட்டுரை எழுதிய 62 பேரில் வயதில் மிக இளையவர்களான மார்க் கெவின் தெய்வேந்திரம், அக்சயன் ஜெயபாலசிங்கம் ஆகியோருக்கு தகவலின் உதவி ஆசிரியர் சசிகரன் பத்மநாதனால் வழங்கப்பட்டது. திரு. நீதன் சண் தலைமையில் விருது விழா இடம்பெற்றது. ஒன்ராறியோ சட்டசபை உறுப்பினர் சூஸ் மொரிசன் பிரதம விருந்தினராகப் பங்குபற்றி உரையாற்றினார். பின்வரும் எட்டுச் சாதனையாளர்கள் விழாவில் 'தமிழர் தகவல்' விருதுடன் தங்கப்பதக்கம் சூட்டி மதிப்பளிக்கப்பட்டனர். பேராசிரியர் கலாநிதி சு. பசுபதி (வாழ்நாள் சாதனையாளர் விருது), சட்டத்தரணி நாதன் சிறீதரன் (பன்முகப் பணிக்கான சிறப்பு விருது), திரு. எஸ். பி. கனகசபாபதி (முன்னணிச் சமூகப் பணியாளர் விருது), கவிஞர் அ, புகாரி (இலக்கிய விருது), திரு. குமார் புனிதவேல் (சமூக நல்வாழ்வு மேம்பாட்டாளர் விருது), திருமதி. லசந்தி ராஜ்குமார் (நுண்கலை வித்தகர் விருது), திரு. சி. சிறீமுருகன் (கனடிய தமிழ் திரைக்கலை முன்னோடி விருது), செல்வி. ஸ்ருதி பாலமுரளி (இளம் சாதனையாளர் விருது). பேராசிரியர் சந்திரகாந்தன், சட்டத்தரணி யசோ சின்னத்துரை, செல்வி அனோஜினி குமாரதாசன், சங்கீத் குயின்ரஸ், வதனன் ஜெகதீசன், வினிசா அருளானந்தம் ஆகியோர் விருதாளர்களை அறிமுகம் செய்து உரையாற்றினர். விருது பெற்றவர்கள் சார்பில் பேராசிரியர் திரு. பசுபதியும், திரு. எஸ். பி. கனகசபாபதியும் முறையே ஆங்கிலத்திலும் தமிழிலும் நன்றியுரை நிகழ்த்தினர். செல்வி ஸ்ருதி பாலமுரளி புல்லாங்குழல் இசை வழியாக கனடிய தேசிய கீதம் இசைத்தார். அன்றைய தினம் கடும்குளிரான காலநிலையிருந்தபோதிலும் மண்டபம் வருகை தந்தவர்களால் நிரம்பியிருந்தது. கனடாவில் தமிழர் சமூகத்தில் முதன்முறையாக (1992) விருது வழங்குவதை ஆரம்பித்து வைத்த பெருமை தமிழர் தகவலுக்குரியது. கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி, ஆஸ்திரேலியா, பப்புவா நியுகினியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 263 சாதனையாளர்கள் இதுவரை 'தமிழர் தகவல்' விருதுகளைப் பெற்றது குறிப்பிடப்பட வேண்டியது.




















"Ammanai Saran Addainthal Athika Varamperalam"

# SHRI KANAGATHURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

5, CHAPEL ROAD, LONDON, W13 9AE. TEL: 0208-810 0835
Founded on 10-08-1991| Charity No:1014409 0208-840 0485
www.ammanealing.org | E.mail:info@ammanealing.org






**எமது ஆலயத்தில் கீழ்வரும் பணிநிலைகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன. தங்கள் பற்றிய முழு விபரங்களுடன் மேல் உள்ள மின்அஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். (REF: SKTAT 2/18)**

## பணிநிலை: 1

**மகோற்சவ சிவாச்சாரியார்**
**Hindu religious workers with non-pastoral role**

**தகமைகள்:** ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் மகோற்சவ பூசைகள் செய்தல்

**வேதனம்:** பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது. விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகமைகளை கவனத்தில் கொண்டு நிர்ணயம் செய்வதுடன் அடியார்கள் வழங்கும் தட்சணை பங்கிட்டு வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி:** 30.04.2019

## பணிநிலை: 2

**ஆலய சிவாச்சாரியார்**
**Hindu religious workers with non-pastoral role**

**தகமைகள்:** விண்ணப்பதாரி குருக்கள் பட்டம் பெற்றிருக்க வேண்டும். தமது பணிக்காலங்களில் சிவாச்சாரியாராகப் பணியாற்றியிருக்க வேண்டும். இறுதி 5 வருடங்கள் ஆலயக் குருக்களாகப் பணி செய்திருக்க வேண்டும்.

**கடமைகள்:** ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் பூசைகள் செய்தல்

**வேதனம்:** பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது. விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகமைகளை கவனத்தில் கொண்டு நிர்ணயம் செய்வதுடன் அடியார்கள் வழங்கும் தட்சணை பங்கிட்டு வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி:** 30.04.2019

## பணிநிலை: 3

**நாதஸ்வர, தவில் கலைஞர்கள்**
**Hindu religious (Musicians) Workers**

**தகமைகள்:** நாதஸ்வர, தவில் மேதைகளுக்கான சான்றிதழ்களைக் கொண்டிருப்பதுடன் தமது பிராய காலத்திலிருந்து இப்பணியைச் செய்து கொண்டிருப்பவராக இருக்க வேண்டும்.

**கடமைகள்:** ஆலய பூசைக்காலங்களில் மங்கள இசை இசைத்தல்.

**வேதனம்:** பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது.

**விண்ணப்ப முடிவு திகதி:** 30.04.2019

# சர்வதேச தர ஆயுர்வேத அனுமதி பெற்ற தாய் மண்ணின் உற்பத்திகள்

LOTUS TODAY

வழங்கும்

## தினமும் சுகம் தரும் சூடான தேநீர்

### சர்க்கரை தொல்லையில் இருந்து விடுதலை

சிறு குறிஞ்சா
(Gymnema Sylvestra)



நாவல்
(Jamun Coffee)



பாகற்காய்
(Bitter Gaurd)



மாவிலை கொழுந்து
(Mango Leaf)



### அழுத்தம் சமநிலை பெற

செவ்வரத்தம் பூ
(Hibiscus)



### நல்ல நித்திரை மனம் உடல் அமைதி

துளசி
(Tulsi/Holy Basil)



### உடல் மெலிவதற்கு

கொரக்கா புளி / குடம் புளி
(Garcinia Cambogia)



### கொழுப்பு கரைய

ஆவாரம்பூ
(Cassia Senna Leaf)



கொய்யா கொழுந்து
(Guava Leaf)



### சக்தி வீரியம்

முருங்கை (Moringa)



நாவல் (Jamun Coffee)



**இயற்கை எமது நண்பன் - முன்னோர் நமது வழிகாட்டிகள்**

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
உங்கள் வீடுகளுக்கான டெலிவரியும் செய்து தரப்படும்

lotustoday.com, lotustoday.co.uk
hello@lotustoday.com
+442081337020, +447889665195, +447949173794

AYURVEDA CERTIFIED